# ஆதித்த வம்ச வரலாறு



டாக்டர் ஆ. தசரதன்

தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்

75926.N
N97.
214 087

848/97

# ஆதித்த வமிச வரலாறு

(கி.பி. 1001 முதல் கி.பி. 2000 வரை)

தமிழ்நாடு அரசு.
ஆவண காப்பக நூலகத்திற்கு
அன்புடன்
18/8/97

பதிப்பாசிரியர்

**டாக்டர் ஆ. தசரதன்**

**தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்**

4/130ஏ, களத்துமேட்டுத் தெரு,

கொட்டிவாக்கம், சென்னை - 600 041.

| | | |
|---|---|---|
| Title | : | **Aditya Vamsa Varalaru**<br>(A History of Aditya Clan from<br>11th A.D. to 20th Century A.D.) |
| Editor | : | **Dr.A. THASARATHAN** M.A., Ph.D., Dip.in Ling. |
| Copyright | : | Centre for Tamil Palm-Leaf Manuscripts. |
| First Edition | : | August 1997 |
| Price | : | Rs.45.00 |
| Pages | : | 136 |
| Publication No | : | 13 |
| Size | : | Demy 1/8 |
| Copies can be had from | : | Centre for Tamil Palm-leaf Manuscripts.<br>4/13A, Kalathu Medu Street, Kottivakkam,<br>Chennai - 600 041. |

தமிழர் தந்தை

ஐயா அமரர் சி.பா. ஆதித்தனார்

அவர்களுக்கு

இந்த நூல் புகழ் அஞ்சலி

# பொருளடக்கம்


பதிப்புரை : i - xxxii

தா. மாசில்லாமணி நாடனின்
பாண்டிய தேச ஆதித்த வம்ச வரலாறு : 1 - 64

இணைப்பு : 65 - 104

# பதிப்புரை

## காயாமொழி ஆதித்த வமிசத்தினர்

தென்பாண்டி நாட்டில் திருச்செந்தூர்க்கு அருகிலுள்ள காயாமொழியில் ஆதித்த வமிசத்தினர் ஏறத்தாழ 150 குடும்பத்தினர் தொன்றுதொட்டே வாழ்ந்துவருகின்றனர். அவர்களுக்கு 'ஆதித்தன்' எனும் பட்டப்பெயர் இயற் பெயருக்குப் பின் வழங்குகின்றது. பட்டப் பெயருடன் 'நாடான்' எனும் இனப்பெயரையும் சிலர் சேர்த்துக் கொள்கின்றனர். அவர்கள் எல்லோரும் ஒரே பங்காளிகள் அல்லது சொக்காரர்கள் ஆவர்.

ஆதித்த வமிசத்தினர் 'அரசமரபினர்' எனும் நிலைமை தொன்றுதொட்டே இருந்துவருகின்றது. அதன் காரணமாகவே அனைத்து மக்களும் ஆதித்த நாடார்களை உயர்ந்தவர் களாகவே கருதி வருகின்றனர். ஆட்சித்தொடர்பு இருந்ததன் காரணமாகவே ஆதித்த வமிசத்தினர் மணவுறவுகளைத் தம்போல் அரசமரபினர்களான நிலமைக்கார நாடார்களிடமே வைத்துக்கொண்டனர்.

ஆதித்த வமிசத்தினரின் வரலாற்றை எழுத முனைந்த சில ஆசிரியர்கள் கி.பி. 16ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே அதைத் தொடங்கி யுள்ளனர். ஆதித்தர்கள் வேறு எங்கிருந்தோ தற்போதைய இடத்திற்கு வந்தனர் என்றும், அவ்வாறு வந்த காலம் கி.பி. 1600 இலிருந்து தொடங்குகிறது என்றும் நம்பப்படுவதால், அவர்கள் வரலாறும் கி.பி. 1600 -லிருந்துதான் இதுவரை அறியப்பட்டுள்ளது. ஆயினும், அதற்குமுன்பு அவர்கள் எங்கிருந்தனர்? எந்நிலையிலி ருந்தனர்? எனும் வினாக்களுக்கு விடையாகச் சில சான்றுகள் தற்போது கிடைத்துள்ளன.

### சேர, சோழ, பாண்டிய நாட்டு ஆதித்த வமிசத்தினர்

'ஆதித்தன்' எனும் பட்டப் பெயர் சூரியகுல சோழர்களுக்குரியது. பிற்காலச் சோழ மன்னர்கள் சிலர் இப்பெயரைக் கொண்டிருந்தனர். அவர்களுடைய நெருங்கிய உறவினர்களும் இப்பெயரை வைத்திருந்தனர். கி.பி. 10 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சேர நாட்டு அரசியலிலும் ஆதித்தர்களின் பெயர்கள் இடம்பெற்றன. கி.பி. 15ஆம் நூற்றாண்டில், சேர அரசர்களுக்குச் சொந்தமாக இருந்த தென்பாண்டி நாட்டு மான வீர வளநாட்டுப் பகுதிகளிலும் ஆதித்தர்களின் பெயர்கள் இடம்பெற்றன. இதனால் ஆதித்தர்கள் சோழநாடு, சேர நாடு, பாண்டிய நாடு எனும் மூன்று நாடுகளிலும் தொடர்பு கொண்டவர்களாகத் தோன்றுகின்றனர். கி.பி. 11 முதல் கி.பி. 15 ஆம் நூற்றாண்டுவரை அவர்கள் சேரநாட்டில் வாழ்ந்தனர். கி.பி. 16 முதல் தென் பாண்டி நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். சான்றோர் சமூகம் வாழுமிடங்களில் பல கிராமங்களில் ஆதித்தன் என்ற பெயர்களைக் காணமுடிகிறது. இடையங்குளம் என்ற ஊரிலும் காயாமொழி நாடார்கள் உள்ளனர். அவர்களிடம் அதற்கான கல்வெட்டும் செப்புப் பட்டயமும் உள்ளன. ஆயினும் இந்த நூல் முழுமையாகக் காயாமொழி ஆதித்த நாடார்களைப் பற்றி மட்டுமே ஆராய்கிறது.

### ஆதித்தர்கள் காயங்குளத்தினரா?

கி.பி.18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குற்றாலக்குறவஞ்சி எனும் நூலில், 'காயங்குளத்தார்' என்ற குறிப்பு வந்துள்ளது. அது வருமாறு.

சிங்கன் : மார்பிற்கு மேலே புடைத்த சிலந்தியில்
கொப்புளங் கொள்வானேன் சிங்கி!

சிங்கி : பாருக்குள்ளேற்றமாங் காயங்குளத்தார் தந்த
பாரமுத்தாரமடா சிங்கா!

சிங்கன் : எட்டுப் பரவை குமுறுங்கழுத்திலே
பத்தெட்டுப் பாம்பேதடி சிங்கி!

சிங்கி : குட்டத்து நாட்டாரும் காயங்குளத்தாரும்
இட்ட சவளியடா சிங்கா!

இதில் குறிப்பிடப்பெறும் 'காயங்குளத்தார்' என்பது காயாமொழியினரான ஆதித்தர்களைக் குறிக்கிறது எனப் பலரும் கூறுகின்றனர். இப்பாடலில், மேலும், பாண்டியனைப் பற்றியும் சோழனைப் பற்றியும் கொல்லம் என்ற ஊர் பற்றியும் குறிப்பிடப் பெறுகின்றது. இப்பாடல் பாடப்பெற்ற காலத்திற்கு முன்பே ஆதித்த வமிசத்தினர் காயாமொழியில் குடியேறி, ''காயாமொழி ஆதித்தர்கள்' என அழைக்கப்பட்டுவிட்டனர். அந்நிலையில் அவர்களைக் காயங்குளத்தார் எனக் குறிப்பிடுவது பொருந்தாது. இப்பாடலில் சோழன் பற்றியும் குறிப்பிடப்பெறுவதாலும், ஆதித்தர்களும் சோழவமிசத்தவர் என நம்பப் படுவதாலும் காயங்குளத்தார் என ஆதித்தர்களை இதுவரை குறிப்பிட்டு வந்தது தவறான அணுகுமுறை என்று திரு. நெல்லை நெடுமாறன் அவர்கள் தம் ஆய்வில் கருதுகின்றார்.

காயங்குளம் என்னும் கடற்கரைப் பட்டினம் சேர நாட்டைச் சார்ந்திருந்த ஓர் ஊர் ஆகும். 'காயங்குளம்' கொல்லம் நகருக்கும் கொச்சி நகருக்கும் இடையில் உள்ளது. கடல்நீர் உட்புகுந்து காயலை ஏற்படுத்தியிருப்பதால் காயல்குளம் என்பது காயங்குளம் என ஆயிற்று. காயங்குளத்திலிருந்து இங்கு வந்து தங்கியதால் அதற்குக் 'காயாமொழி' எனப் பெயர் ஏற்பட்டது எனக் கூறுகின்றனர்.

காயாமொழி ஆதித்த வமிசத்தினரில் சிலர் தங்கள் முன்னோர் காயங்குளத்திலிருந்து கடல்மார்க்கமாகவோ தரைமார்க்கமாகவோ காயாமொழிக்கு வந்ததாக நம்பு கின்றனர். எனவே அவர்கள் மத்தியிலும் பிறபகுதி மக்களிட மும் சில கதைகள் வழங்குகின்றன.

காயங்குளத்திலிருந்து தரைமார்க்கமாக, சேவகர்கள் பின்தொடர குதிரைகளில் வந்த ஆதித்தர்களின் முன்பாக ஒரு பசு வழிகாட்டியதாகவும், மானாட்டுப் பகுதிக்கு வந்ததும் அப்பசு மறைந்துவிட்டது என்றும், அதனால் தாங்கள் தங்கவேண்டிய இடம் அதுவே என முடிவு செய்து அங்குத் தங்கினர் என்றும் நம்பப்படுகிறது.

மற்றொரு கதையானது, ஆதித்தர்கள் காயங்குளத்திலிருந்து கடல்மார்க்கமாக வந்து, முதலில் திருச்செந்தூர்க்கருகில்

கடற்கரையோரமாகத் தங்கினர் என்றும், பிறகு காயா மொழிக்குக் குடிபெயர்ந்தனர் என்றும் வழங்குகின்றது. கடலருகே இப்போதும் ஆதித்தர்களுக்கு நிலங்களிருப்பதும், சில கண்டுபிடிக்கப்படாத கல்வெட்டுகள் அங்கு இருப்பதாகக் கூறப்படுவதும் இதற்குச் சான்றுகளாகக் காட்டப்படுகின்றன.

### திருச்செந்தூர்க்கருகில் ஆதித்தர்கள்

திருச்செந்தூர்க்கருகில் முதலில் ஆதித்தர்கள் தங்கியதன் காரணமாக அவர்களுக்குச் செந்திலாண்டவன் பேரில் அளவற்ற பக்தி ஏற்பட்டது என்றும், அதன் காரணமாக அளவற்ற பொருள்களையும், அழகான தேரையும், அதிகக் கட்டடங்களையும் கோயிலுக்கு நல்கினர் என்றும் மக்கள் மத்தியில் நிலைத்துள்ளது. அதன் காரணமாகவே,

> ''அட்டதிசை புகழ் ஆதித்த நாடார்
> கொட்டகையும் தேரையும் பாராய்''

எனத் திருச்செந்தூர்ப்பிரபந்தம் பாடும் அளவிற்கும்,

> ''ஆர்வந்தால் தேர் ஓடும்
> ஆதித்த நாடன் வந்தால் தேரோடும்''

எனும் பழமொழி வழங்குமளவிற்கும்' ஆதித்தர்கள் திருச்செந்தூர்க் கோயிலுடன் தொடர்பு வைத்துக்கொண்டுள்ளனர் என்ற உண்மையினை அறியலாம்.*

மேலும், திருநெல்வேலியை ஆண்ட வீரபாண்டியன் என்பவன், குதிரைமுகங் கொண்டு பிறந்த தன் மகளைத் திருச்செந்தூர் கோயிலுள்ள ஒரு தீர்த்தத்தில் நீராடச் செய்தபோது, அவளுக்கு அம்முகம் மாறி அழகான முகம் ஏற்பட்டதாகவும், அக்காலத்தில் அப்பகுதியில் அதிகார மேற்றிருந்த ஆதித்தனுக்கு அப்பெண்ணை மணமுடித்து வைத்து, வீரபாண்டியன் பட்டினமொன்றையும் ஏற்படுத்தி அவளுக்குச் சீதனமாக நல்கினான் என்றும் கூறப்படுகிறது.

---

* திரு. நெல்லை நெடுமாறன் ''தேர்தொடர்பினை'' ஆய்வு செய்து கட்டுரை வாசித்துள்ளார். தெட்சண மாறநாடார் சங்க மாநாட்டு மலரிலும் எழுதியுள்ளார் தென்காசி அரசன் பாண்டியன் அதிவீரராமன் எழுதிய கூர்மபுராணத்திலும் முத்துக்குட்டி சுவாமி அருளிய அகிலத்திரட்டு அம்மானையிலும் நாடார் சமூகமே தேரினைத் தொட்டுக்கொடுக்க வேண்டும் என்பதை மேற்கோள் காட்டியுள்ளார்.

இவற்றையன்றி, ஆதித்தர்கள் தொடர்பான சரித்திரச் சான்றுகளாகச் செப்புப் பட்டயங்கள், கல்வெட்டுகள், சாசனங்கள், வாய்மொழிக் கவிதைகள், ஓலைச்சுவடிகள் பல தற்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன.

## மானாட்டு மருதூரில் ஆதித்தர்கள்

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்றதாக அறிய வரும் வலங்கை மாலை எனும் நூலில், மானாட்டிலுள்ள மருதூர் மிகச்சிறப்பாகப் போற்றப்படுகிறது. இந்நூலைப் பாடியவர் மானாட்டுக் குடுவைக் கிணற்றைச் சேர்ந்த மகிபாலசுந்தரம் என்பார் ஆவர். அதில், மருதூரும், ஆங்கு எழுந்தருளியிருக்கும் சுந்தராச்சி அம்மனும் சிறப்பாகப் போற்றப்படுகின்றனர். இந்தக் கோயிலுக்கு ஆதித்தர்கள் மிகுந்த அளவில் கொடைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

மாமருதூர் தன்னில் வளர்ந்த சிவகாமி
பூமருவி வீற்றிருக்கும் புண்டரிகத் தாராளே
அந்தரத்தில் வேத னரியசிறை மீட்டவளே
இந்திர மெய்ஞ்ஞானி யிறைஞ்சுமடி யார்வினையை
பாவத்தை நீக்கிப் பரமகதி கொடுக்கும்
தேவப் படைச் சிவனுடனே யாடல்செய்த
மந்தார திரிவீரி வயிரவி வன்கோவி
சுந்தரி யென்சிந்தைச் சுடரொளியாய் நின்றவளே
தேனார் மொழியாளே சிவகாமி சுந்தரியே

எனும் இவ்வரிகளில் சுந்தராச்சி அம்மனைப்பற்றிய சிறப்பான வருணனை அமைந்துள்ளதைக் காணலாம்.

இக்கோயிலுக்கு ஆயிரம் ஆண்டுகள் வரலாறு உள்ளது. பாதி அளவு மண்ணுக்குள் புதைந்து விட்ட இதன் வெளிச் சுற்றுச் சுவர்களில் கல்வெட்டுகள் இருந்தன என்று அறியப்பட்டுள்ளது. ஆதித்தர்கள் இக்கோயிலுக்கு அளித்த நன்கொடைகள் இங்குள்ள தண்ணீர்த்தொட்டியிலும் பிற இடங்களிலும் கல்வெட்டாக உள்ளன.

மானாட்டில் உள்ள கலியுகவரதர் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. இக்கோயிலுக்கும் ஆதித்தர்கள் மிகுந்த நிவந்தங்களை ஏற்படுத்தியுள்ளனர். அவர்களின் கொடை

களைக் குறிப்பிடும் செப்புப்பட்டயமும் இன்றும் கலியுக வரதர் கோயிலுக்கு ஆண்டுதோறும் கொண்டுவரப்படுகிறது. இக்கோயிலிலுள்ள தேரையும் ஆதித்தர்களே முன்பு ஏற்படுத்திக் கொடுத்தனர் என்றும் அது இப்போது பராமரிப்பின்றிக் கிடப்பதையும் காணலாம்.

மாநாட்டுப் பகுதிகளிலும் காயாமொழி ஆதித்த நாடர்களுக்குக் கிராம நிலங்கள் இருந்து வந்தன என்பது ரெவின்யூ ஆவணங்களில் அறியக்கிடக்கின்றது. இவ்வாறு மருதூரும், சுந்தராச்சி அம்மன் கோயிலும், கலியுக வரதர் ஆலயமும் ஆதித்தர்களின் வரலாற்றுடன் தொடர்பு கொள்வதால், காயாமொழி ஆதித்தர்கள், சேர நாட்டிலிருந்து முதலில் வந்து தங்கிய இடம் மருதூராகவும் இருக்கலாம் என நம்பப்படுகிறது. ஆதித்தர்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட குழுவினர் இருந்தனர் என்றும், அவர்களில் ஒரு குழுவினர் தரைமார்க்கமாகச் சேர நாட்டிலிருந்து வந்து மருதூரில் தங்கினர் என்றும், மற்றொரு குழுவினர் திருச்செந்தூர்க்கு அருகில் தங்கினர் என்றும், பிறிதொரு சாரார் கடல்மார்க்கமாக உத்தரகோச மங்கை எனும் பதிக்குச் சென்றனர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

தற்காலத்தில் காயாமொழியில் மட்டுமே ஆதித்தர்கள் எனும் ஒருவீட்டுச் சொக்காரர்கள் வாழ்ந்து வருகின்றனர். அதைப் போன்றே, இராமநாதபுரம் அருகே காயாமொழியிலிருந்து சென்றவர் களின் சந்ததியார் உள்ளனர் என்று அறியக் கிடக்கின்றது. ஆயினும் காயாமொழி ஆதித்த வமிசத்தினர் பற்றியே அதிகாரபூர்வமான செய்திகள் கிடைத்து வருகின்றன.

## குதிரைமொழித்தேரி கல்வெட்டில் ஆதித்தன்

கி.பி. 1639-இல் திருச்செந்தூர் வட்டம் குதிரைமொழித் தேரியின் எல்லையிலமைந்துள்ள எள்ளுவிளைக்கருகில் உள்ள சாசனக்குத்துக் கல்லில் ஆதித்தநாடன் என்பவரும் ஏனைய ஒன்பது பேரும் மதுரை நாயக்கரிடம் உரிமை பெற்று, அப்பகுதிகளில் ஆட்சி அலுவல்களை நடத்தி வந்ததாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. ''நாடாதி நாடாக்கள்'' பற்றிய இக்கல்வெட்டில் ஆதித்த நாடன் முதலிடத்தில் குறிப்பிடப்படுகிறார்.

## வாய்மொழிப் பாடல்களில் ஆதித்தர் வரலாறு

ஆதித்தர்களின் வரலாற்றை அறிவதற்கு வாய்மொழிப் பாடல்களும் உதவுகின்றன. இதற்குச் சான்றுகள் வருமாறு;

சொக்கன் தலையிழந்தான்
சொகுசான தீத்தியப்பன் காதிழந்தான்
ஆதித்தன் அகத்தீசுரம் போயொழித்தான்
வீரப்பன் வெற்றி கொண்டான்

என்ற பாட்டில், சில பங்காளிகளுக்கிடையே நடந்த குடும்பச்சண்டை காரணமாக, ஆதித்தன் என்பவர் வீரப்ப நாடானால் விரட்டப்பட்டார் என்றும், அரசமரபினர் வாழ்ந்த அகத்தீஸ்வரத்தில் அவர் அடைக்கலமானார் என்றும் கூறப்படுகின்றது. இந்தச் சண்டைக்குரிய பின்னணியில், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் மானவீர வளநாட்டு (மானாட்டு) அரசியல் வ்ரலாறு ஓரளவு தெரியவருகின்றது. மானாட்டில், பஞ்சாதித்தன் என்பவர் பிறந்து அவர் தந்தை வெட்டுண்ட பிறகு, தாதியால் பஞ்சுப்பெட்டிக்குள் வைத்துக் காயா மொழிக்குக் கொண்டுவரப்பட்டு, தம் தாயார் வெள்ளை யம்மை ஆச்சியால் வளர்க்கப் பெற்றார் என்றும் ஒரு கதை வழங்குகின்றது. பஞ்சாதித்தனைக் குறிப்பிடும்போது 'மருதூர்' ஆதித்தன் என்றும் கூறுகின்றனர். பஞ்சாதித்தனின் சிறந்த குணங்களைச் சூரியனுடன் ஒப்பிட்டுப் பாடிய புலவன் ஒருவன்,

அந்த ஆதித்தனையும் ஆனமருதூர் வாழும்
இந்த ஆதித்தனையும் எண்ணுங்கால் — முந்தமுந்தக்
காய்வான் ஆதித்தன் அவன் சந்ததமும் கர்ணன்போல்
ஈய்வான் ஆதித்தன் இவன்

எனப் பாராட்டியிருப்பதைக் காணலாம்.

பஞ்சாதித்தனுக்குப்பின் காயாமொழி ஆதித்தர்களே சரித்திரத்தில் இடம்பெறுவதை அறியமுடிகின்றது.

## காயாமொழி

ஆதித்த வம்சத்தினர் வாழும் காயாமொழி எனும் ஊர் அண்மைக்காலம் வரை மிகப்பெரிய ஊராக இருந்ததற்கான

அடையாளங்கள் காணப்படுகின்றன. ஊரையடுத்துப் பல குடியிருப்புகளும், கோயில்களும் அழிந்தும் அழியாமலும் உள்ளன. பல குடியினர் குடிபெயர்ந்து சென்றதாகவும் அறியமுடிகின்றது. 'காயாமொழி' என்ற பெயர் 'காயங் குளம்' என்பதிலிருந்து வந்தபெயரன்று. குதிரைமொழி, கல்லாமொழி, இட்டமொழி, ஊரல்வாய் மொழி, நங்கை மொழி எனும் பெயருள்ள ஊர்களும் அடுத்தடுத்து இருப்பதால் 'காயாமொழி' என்ற ஊர் தொன்றுதொட்டே இருந்த ஊர் என அறியலாம்.

### குட்டம் மார்த்தாண்டர்களும் காயாமொழி ஆதித்தர்களும்

குட்டம் மார்த்தாண்டர்களும், காயாமொழி ஆதித்தர் களும் வீரம், பழக்கவழக்கம், மணவுறவு, வரலாறு என்பவற்றால் மிக நெருக்கமானவர்கள். போர்க்கால நேரங்களில் காயாமொழி ஆதித்தர்களுக்குக் குட்டம் மார்த்தாண்டர் விரைவாக வந்து உதவி செய்வர். அதனால் ஏற்பட்ட பாட்டொன்று பின்வருமாறு ஆதித்தர்களால் பாடப்பெற்றுள்ளது.

குட்டத்து மார்த்தாண்டன் நமது நண்பன்
கொடும்புலிபோல் பகைவர் மீதுபாய்ந்து மீள்வான்
வெட்டரிவாள் குத்தீட்டி வேல்கம்பு பலவும்
விரைவுடனே கொண்டுவர விழைந்திட்டோமே

குட்டத்து மார்த்தாண்டர்களும் காயாமொழி ஆதித்தர் களும் சேரநாட்டில் அடுத்தடுத்த பகுதிகளிலிருந்து தென்பாண்டி நாட்டின் தென்கீழ்ப் பகுதியில் ஒரேகால கட்டத்தில் குடியேறியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

### சேரநாடும் தென்பாண்டி நாடும்

மூவேந்தர்கள் காலத்திலிருந்தே தென்பாண்டி நாடு இலக்கிய, வரலாற்று முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. கிழக்கே கொற்கையை உள்ளடக்கியும் மேற்கே செங் கோட்டை வரையிலும், தெற்கே ஆரல்வாய் மொழி வரையிலும், பரவியுள்ள இந்த வள நாட்டில் பிற்காலச் சோழர்கள் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் தங்கள் நிலைப்படைகளை நிறுத்தி, ஆங்காங்கே சிறு சிறு

நாடுகளாக்கி, சோழ அரசின் பிரதிநிதிகளாகத் தம் உறவினர் களை நியமித்தனர். பாண்டியர்கள் மதுரையை விட்ட பின்னர், தென்பாண்டி நாட்டில் தென்காசி, கருவை, கயத்தாறு, நெல்லை, கொற்கை, வள்ளியூர் எனும் நகரங்களிலிருந்து ஆட்சி செலுத்தினர். பிற்காலச் சோழர்கள் பலம் குன்றியபோது மீண்டும் எழுச்சிபெற்ற பாண்டியர்களின் காலத்தில் இலங்கையிலிருந்த சில ஈழத்துச்சான்றோர் தென்பாண்டி நாட்டின் மானவீர வளநாட்டில் குடியேறினர். சிலகாலம் ஏற்பட்ட இசுலாமியரின் ஆட்சியால் பாண்டியரும், சோழரும் வீழ்ச்சியுறவே, சேரர்கள் தென்பாண்டி நாட்டின் சில பகுதிகளை வென்று தம் ஆட்சியை ஆங்கு நிலைநாட்டினர். கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இவ்வாறு நிலைநாட்டப் பெற்ற பகுதிகளில் அதுவரை சேரநாட்டிலிருந்து வந்த மார்த்தாண்டர்களும் ஆதித்தர்களும் தென்பாண்டி நாட்டிற்குக் குடியேறினர். திருச்செந்தூர்ப் பகுதியில் ஆதித்தர்கள் தங்கிய இடம் 'குடநாட்டு திருச்செந்தூர்' என அழைக்கப்பட்டது. குட நாட்டுத் திருச்செந்தூர் திரிபுவன மகாதேவி சதுர்வேதமங்கலம்' என்ற பெயர் மானவீர வளநாட்டின் வடபத்துக்கு வழங்கப்பட்டது என்று, குட்டம் என்பது 'வீரவளநாடு' என்றும் வழங்கப்பட்டது என்று சரித்திரச் சான்றுகளிலிருந்து தெரியவருகின்றது.

குட்ட நாடும், குடமலை நாடும்

கொடுந்தமிழ் வழங்கும் நாடுகளாகப் பன்னிரு நாடுகளைப் பதினோராம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கண நூலான நன்னூல் குறிப்பிடுகின்றது. அவையாவன:

தென்பாண்டி குட்டம் குடம் கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன் வடக்கு - நன்றாய
சீதம் மலா நாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்

இப்பாடலிலிருந்து, தென்பாண்டி நாட்டுக்குத் தெற்கிலும், மேற்கிலுமுள்ள வேணாடு, வேணாட்டுக்கு வடக்கிலுள்ள குட்ட நாடு, குடநாடு, அதனருகிலுள்ள கற்கா நாடு, மலைநாடு, புனல்நாடு, அதற்கும் வடக்கேயுள்ள பூழி நாடு எனும் ஏழு நாடுகளும் முன்பு சேர நாட்டின் கீழிருந்து கி.பி. 9 ஆம்

நூற்றாண்டிற்குப் பின்பு சிறு சிறு நிலப் பகுதிகளாகச் சிதறின. கொடுந்தமிழ் வழங்கும் நிலங்களாக இவை இருந்ததால், தமிழ் அரசர்களின் பிரதிநிதிகள் ஆங்கு ஆட்சி செலுத்தினர்.

குட்டநாடு என்பது தன் பெயருக்கேற்றபடி, சிறு நாடாக இருந்தது. வேணாட்டிலிருந்தும், குடநாட்டிலிருந்தும், குட்ட நாட்டிலிருந்தும், மலை நாட்டிலிருந்தும் தென்பாண்டி நாட்டுக்குள் நுழைய மேற்குத் தொடர்ச்சி மலையில் பல கணவாய்கள் உள்ளன. இக்கணவாய்களில், அச்சன்கோயில் கணவாய், ஆரியங்காவுக்கணவாய், திருக்குறுங்குடிக் கணவாய், நெடுமங்காடு கணவாய், ஆரல்வாய் மொழிக் கணவாய் என்பன குறிப்பிடத் தக்கன. இவைமூலம் சேரநாட்டிலிருந்து தென்பாண்டி நாட்டுக்கு வந்துபோக வசதியாக இருந்தது. சேர நாட்டு அரசர்கள் பலமுறை இக் கணவாய்களுக்கருகிலுள்ள பகுதிகளைத் தம்வசப்படுத்தி ஆண்டிருக்கின்றனர். சேரன் மகாதேவி, வள்ளியூர், திருக்குறுங்குடி, செங்கோட்டை எனும் பகுதிகள் சேரர்களின் ஆட்சிக்குள் இருந்தன.

சிறைவாய்மன் ஆதித்தன்: ஆதித்தவர்மன், அவன் தம்பியாகிய ஆதித்த ராமவர்மன், சிறைவாய்மன் ஆதித்தன், வஞ்சி ஆதித்தன் விக்கிரம ஆதித்தன் போன்ற பல பெயர்கள் மேற்குறித்த பகுதிகளிலும், திருச்செந்தூர்ப் பகுதிகளிலும் வழங்கப்பட்டுள்ளன. ஆதித்தவர்மனின் தம்பியாகிய ஆதித்த ராமவர்மன் திருக்குறுங்குடி யிலுறை அழகிய நம்பி எழுந்தருள கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் பீடமொன்று அமைத்துக் கொடுத்துள்ளான். சிறைவாய்மன் ஆதித்தன் என்பவன் கி.பி. 1469 இல் திருக்குறுங்குடியில் பெரிய காண்டாமணி செய்து ஒரு செய்யுளையும் அதில் பொறித்து வைத்துள்ளான். அப்பாடல் வருமாறு:

''செயதுங்க நாட்டுச்சிறைவாய்மன் னாதித்தன் தென்வஞ்சியான்
வியலொன்றகில கலையாளன் கன்னி விசாகம் வந்தோன்
நயமொன்று கொல்லமறுநூற்று நாற்பத்து நாலினண்பால்
அயனும் பணிய மணியளித் தானம்பிக் கன்புகொண்டே''

சிறைவாய்மன் ஆத்த்தன் என்பவன், தன்னுடனிருந்த சிலரைத் திருச்செந்தூர்க்கருகே குடியமர்த்திவிட்டுச் சேரநாடு

செல்லுங்கால் திருக்குறுங் குடியில் இச் செய்யுளைப் பொறித்து வைத்தான் எனத் தெரிகிறது. திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்குச் செல்லும்வழியில் இவனுடைய நாட்டின் பெயரில் 'செயதுங்க நல்லூர்' என்ற ஊர் இருப்பதும், அதற்குக் கிழக்கே ஆதித்த நல்லூர் என்ற ஊர் இருப்பதும் இதற்குச் சான்றுகளாகும். ஆதித்த நல்லூரில் ஆதித்தர்கள் வாழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

சிறைவாய் என்பது 'சிறையின்கீழ்' எனப்படுவது ஆகும். இங்கு ஓர் அரண்மனை இருந்தது. அது ஆற்றிங்கல் எனப்படும் ஊருக்கருகிலுள்ளது. ஆற்றின் கல்லிலும் சோழன் ஒருவன் கட்டிய அரண்மனை ஒன்றுள்ளது. ஆற்றின் கல்லிலிருந்தும், சிறையின் கீழிலிருந்தும் ஆதித்த சோழர்கள் ஆண்டு வந்துள்ளனர். அவர்களுக்கும் கீழப்பேரூர் திருப்பாப்பு நாடாழ்வார்கள் எனும் மார்த்தாண்டர்களுக்கும் உறவு இருந்தது. இவ்விரு சாராரே பிற்காலத்தில் திருச்செந்தூர்ப் பகுதியில் குடியேறினர் என்று அறியப் படுகிறது. சிறையின்கீழ் அரண்மனையில் தீவைப்பு ஒன்று நடந்ததாகவும் அதில் சிறைவாய்மன் ஆதித்தனின் சந்ததியினர் தப்பி இறுதியில் தென்பாண்டி நாட்டில் குடியேறினர் என்றும் ஒரு செய்தி நிலவுகிறது.

**வஞ்சி ஆதித்தன்:** குடநாடு, குட்டநாடு என்பன மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே, வேணாட்டுக்கு வடக்கே இருந்தன. அவற்றிற்குக் கிழக்காக மலைநாடு என்றவொரு தனி நாடுமிருந்ததாகத் தெரிகிறது. இந்த மலை நாட்டில் வஞ்சி ஆதித்தன் என்பவன் கி.பி. 16-ஆம். நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி.17ஆம் நூற்றாண்டின் முதலிலும் மிகச் சிறப்பாக ஆண்டு வந்தான். கி.பி. 1623-இல் பாடப்பெற்ற பெருமாள் தம்பிரான் கதைப்பாட்டில் இந்த வஞ்சி ஆதித்தன் மிகுவாகப் போற்றப்படுகிறான். இவனுக்குரிய பகுதிகள் நாஞ்சில் நாட்டின் வடபகுதிவரை இருந்தன. தென்பாண்டி நாட்டிலிருந்து நாஞ்சில் நாட்டிற்குள் போவதற்குமுன் வஞ்சி ஆதித்தனின் மலைநாடு எதிர்ப்படும். இவ் ஆதித்த மன்னன், பக்தியுடனும், பாசத்துடனும் ஆண்டுள்ளான் என்பதை மேற்குறித்த கதைப்பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

வஞ்சிக் கொடியார்கள் மதனனென வந்த மன்னன்
திருவஞ்சி ஆதித்த மன்னன் செங்கோலின் நீதிகேளும்
ஆறிலொன்று கடமைகொண்டு ஆண்டிருந்த சேரர் பூமி
கூறிலொன்று தான்பிரிந்து கொற்றவர்கள் மலைநாடு
பிரமவழி மறையோரும் பெண்ணீதி குன்றாமல்
மரபுநெறி யழியாமல் மாதேவர் பூசைகளும்
தெய்வநெறி குன்றாமல் செங்கோலின் முறை நடத்தும்
வையகத்தில் நெறிநடக்கும் வளநாடு தென்னாடு
அந்தமலைநாடு தன்னில் தென்னாடு.....

வஞ்சி ஆதித்தன் நினைவாக நாஞ்சில் நாட்டு நாகர்கோயில் நகரில் ஒரு தெருவின் பெயர் வழங்கிவருகிறது என்பது ஈங்கு நினைக்கத்தக்கது.

வெள்ளை நாடன் விக்கிரம ஆதித்தன்: சேர நாட்டிலிருந்து தென்பாண்டி நாட்டிற்குக் கணவாய்கள் வழியாக வந்து செல்வது வழக்கமாக இருந்தது என முன்பு கூறப்பட்டது. அந்நிலையில் சேரநாட்டு அரச மரபினர்களில் ஒரு பிரிவினரான வெள்ளை நாடர்கள் என்போர் சேரன்மகாதேவி, கல்லிடைக்குறிச்சி, அம்பாச முத்திரம் போன்ற பகுதிகளில் ஆட்சியுரிமை பெற்றிருந்தனர். அவர்களில் விக்கிரம ஆதித்தனும், ஆதித்த வன்மப் பணிக்கனும் அவர்களுடைய உறவினர்களும், அவர்களுக்குச் சேவகம் செய்தவர்களும் 'சோதினை', 'உள்ளிருப்பு,' 'பாசித்தலை', 'தண்டபாசி', போன்ற ஆட்சிச் செயல்களைச் செய்துவந்ததாகவும், அவர்கள் அவ்வாறு செய்யலாகாது எனப் புதிதாக நியமனம் பெற்றோர் கல்வெட்டியிட்டதாகவும், அதனால் ஏற்பட்ட பின் விளைவுகளை 'Decline and Fall of Vellai Nadars, என்ற கட்டுரையில் நெல்லை நெடுமாறன் அவர்களும், இராமச் சந்திரன் அவர்களும் எழுதியுள்ளனர். கல்லிடைக்குறிச்சிக் கல்வெட்டு கி.பி. 1453 ஐச் சார்ந்தது. அதில் சில வரிகள் வருமாறு:

1. கொல்லம் 628 ஸ்ரீ சித்திரை மீ
2. 9 தேதி முன்னாள் நாட்டின கல்லு

......

5. .... நம்முடைய நாட்
6. டில் வெள்ளாழற்கு பிழைப்

7. போர் சிலகாரிய வெள்ளை நாடரி
8. ல் சோதினை உள்ளிருப்பு பாசித்த
9. லை விக்கிறமன் ஆதித்தன் செய்
10. கையா லேயும் ....
57. யில் சேவகமுள்ள ஆதித்தவன்ம ப
58. ணிக்கன் பாசிதத லைக்குறிப்பின

விக்கிரம ஆதித்தனும் பிறரும் ஆட்சி செய்வதற்கு எதிர்ப்பு ஏற்பட்டபோது, இப்பகுதியிலிருந்த ஆட்சியாளர்களாகிய ஆதித்த வமிசத்தாரும் பிறரும் திருச்செந்தூர்ப் பகுதிக்குக் குடியேறியிருக்கலாமென்ற ஒரு கருத்தும் நிலவுகிறது.

## கூப(க) நாடும் வேணாடும்

முதலாம் இராசராசன் சோழ மாமன்னனாக முடி சூடியதும், சேர, பாண்டியர்களை வெல்லும் பொருட்டு, முதலில் சேரநாட்டின் மீது படையெடுத்தான். உதயகிரிக் கோட்டையையும், வேணாட்டுக் காந்தளூர்ச்சாலையையும் வென்றபின்பு குட்ட நாட்டின்மேல் படையெடுத்தான். மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள பதினெட்டுக் கணவாய்கள் வழியாகத்தான் சோழ நாட்டுப் படைகள் சேரநாட்டில் புகுந்தன என இராசராச சோழன் உலா (வரி - 48) கூறுகின்றது. குட்டநாட்டில் கொல்லத்தைச் சார்ந்த பகுதியை வென்றபின்பு, கொடுங்கோளூரையும், குட்ட நாட்டிற்கு அப்பாலிருந்த குடமலை நாட்டையும் வென்றான். சேரநாட்டின் சில பகுதிகள் இராசராச சோழன் ஆட்சியின் கீழ்வந்தன. அவற்றை,

காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி
(வேங்கை நாடும் தங்கபாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்)
குடமலை நாடும் கொல்லமும்....

என அவனது மெய்க்கீர்த்தி குறிப்பிடுகின்றது. வேணாட்டுப் பகுதியிலும், குடமலைநாட்டிலும், கொல்லத்திலும், சோழப் பிரதிநிதிகளை ஆட்சியில் அவன் அமர்த்தினான். கி.பி. 11 ஆம் நூற்றாண்டு முதல் சோழப் பிரதிநிதிகள் பழையாறையி லிருந்து சேர நாட்டிற்குக் குடிபெயர்ந்து, கொல்லம் போன்ற பகுதிகளில் குடியேறினர் எனச் சரித்திர ஆசிரியர் கருதுவர்.

வேணாட்டிற்கும் குட்ட நாட்டிற்கும் இடைப்பட்டபகுதி கூப(க) நாடு என அழைக்கப்பட்டது. இப்பகுதி கொல்லத்தை அடுத்திருந்தது. அகத்தியச் சூத்திரம் ஒன்று 'பன்னிருநிலங் களில் ஒன்றாகக் கூப(க) நாட்டைக் குறிப்பிடுகிறது.

''கொல்லங் கூபகம் சிங்களம்....''

என்று அது குறிப்பிடுவதாலும், இராசராசனுக்குத் திறைப் பொருள் கொண்டு வந்தோர்களில் கூப்(க) நாட்டைச் சேர்ந்த ஒருவனுமிருந்தான் எனக் கலிங்கத்துப்பரணி (11 வது பகுதி) குறிப்பிடுவதாலும், கூப(க) நாடு என்பது ஒரு தனி நாடாக இராசராசன் காலத்தில் இருந்ததை அறியலாம்.

திருவனந்தபுரம் மாவட்டம், சிறையின்கீழ் வட்டத் திலுள்ள 'ஆற்றிங்கல்' என்ற ஊரைச் சார்ந்த பகுதிகளுக்கு வழங்கப்பட்ட பெயர் 'கூப(க) நாடு' எனச் சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இது பிற்காலத்தில் திருவிதாங்கூர் ஆட்சியின் கீழ் வந்துவிட்டது. திருவிதாங்கூர் அரச பரம்பரையினர் பற்றிய தமது நூலில் கூப(க) தேசம் வேணாட்டினின்றும் வேறுபட்டது எனப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

முதலாம் இராசராச சோழனின் முப்பதாவது ஆட்சி யாண்டில் வெட்டப்பெற்ற கல்வெட்டொன்று, அவன் கூப(க) அரசனை வென்றதாகக் குறிப்பிடுகிறது. கூப(க) நாட்டில் ஆற்றிங்கல் (அத்திங்கல்) இருந்ததாக மற்றொரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. ஆற்றிங்கல் நகர்க்கருகிருலுள்ள அபனேஸ்வரர் ஆலயத்தில் இக்கல் வெட்டு உள்ளது. ஆற்றிங்கல் அரண்மனையிலிருந்த இரு இராணிகளால் அவ்வாலயம் பழுதுபார்க்கப்பட்டதாக அக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. அக்கல்வெட்டின் காலம் மலபார் சகாப்தம் 751 ஆகும். இவற்றால் கூப(க) நாடும் வேணாடும் வேறு வேறு என்றும், வேணாட்டை ஆண்டவர்கள் வேறு, கூப(க) நாட்டை ஆண்டவர்கள் வேறு என்பது தெரிகிறது. கூப(க) நாட்டை 'ஆதித்தன்' எனும் சோழ மன்னன் ஆண்டதாகவும், அவன் கட்டியதே ஆற்றிங்கல்லில் இன்றும் விளங்கக்கூடிய அரண்மனை என்றும் அறியலாம்.

'ஆற்றிங்கல்' அல்லது 'அற்றிங்கல்' எனத் தற்போது வழங்கப்படும் பெயர் 'ஆத்திங்கல்' என்றும் கூறப்பெறும். ஆதித்தன் கட்டிய கல் அரண்மனை அது ஆதலால் அது 'ஆதித்தன்கல்' என முதலில் வழங்கப்பட்டிருக்கலாம். 'அத்தி' என்பது சோழனைக் குறிப்பது. அதனால் 'அத்திங்கல்' என்ற பெயரும் ஏற்பட்டிருக்கலாம். சோழனின் பெயரே அவ்வூருக்குப் பெயராக அமைந்து விட்டது எனக் கூறுவது பொருத்தமாகும்.

## சோழ நாட்டு ஆதித்தர்களும் கூப(க) நாடும்

சோழப் பேரரசர் சிலருக்கு ஆதித்தன் எனும் பட்டப் பெயர் வழங்கியுள்ளது. இப்பெயரால் மிகச் சிறப்புப் பெற்றவன் விசயாலயசோழன் மகன் ஆதித்தசோழன் ஆவான். அவனது காலத்திலும் அவனுக்குப்பின் வந்த முதலாம் பராந்தகன் காலத்திலும் சேரநாடு சோழர்களால் கைப்பற்றப்படாதிருந்தது. பாண்டிய நாடும் சேரநாடும் மணவுறவுகளால் மிக நெருக்கமாக இருந்ததாலும், பராந்தகச் சோழனின் பட்டத்தரசி ஒரு சேரமன்னன் மகளாய் இருந்த தாலும் சோழர்களின் ஆட்சி அங்கு அமையாதிருந்தது.

முதலாம் பராந்தகச் சோழனின் மகனான இராசாதித்தன் என்பவன் சோழ இளவரசனாக இருந்த போதே போரில் உயிர் துறந்ததால், அவன் தம்பி கண்டராதித்தன் சோழமன்னனாக ஆட்சி செய்தான். கண்டராதித்தனுக்குப்பின், அவன் தம்பி அரிஞ்சயனும், அவன் மகன் சுந்தரசோழனும் ஆண்டனர். சுந்தரசோழனுக்குப் பின், கண்டராதித்த சோழன் மகன் உத்தம சோழன் சில காலம் மன்னனாக ஆண்டான். அதன் பின்னரே இராசராசசோழன் முடிசூட்டப் பெற்றான். இராசராசன் காலத்திலேயே சோழநாட்டு எலலை பரந்தது. அது சேரநாடு, பாண்டிய நாடுகளையும் உள்ளடக்கியிருந்தது. அப்பரந்த நிலப்பரப்பை ஆட்சி செய்வதற்காக, பழையாறையிலிருந்து, சோழப் பிரதிநிதிகளாகப் பலர் அனுப்பப் பெற்றனர். அவர்களில் ஆதித்த வமிசா வழியினர் சேரநாட்டுப் பகுதிகளுக்குச் சென்றனர். சோழநாட்டில் அதுவரை இருந்த ஆதித்த வமிசத்தினர் குடிபெயர்ந்து சேரநாட்டுக்குச் சென்ற பின்பு சோழ நாட்டில் ஆதித்தர்கள் பற்றிய செய்தி இடம் பெறவில்லை.

## ஆதித்த சூரியன் எனும் ஆதித்தனார்

இராசராச சோழன் காலத்தில் அவன் மகன் இராசேந்திர சோழன் தலைமையில் பல போர்கள் நடந்தன. பல அரசியல் அதிகாரிகள் அப்போர்களில் ஈடுபட்டனர். அவர்களில் ஒருவன் ஆதித்தசூரியன் ஆவான். இவன் இராசராசன் காலத்தில் சோழ மண்டலத்தில் இராசேந்திரசிங்க வளநாட்டின் கண்ணுள்ள பொய்கைநாடு எனும் பகுதியை ஆண்டவ னாவான். இவன் தஞ்சைப் பெரிய கோயிலில் பல அறச் செயல்களில் ஈடுபட்டிருந்தான். ஆதித்தன் எனும் பெயர் அதன்பின் தென் குமரிப் பகுதியிலுள்ள கோட்டாற்று நிகழ்ச்சியொன்றில் காணப்படுகிறது. ஆங்கு 'ஆதித்தனார்' என ஒருவன் குறிப்பிடப்பட்டுள்ளான்.

கோட்டாற்று நிகழ்ச்சியைக் குறிப்பிடும் கல்வெட் டொன்று நாகமையாவின் திருவிதாங்கூர் ஸ்டேட் மேனுவல் என்பதில் இடம் பெற்றுள்ளது. முதலாம் இராசேந்திர சோழன் சேரநாட்டில் புறத்தாய நாடு என அழைக்கப்பெற்ற கோட்டாற்றுப் பகுதிகளை வென்றபின்பு அங்குக் கூடிய அரசியல் அதிகாரிகளில் ஒருவனாக 'ஆதித்தன்' என்பவன் காணப்படுகிறான். இதனால் முதலாம் இராசராசன் காலத்தில் சோழநாட்டிலிருந்து வந்த ஒரு ஆதித்தனே பின்பு சேரநாட்டில் சோழனின் அரசியல் அதிகாரியாகத் திகழ்ந்தான் எனச் சிலர் கூறுவர்.

ஆதித்தன் பட்டம் பெற்றோர் பலர் பழையாறை நகரிலிருந்தார்கள் என்றும் அவர்களில் பெரும்பாலோர் சாமந்தர்களாகவும் மகாசாமந்தர்களாகவும் விளங்கினர் என்றும் மோசஸ் பொன்னையா (1978) என்பவர் தன் நூலில் குறிப்பிடுகின்றார். அவர் மேலும் குறிப்பிடுவதாவது:

"பதினொன்றாம் நூற்றாண்டில் சோழ அரசர் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்த பொழுது பழையாறையைச் சேர்ந்த பலர் தலைமை பூண்டு முன்னணிப் படையுடன் வந்தனர். அவர்களுள் மணப்படையூரினன் ஒருவன் சோழ பாண்டியப் பிரதிநிதியாகத் திருநெல்வேலிக்கு அண்மையில் மணப்படையூர் அமைத்து ஆண்டான். அக்காலத்தில் சோழநாட்டின் மகா சாமந்தனாக இருந்த ஆதித்த சூரியன்

எனப்பட்ட பழையாறைத் தலைவனே, மலைநாட்டுக் கூபதேசம் எனப்பட்ட குடநாட்டுச் சோழ பாண்டியப் பிரதிநிதியாக இருந்து ஆண்டு வருவானாயினான். அத்திங்கல் அரண்மனை அவன் காலத்தில் கட்டப் பெற்றதே. காயங்குளத்தில் பழையாறை மக்கள் குடியேறினர்.'' (பக்.79)

''இராசராசனின் மூன்றாம் ஆண்டுக்கு முன்னர் கல்வெட்டுக்களில் பற்பல திருப்பணிகளில் அக்தாராக இருந்த அவன்பெயர் (ஆதித்தசூரியன்) அந்த ஆண்டு முதல் சோழநாட்டு எழுத்துச் சான்றுகளில் இடம் பெறாததாலும், கூபநாட்டை ஆண்ட சோழப் பிரதிநிதியின் பெயர் 'ஆதித்த' என்று தெரிவதாலும் இவ்வாறு கொள்ளப்படுகிறது. அத்திங்கல் வீட்டுப் பட்டப் பெயராக ஆதித்தன் என்பது அமைந்து அத்திங்கல்லைச் சேர்த்துக் கொண்டபின்னர், அந்தப் பெயர் வேணாட்டரசனின் பெயருடன் சேர்த்துக் கொள்ளப்படுவதால் மேற்கண்ட கருத்து உறுதிப்படுகிறது.''

(பக். 162 -அடிக்குறிப்பு)

''ஆதித்த சூரியனின் வழியினரின் ஆட்சி பதினொன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டுவரை மிகச் சிறப்பாகக் கூபநாடு எனப்பட்ட குடநாட்டில் நடந்தது எனலாம்'' (பக். 183) இவ்வாறு மோசஸ் பொன்னையா குறிப்பிடுகின்றார்.

பேராசிரியர் மோசஸ் பொன்னையா அவர்களின் ஆய்வின் சில பகுதிகளை ஆராய்ச்சியாளர் திரு. நெல்லை நெடுமாறன் மறுக்கின்றார்.

ஆதித்த சூரியன் என மோசஸ் பொன்னையாவால் குறிப்பிடப்படுபவன் தென்னவன் மூவேந்த வேளான் என்ற பட்டப்பெயரிலிருந்தவன். அவனுக்கும் கோட்டாற்று நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஆதித்தனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆளவந்தான் சோழன் என்பவனே சேரநாட்டின் சில பகுதிகளையும், கோட்டாற்றுப் பகுதிகளையும் ஆண்ட சோழன் ஆவான் எனவும் அவனே பின்பு கூப(க) நாட்டை ஆண்டான் என்றும் நெல்லை நெடுமாறன் தம் ஆய்வில் கூறுகின்றார்.

சீவலமாறன் கதை

மணப்படைவீட்டைப் பற்றி 16ஆம் நூற்றாண்டு நூலான சீவலமாறன் கதை வழுதியர் குலங்கள் வாழும் மணப்படை வீடுதன்னில், என்பதால், மணப்படை வீடு என்பது பாண்டியகுல நாடார்கள் ஊராகும். பல்வேறுபட்ட பகுதிகளில் பாண்டி நாட்டில் சுந்தரசோழ பாண்டியன் பட்டம்பெற்று மதுரையை ஆண்டதுபோல் பாண்டி நாட்டின் பல பகுதிகளைச் சோழர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். ஆதித்தன் என்ற பெயரைச் சேரர்களும் வைத்திருந்தனர். காரணம் சோழரும் சேரரும் சூரிய குலத்தவ்ரே, என்று நெல்லை நெடுமாறன் கருதுகின்றார்.

கூபகர்கோன் ஆதித்தன்

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் சோழப்பிரதிநிதிகளின் ஆட்சியின் கீழ் கூப(க) நாடு என்னும் பகுதி இருந்தது என முன்பு பார்த்தோம், குட்ட நாடு, குடநாடு என இருந்த நாடுகளின் சில பகுதிகள் சேர்ந்து இக்கூப(க) நாடு தோற்றம் பெற்றுள்ளது.

இந்நாடு தெற்கே ஆற்றிங்கல் எனும் நகரை உள்ளடக்கி இருந்தது. வடக்கே காயங்குளம் வரை பரவியிருந்தது. வேணாட்டில் சேரர்களும், புறத்தாய நாடு எனப்படும். கோட்டாற்றுப் பகுதியைக் குலோத்துங்க சோழனின் பிரதிநிதியும் ஆண்டு வந்தமையைப் பதினோராம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும், 12ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியிலும் காணமுடிகின்றது. கூப(க) நாட்டை ஆண்ட சோழப் பிரதிநிதிகளில் முக்கியமானவனாகாக் கருதப்படும் ஓர் அரசன் கி.பி. 1117இல் இராசசிம்மபாண்டியன் என்பவனையும் வென்று, நாஞ்சில் நாடு, புறத்தாயநாடு என்பவற்றையும் வென்றுள்ளான். இதனைக் குறிப்பிடும் பாடல் வருமாறு:

எத்திசையும் புகழ்படைத்த கொல்லம் தோன்றி
இருநூற்றுத் தொண்ணூற்று இரண்டா மாண்டு
வெற்றிசெயும் கும்பத்தில் வியாழன் நிற்க
விளங்குபுகழ் ஆவணிபன் னிரண்டாந்தேதி

தத்திவிழும் பறளியாற் றணையும் தள்ளித்
தமிழ்ப் பாண்டிராஜசிங்கம் தனையும் வென்று
கொத்தலரும் பூஞ்சோலை நாஞ்சி நாடும்
கோட்டாறும் கூபகர்கோன் கொண்ட நாளே

இப்பாட்டிலிருந்து, கூப(க) நாட்டுச் சோழ அரசன் இராச சிம்மபாண்டியன் ஆண்டுவந்த களக்காடு மற்றும் தோவாளைப் பகுதிகளையும் வென்று நாஞ்சில் நாட்டின் சில பகுதிகளையும் புறத்தாய நாடு எனும் கோட்டாற்றுப் பகுதிகளையும் சேர்த்து ஆண்டான் எனத் தெரியவருகின்றது. சோழப்படையினர் தென்பாண்டி நாட்டிலும் சேரநாட்டில் ஆங்காங்கும் நிலைகொண்டிருந்ததால் இக் கூபகர்கோனுக்குப் பாண்டியனையும் வேணாட்டு அரசனையும் வெல்ல சாத்தியமாயிற்று. இதன்மூலம் ஆதித்த சோழப்பரம்பரையினர் தென்பாண்டி நாட்டின் சில பகுதிகளையும் கூப(க) நாட்டுடன் ஆண்டுள்ளதாகத் தெரிகின்றது.

**ஆதிச்சன் உடையண்ணன்**

மீண்டும் ஆதித்தன் எனும் பெயர் கி.பி. 1173இல் கல்வெட்டொன்றிலிருந்து தெரியவருகின்றது. இக்காலத்தில் வேணாட்டை மீண்டும் விரித்து ஆண்டவன் வீரஉடையமார்த் தாண்டவர்மன் என்பவன். இவனுக்கு இணையாக ஸ்ரீவல்லப பாண்டியன் என்பவன் வள்ளியூரைத் தலைநகராக வைத்துத் தென்பாண்டிநாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்துள்ளான். இக் கல்வெட்டில் ஆதிச்ச உடையண்ணன் என்பானும் அவனது சகோதரர்களும் குறிப்பிடப்படுகின்றனர்.

ஆதித்தனும் அவன் தம்பிமார்களும் குறிக்கப்பெறும் இக்கல்வெட்டு திருவெட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோவில் தென்புறச் சுவரில் உள்ளது. அதில் வருவதாவது:

'...ஆதிச்சனுதையன்னனுந் தம்பிமாற்கும்வுள்ள நிலம்....'

இவற்றால் ஆதித்த சோழர்களின் மரபினரும் அந்தப் பட்டப் பெயர்களை உடையவர்களாக இருந்தனர் என்பது தெரிகிறது.

---

★ கி.பி. 1244-இல் தென்திருமாலிருஞ்சோலை (சிவலப்பேரி) எனப்பெறும் அழகர்கோயிலுக்கு ஓடநாட்டு **ஆதிச்சன்** என்பான் கொடையளித்துள்ளான் எனச் சிவலப்பேரிக் கல்வெட்டால் அறிய முடிகிறது. ஓடநாடு என்பது காயங்குளம் சேர்ந்த பகுதி ஆகும். இவ்வாறு திரு. எஸ். இராமச்சந்திரன் தெரிவிக்கிறார்.

ஆதித்த ராமன்:

கி.பி.1190இல் அறியப்படுகின்ற மற்றொரு சோழப்பிரதி நிதி ஆதித்தராமன் ஆகும். இவனைத் திருவிதாங்கூர் அரச மரபினர்களில் ஒருவனாகச் சில சரித்திர ஆசிரியர்கள் கருதுவர். ஆனால் பலர் இவனை அம்மரபில் சேர்ப்பதில்லை. சங்குன்னிமேனோனின் திருவிதாங்கூர் வரலாறு எனும் நூலிலும், திருவிதாங்கூர் தொல்பொருள் துறை வெளி யிட்டுள்ள திருவிதாங்கூர் (வேணாடு) அரச மரபினர் வரிசையிலும் இந்த ஆதித்தராமன் என்பான் இடம்பெற வில்லை. இவற்றிலிருந்து திருவிதாங்கூர் அரச மரபினரில் இடம்பெறாதவன்தான் ஆதித்தராமன் என்பதும் ஆதித்தன் எனும் பட்டப்பெயர் கொண்டுள்ளதால் அவன் சோழஅரசர் மரபினன் என்பதும் கூப(க) நாட்டினன் என்பதும் போதரும்.

திருவனந்தபுரம் கோசாலை கிருஷ்ணன்கோயில் வடபுறச் சுவரில் காணப்படும் மலையாளம் கலந்த வடமொழிக் கல்வெட்டொன்று ஆதித்தராமன் அக்கோவிலுக்குச் செய்த நிவந்தத்தைக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு கி.பி. 1190இல் வெட்டப்பெற்றது. இதில் இவன்

''...ஸ்ரீமானாதித்ய ராமஸ்ஸஹி...''

எனக்குறிக்கப்படுகிறான். திருவிதாங்கூர் (வேணாடு) கொடை மார்த்தாண்டவர்மனின் முடிக்குரியவனும், கூபம் பகுதிக்கு உரிமையுடையானும், இந்நிலவுலகிற்கு உயிர் போன்றவனும், எல்லோராலும் மதிக்கப்படுபவனும் ஆன ஆதித்ய ராமன் திருவனந்தபுரம் கோசாலை கிருஷ்ணன் ஆலயத்திற்கு மேருவை ஒத்த பெரிய வெள்ளியால் செய்த ஒளிமிக்க மத்தாலத்தை நன்கொடையாக வழங்கியுள்ளான் என்ற செய்தி இக்கல்வெட்டிலிருந்து தெரியவருகின்றது. இவற்றால் ஆதித்தராமன் என்பவன் கூபக நாட்டுக்கும் வேணாட்டுக்கும் உரிமை யுடையவன் எனத் தெரிகிறது.

கோட்டாற்றுப் பகுதியையும் கூபம் பகுதியும் சோழப் பிரதிநிதிகள் கி.பி.11 ஆம் நூற்றாண்டிலிருந்து ஆண்டுவந்தனர் என்று முன்பு பார்த்தோம். அவர்களுக்கும் தென்பாண்டியை யும் திருவிதாங்கூரையும் ஆட்சிசெய்து தங்களுக்குள் மணவுறவு கொண்டிருந்த பாண்டிய-வேணாட்டரசர்களுக்கும்

அடிக்கடி போர்கள் ஏற்பட்டுள்ளன. அதன் காரணமாகத் திருவிதாங்கூர்-தென்பாண்டி நாடுகளின் சில பகுதிகள் கைமாறியுள்ளன. இதன் காரணமாகவே கி.பி. 1117, மீண்டும் கி.பி.1190 எனும் இரு ஆண்டுகளில் ஆதித்தசோழப் பிரதிநிதிகள் பற்றிய கல்வெட்டுகள் ஏற்பட்டுள்ளமையை அறியமுடிகிறது.

## ஆற்றிங்கல் அரண்மனை இராணிகள்

ஆற்றிங்கல் (அத்திங்கல்) என்னுமிடம் வடதிருவி தாங்கூர் (வேணாடு) நாட்டின் வட எல்லையிலும் கூபநாட்டின் தென் எல்லையிலும் அமைந்திருந்தது என முன்பே பார்த்தோம். இவ்வூர் வாமனபுரம் ஆற்றின் வடகரையில் உள்ளது. இது கடற்கரையை ஒட்டிஅமைந்த தலமாகும். இங்குள்ள அரண்மனை சோழப் பிரதிநிதிகளால் கட்டப்பெற்றது என்பர். அதற்கேற்ப இவ்வரண்மனையில் கல்காரம் தமிழ்நாட்டின் கோட்டை மதில்களில் காணப்படும் கருங்கல் பாளங்களாலானது. உயரமாக இம்மதில் எழுப்பப் பெற்றுள்ளது. வடக்கு -தெற்கு எனும் இரு பகுதிகளைக் கொண்ட அரண்மனையின் நடுவே-கிருஷ்ணன் கோயில் அமைந்துள்ளது.

ஆற்றிங்கல் அரண்மனை சோழப் பிரதிநிதிகள் கட்டிய தானாலும் அது அரசகுலப் பெண்கள் இருந்து வாழ்வதற்காக அமைக்கப் பெற்றதாகக் கருதப்படுகிறது. கூபநாட்டின் அரசியல் தலைவர்கள் கொல்லத்திலோ சிறையின்கீழ் அரண்மனையிலோ காயங்குளத்திலோ தான் தங்கியுள்ளனர். பலகாலத்திலும் இங்கு இருந்தவர்கள் ஆற்றிங்கல் இராணிகள் என அழைக்கப்பெறுகின்றனர்.

ஆதித்தராமன், தனக்குப்பின் கூப(க) நாட்டை ஆளுவதற்குக் கொல்லத்து நாட்டிலிருந்து இரு பெண்களைத் தத்தெடுத்ததாகக் கூறப்படுகிறது. இது கி.பி. 1305இல் நடந்ததாகச் சங்குன்னி மேனோன் தம் நூலில் குறிப்பிடுகின்றார். இவ்விருவரும் ஆற்றிங்கல் அரண்மனை யில் தங்கினார்கள் என்று அதனை அடுத்த பகுதிகளை அவர்களிருவருக்கும் உரிமையாக்கி அவற்றிலிருந்து வரும் வருமானத்தில் அவர்கள் வாழ்ந்தார்கள் என்றும் கூறுகிறார்.

ஆதித்தராமன் வேணாட்டரசன் அன்று என்றும் அவன் கூப(க) நாட்டை ஆண்ட சோழமன்னன் என்றும் முன்பு பார்த்தோம். அவ்வாறான ஆதித்த ராமன் இரு பெண்களைத் தத்தெடுத்தது கி.பி. 1305இல் எனக்குறிப்பிடுவது பொருத்தமாகாது. இவ்வாறு கூறுவதற்கு ஆதாரம் இல்லை. எனவே இரு பெண்களைத் தத்தெடுத்தது வேறொரு ஆதித்த மன்னனாக இருக்கவேண்டும் அல்லது ஆதித்தராமன் தன் காலத்திலேயே அவர்களைத் தத்தெடுத்திருக்க வேண்டும்.

## ஆதித்த கோதைப்பிராட்டி

ஆற்றிங்கல் அரண்மனை முன்பே சோழப்பிரதிநிதியால் கட்டப்பெற்றது எனப்பார்த்தோம் கி.பி. 1252இல் அவ்வரண்மனையில் உமாதேவி எனும் அரசகுமாரி இருந்ததாகக் காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோயிலில் வெட்டப்பெற்ற கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. இவ்வரசகுமாரி கூப(க) நாட்டு அரசமரபில் வந்தவள் என்றும் அக்கல்வெட்டு கூறுகின்றது. மேலும் இவள் வேணாட்டையும் ஆண்டதாக அதிலிருந்து தெரிகிறது. இவற்றால் ஆதித்த ராமனுக்குப் பின் அவனது மகள் உமாதேவியே ஆற்றிங்கல் அரண்மனையிலிருந்து கூப(க) நாட்டை ஆண்டவள் என்பதும் அவள் ஆட்சியின் கீழ் வேணாட்டின் சில பகுதிகள் (திருவனந்தபுரம்) இருந்தன என்றும் அறியலாம். காஞ்சிபுரம் சோழர்களின் கீழிருந்ததால் சோழநாட்டின்கீழிருந்த கூப(க) நாட்டைப்பற்றிய கல்வெட்டு அங்கு இடம்பெற்றது என்று கூறுவது பொருத்தமாகும். கி.பி. 1315இல் சோழமரபில் வந்த வீரசோழன் மகன் வீரசம்பன் என்பான் ஒருதேர் அளித்தான் என்றும் கல்வெட்டில் அறியமுடிகின்றது. இதனால் சோழ மரபினர் அக்கோயிலுக்கு நிவந்தம் அளிக்கும் மரபுடையவர்கள் என அறியலாம்.

## ஜெயசிம்மநாடும் ஜெயசிம்மனும்.

சோழ நாட்டில் கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முதலிலும் ஆட்சி செய்தவன் மூன்றாம் குலோத்துங்கன் ஆவான். இவன் மிகவும் வலிமைவாய்ந்தவன். இவன் காலத்தில் வீரபாண்டியனும்

அவன் புதல்வர்களும் இவனிடம் அன்பு பூண்டு இவனால் நாட்டுரிமை வழங்கப்பட்டிருந்தனர். ஆயின் அவர்கள் காலத்துக்குப்பின் வந்த சடைய வர்மன் குலசேகரபாண்டியன் சோழனை எதிர்த்ததால் குலோத்துங்கனால் விரட்டப் பெற்றான். பின்பு அப்பாண்டியன் இவனிடம் அடைக்கலம் புகுந்ததால் பாண்டியநாடு குலசேகரனுக்கே மீண்டும் அளிக்கப்பட்டது. குலோத்துங்கன் இறந்தபிறகு பட்டத் துக்கு வந்த மூன்றாம் இராசராசன் வலிமை இல்லாதவன். இதனால், குலசேகரபாண்டியனுக்குப் பின்வந்த மாறவர்மன் சுந்தர பாண்டியன் பாண்டிய நாட்டைப் பெருக்கியதோடன்றிச் சோழநாட்டையும் அடிமைப்படுத்தினான். சோழநாட்டில் போசளநாட்டு மன்னன் உதவியுடன் மீண்டும் அரசாண்டமூன்றாம் குலோத்துங்கன் இறந்தபிறகு மூன்றாம் இராசேந்திர சோழன் ஆட்சிக்கு வந்தான். இம்மன்னன் வலிமைவாய்ந்தவன்.

பாண்டியநாட்டில் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பின் அவன் மகனான இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் சில திங்கள் ஆட்சி செய்து இறந்தான். அவனுக்குப்பின் ஆட்சி செய்த இரண்டாம் மாறவர்மன் வலிமையற்றவன். மூன்றாம் இராசேந்திரன் அப்பாண்டியனை வென்று தன் தந்தையின் காலத்தில் இழந்த பெருமையை மீண்டும் நிலை நாட்டினான். இவ்வாறு நடந்தது கி.பி. 13ஆம் நூற்றாண்டின் நடுவிலாகும். ஆனால் போசள மன்னன் தலையிட்டுப் பாண்டியனுக்குப் பாண்டிய நாட்டைக் கிடைக்குமாறு செய்தான். இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பின் பாண்டிய அரியணைக்கு கி.பி.1250இல் வந்த முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன் மிகவும் வலிமையுள்ளவன். இவன் கி.பி.1257இல் சோழநாட்டை அடிமைப்படுத்தினான். முதலாம் சடைய வர்மன் காலத்தில் பாண்டியநாடு தெற்கே குமரிமுனைவரை பரவியிருந்தது. இவன் காலத்தில் ஜெயசிம்மன் என்பான் கூப(க) நாட்டை வென்று உமாதவியையும் மணந்து கொண்டான் எனத்தெரிகிறது. இவன் கொல்லத்தைத் தலைநகராக வைத்துக் கூப(க) நாட்டையும் தென்பாண்டி நாட்டையும் ஜெயசிம்மநாடு எனும் பெயரில் ஆண்டான்.

ஜெயசிம்மன் 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்டான் எனத் தெரிகிறது. ஜெயசிம்ம நாடு என்பது பிற்காலத்தில் மருவி செயதுங்க நாடு என அழைக்கப் பெற்றது. ஜெயசிம்மனின் மகன் குலேசகரப்பெருமாள் என்பவன் ஜெயசிம்மநாட்டைக் கி.பி.13ம் நூற்றாண்டின் இறுதிவரை ஆண்டுள்ளான்.

ஜெயசிம்மனின் மகனான குலசேகரப் பெருமாள் பாண்டிய மன்னன் மகளை மணந்து கொண்டதாகத் தெரிகிறது. மேலும் அவன் தென்பாண்டியப் பகுதிகளையும் வென்று மாலிக்காபூரையும் விரட்டினான். அவன் காஞ்சிபுரம் வரையும் திக்விசயம் செய்துள்ளான். இவன் வேணாட்டரசன் வீரஉடைய மார்த்தாண்டன் என்பவனை வேணாட்டு அரசியலிலிருந்து துரத்தினான். ஆனால் மீண்டும் வீரஉடைய மார்த்தாண்டன் வேணாட்டில் ஆட்சி செய்துள்ளான் என்று தெரிகின்றது.

ஜெயசிம்ம நாட்டை உருவாக்கியவனின் மகனான, குலசேகரப் பெருமாள் வேணாட்டு அரசர்களையும், தென்பாண்டியை ஆண்ட அரசர்களையும் வென்றதால் அவன் பாண்டிய மரபினில் வந்தவன் அன்று என்ற கருத்தும் உள்ளது. அவன் சேரநாட்டிலிருந்த சோழர் பரம்பரையில் வந்தவனா அல்லது பாண்டியனா எனத் தெரிந்திலது. ஒருவேளை இவன் சோழ பாண்டியனாக இருக்கலாம். கன்னடப் பாண்டியனை வென்று தென்பாண்டிப் பகுதிகளைப் பிடித்தவனாகலாம்.

குலசேகரப் பெருமாளுக்குப் பின் ஜெயசிம்ம நாட்டை ஆண்டவன் ஓர் ஆதித்த மன்னன் எனக் கல்வெட்டுச் சான்று களால் அறிய முடிகிறது. இந்த ஆதித்த மன்னன் மிக நீண்ட காலம் இந்நாட்டுப் பகுதிகளை ஆண்டிருத்தல் வேண்டும்.

### சார்வாங்கநாதன் ஆதித்தன்

சங்குன்னிமேனோன் தன் திருவிதாங்கூர் வரலாறு எனும் நூலில் கி.பி. 1305ல் ஆதித்தன் எனும் அரசன் இரு பெண்களைத் தத்தெடுத்து ஆற்றிங்கல் அரண்மனையில் வைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார் என முன்பு பார்த்தோம்.

வேணாட்டரசர்களுக்கு இவ்வாறு செய்யத் தேவையில்லை எனச்சில சரித்திர ஆசிரியர்கள் மறுப்பர். ஆனால் இதிலுள்ள உண்மையினைப் பார்க்கும்போது ஆதித்தன் எனும் சோழமரபில் வந்த ஒரு மன்னன் தன் மரபினனான வேறொரு நாட்டிலிருந்த பெண்களிருவரைத் தத்தெடுத்துத் தன் அரண்மனையில் வளர்த்தான் என்று கருதலாம். திருவனந்த புரம் கிருஷ்ணன் கோயில் மண்டபத்தில் காணப்படும் கல்வெட்டு இவனைச் சோழன் அன்பன் (சோழப்பிரியா) எனக் குறிப்பிடுகின்றது. சக ஆணடு 1296 இல் (கி.பி. 1374) வெட்டப் பெற்ற இக்கல்வெட்டு அவன் அக்கோவிலின் மண்டபத்தை எழுப்பி அதில் விளக்கு மாடமும் வைத்தான் என்கிறது.

இதே ஆண்டிலுள்ள மற்றொரு கல்வெட்டு இம்மண்ட பத்தில் வடமொழியில் காணப்படுகிறது. இதுவும் ஆதித் தனைப் பற்றியது. இக்கல்வெட்டு சோழர்கள் கல்வெட்ட மைப்பைக் கொண்டது. மேலும் நாஞ்சில் நாட்டு - வடசேரியிலுள்ள கிருஷ்ணன் கோயிலில் ஆதித்தனுக்குச் சார்வாங்கநாதன் எனும் பட்டம் இருந்தது என்பதைக் கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது.

இந்த ஆதித்தனைப் பற்றி மோசஸ் பொன்னையா கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றார்.

*சகம் 1296 ஆம் ஆண்டு சோழப் பிரியனான சர்வாங்க நாதன் சியாநந்தபுரம் (திருவனந்தபுரம்) கோசாலைக்குத் திருப்பணி செய்ததாகக் கல்வெட்டு ஆதாரமுண்டு. இந்தச் சர்வாங்கநாதன் சோழப் பிரதிநிதியாகக் கூபநாட்டை ஆண்டவனாகவே இருக்க வேண்டும். (பக்.79)*

கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் அறியப்பெறும் ஆதித் தனுக்கு ஆற்றிங்கல் அரண்மனைத் தொடர்பு இருப்பதும், அவன் சோழப் பிரியனாக இருப்பதும், அவனைப் பற்றிய கல்வெட்டு அவனது ஆட்சிக்குள்ளிருந்த திருவனந்தபுரம் வடசேரியிலும் காணப்படுவதும் அவன் ஆதித்தன் சார்வாங்கநாதன் எனும் பெயருள்ளவனாக இருந்திருப்பான் என்று தெரிவிக்கின்றன. மேலும் அவனது காலத்துக்கு முன்பே கூப(க) நாடு, கொல்லமும் காயங்குளமும் சேர்ந்து ஜெயசிம்மநாடு எனப் பெயர் பெற்றிருந்தது.

நாஞ்சில் நாட்டு வடசேரி கிருஷ்ணன் கோயிலில் காணப்படும் ஒரு கல்வெட்டிலிருந்து இந்த ஆதித்த மன்னன் கி.பி. 1333 இல் அப்பகுதியை ஆண்டான் என்றும், அவன் அக்கோவிலுள்ள பகுதியை ஆதித்தவர்ம சதுர்வேதி மங்கலம் என மாற்றினான் என்றும் இவனே ஜெயசிம்ம நாட்டுக் குலசேகரப் பெருமாளுக்குப் பின் அந்நாட்டில் ஆட்சி செய்தவன் என்றும் குறிக்கப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.

முடிவுரை:

சோழநாட்டு ஆதித்த வமிசா வழியினர் சேரநாட்டில் ஆட்சி செலுத்திப் பின் தென்பாண்டி நாட்டிற்குப் பல காரணங்களால் பல குழுக்களாகக் குடிபெயர்ந்திருக்கலாம் என இதுவரை கூறியவற்றால் தெளிவாகிறது. சேரநாட்டிலும் சூரியகுலத்தைச் சேர்ந்த சிலசேர மன்னர்களுக்கு ஆதித்தன் எனும் பட்டப்பெயர் இருந்ததும் அவர்களும் தென்பாண்டி நாட்டின் சில பகுதிகளை அவ்வப்போது வென்று ஆண்டிருந்தனர் என்றும் அறிய வருவதால் மலையாள நாட்டில் சோழ ஆதித்தர்களும் சேர ஆதித்தர்களும் ஒருங்கே இருந்தனர் எனத் தெளிவாகிறது. இவ்வரச மன்னர் களுக்குப்பின், நாயக்கர்களின் ஆட்சி மதுரையில் ஏற்பட்ட பிறகு, தென்பாண்டி நாட்டிலிருந்த பூர்வீக அரசபரம் பரையினர் திறைசெலுத்தியும், திறைசெலுத்தாமல் சுதந்தி ரமாகவும் ஊர்களைப் பரிபாலனம் செய்து வந்திருக்கின்றனர். அதன்பின்பு நிலவுடைமைக்காரர்களாக விளங்கிவந்துள்ளனர்.

ஆதித்த வமிச வரலாற்றைத் தெளிவாக அறிந்து கொள்ளத் தக்க அளவில் கல்வெட்டுகளும், செப்புப்பட்டயங்களும் சாஸனங்களும் அதிகமாகக் கிடைக்கவில்லை. அவை கிடைக்கும் தறுவாயில் அவ்வரலாற்றைத் தெளிவாகவும் விரித்தும் எழுத இயலும்.

இந்நூலில், பேராசிரியர் தா. மாசில்லாமணி நாடன் அவர்கள் கி.பி.1930இல் எழுதிய பாண்டிய தேச ஆதித்த வம்ச வரலாறு எனும் பகுதி அப்படியே மறுபதிப்பாகிறது. அதில் இடம்பெற்ற ஆதித்த வமிசத்தார் பட்டியலுக்குப் பின் வருவோர் பற்றிய அனுபந்தத்தைத் திரு V.P. ஆதித்தன் அவர்கள் தயாரித்துள்ளார்கள். அது இணைப்பாக இங்குத்

தரப்படுகிறது. அதறகு மேலும் அண்மைக்காலம் வரையுள்ள ஆதித்த வமிசக் கொடி வழியும் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த நூலின் மறு பதிப்புகள் வரும் போதெல்லாம் ஆதித்த வமிசக் கொடி வழியும் புதிப்பிக்கப்படும்.

இந்த நூல் உருவாவதற்கு அனைத்து உதவிகளையும் தந்துதவிய ஆதித்த வமிசத்தாருக்கும், வரலாற்றுச் சமூக ஆய்வாளர் நெல்லை நெடுமாறன் அவர்களுக்கும் நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

காயாமொழி ஆதித்தர்கள் பற்றிய இந்த வரலாற்று நூலில், பழங்காலத்திலும் அண்மையிலும் வாழ்ந்த சில மாமனிதர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவர்களுள் தலை சிறந்து விளங்கியவர் 'தமிழர் தந்தை' எனப் போற்றப்படும் ஐயா அமரர் சி.பா. ஆதித்தனார் அவர்களே எனில் அதுமிகை யாகாது. தமிழ்ச் சமுதாயக் கல்வி மேம் பாட்டுக்கென ஐயா அமரர் சி.பா. ஆதித்தனார் அவர்கள் நாளேடுகள், வார ஏடுகள், மாத இதழ்கள் தொடங்கியும் பல கல்வி நிலையங்களை உருவாக்கியும் அருந்தொண்டாற்றினார்கள். 'உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு' எனும் கொள்கையுடன் வாழ்ந்து காட்டினார்கள். அவற்றின் அடிப்படையில், ஐயா அவர்களின் அருமைப்புதல்வர்களும், பேரர்களும் இன்று தமிழ்ச் சமுதாய மேம்பாட்டிற்குத் தொண்டாற்றி வருகின்றனர். ஐயா பா. இராமச்சந்திர ஆதித்தனார் அவர்களும், ஐயா டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களும், தமிழினத்திற்கும் அதன் கல்வி, சமுதாய மேம்பாட்டிற்கும் தற்போது அரும்பணியாற்றி வருகின்றனர்.

ஐயா டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்கள் தமிழர்களின் உயர்வுக்கு வழிவகுக்கும் வகையில் பல தொழிற் கூடங்களையும், உயர் கல்விக் கூடங்களையும் ஏற்படுத்தியுள்ளார்கள், தமிழ்ச் சமுதாய மேம்பாட்டிற்கு, நற்பணி மன்றங்களை அமைத்துள்ளார்கள். அவர்களுடைய சீரிய தலைமையின்கீழ் சான்றோரின சமுதாயம் உயர்ந்து வருகின்றது. சான்றோரின மக்கள் உயர்ந்த பாரம்பரியம் கொண்டவர்கள் எனப்பெயரளவில் பேசப்பட்டுவந்தாலும், அது வரலாற்று அடிப்படையில் உண்மை என

நிரூபிப்பதற்குரிய அனைத்து வசதிகளையும் ஐயா அவர்கள் திரு. நெல்லை நெடுமாறன் அவர்கள் மூலம் செயலாற்றி வருகின்றார்கள். திரு. நெல்லை நெடுமாறன் அவர்கள் இதுவரை அறிஞர்கள் செய்துவந்த ஆய்வினின்றும் முற்றிலும் மாறுபட்ட ஆய்வு மூலமாகச் சான்றோரின மக்களின் வரலாற்றை ஆராய்ந்து பல கட்டுரைகளும் நூல்களும் எழுதி வருகின்றார். கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள், இலக்கிய நூல்கள், வரலாற்று நூல்கள், ஓலைச் சுவடிகள் போன்ற அரிய பெட்டகங்களிலிருந்து சான்றாதாரங்களைத் திரட்டிச் சான்றோர் இனத்தார் பற்றிய புதிய வரலாற்றுக்கு அவர் வித்திட்டு வருகின்றார். திரு. நெல்லை நெடுமாறன் அவர்கள் எழுதிய 'வலங்கை உய்யக் கொண்டார்', 'சான்றோர் காசு', 'சான்றோர் அவை', 'முந்நூற்றுவர் சான்றோர்' "Fall and Decline of Vellai Nadars, போன்ற கட்டுரைகள் சரித்திரப் பேராசிரியர்களால் பாராட்டுப் பெற்றவை. திரு. நெல்லை நெடுமாறன் அவர்களுக்கு உறுதுணையாக, திரு. எஸ். இராமச்சந்திரன், திரு. A. கணேசன், பொறியாளர் திரு. தங்கவேல் போன்றோரும், அடியேனும் பல சான்றாதாரங்களை நல்கியும், ஊக்கம் அளித்தும் செயல் பட்டு வருகின்றோம். இவ்வாறான ஆய்வில் சன்றோர் இன்த்தார் வரலாறு புதிய பரிமாணம் கொண்டுவருகின்றது. இவர்களைத் தொடர்ந்து பலரும் இந்த ஆய்வு சிறக்க உதவி வருகின்றனர். நாமும் இதை வாழ்த்திப் பாராட்டுவோமாக!

டாக்டர் ஆ. தசரதன்

✶ ✶ ✶

★ காயங்குளம் 'வர்மக் கலை' எனும் தற்காப்புப் போர்க்கலை (Martial art) என்பதற்குரிய தலைமையிடமாகும். காயங்குளம் ஆதித்தர்கள் இந்த வர்மக்கலையில் தேர்ச்சியடைந்தவர்களாதலால் அவர்களின் பட்டப்பெயருக்குப் பின்னால் 'வர்மன்' எனும் பெயரும் வழங்கப்பட்டது. 'ஆதித்த வர்மன்' 'ஆதித்த ராம வர்மன்' எனும் பெயர்கள் சான்றாகும்.

★ அனந்த பத்மநாபன் என்பவர் திருவிதாங்கூரி லிருந்து சீனாவுக்குச் சென்று வர்மக் கலையைப் பயிற்று வித்தும், ஆங்குள்ள தற்காப்புப் போர்க் கலையைக் கற்றும் நாடு திரும்பும் போது காயாமொழிச் சிவந்தி ஆதித்த நாடன் (கி.பி. 1780) கேட்டுக் கொண்டதற்கு இணங்கிக் காயாமொழி ஆதித்த இளைஞர்களுக்கு அக்கலைகளைப் பயிற்று வித்தார் எனப் பேராசிரியர் திரவியம் நாடார் எழுதிய **'மாவீரன் அனந்தபத்ம நாபன்'** என்ற நூலிலிருந்து தெரிகிறது.

## முன்னுரை

மங்கலம் பொழியும் பரதகண்டத்தை ஆண்டு வந்தவர்கள் வரலாற்று முறையிற் சூரியகுலம் சந்திரகுலம் என்னும் இருபெருங் குலத்தவராவர். அவர்களில் சூரியகுலத்தினர் அயோத்தியாபுரியையும் சந்திரகுலத்தினர் அஸ்தினாபுரியையும் வடவிந்தியாவில் தங்கள் தலைநகரியாகக் கொண்டிருந்தனர். அவர்களே கால கதியில் தென்னிந்தியாவிலும் படையெடுத்துச்சென்று அங்குள்ள பழங்குடிகளை மேற்கொண்டு காடுகெடுத்து நாடாக்கி தங்கள் தங்கள் இராஜ்யத்தை ஸ்தாபித்தனர் என்றும் அவைகளில் சோழ ராஜ்யம் சூரியகுல மன்னர்களாலும் பாண்டிய ராஜ்யம் சந்திரகுல மன்னர்களாலும் ஸ்தாபிக்கப்பெற்றனவென்றும் பிற்காலத்தில் பாண்டிய மரபினரில் ஒருவன் சேரராஜ்யத்தை ஸ்தாபித்தனன் என்றும் இங்கனம் நாம் வாழும் இத்தமிழ் நாடும் மூன்று பிரிவினதாய் அவர்களாலேயே ஆளப்பட்டு வந்ததென்று கூறுவாருமுளர்.

அங்கனமின்றி ஆரியசம்பந்தஞ் சிறிதுமில்லாது கற்றோன்றி மட்டோன்றாக் காலத்தே முற்றோன்றி மூத்தகுடியினராய், அவ்வாரியருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டே உயர்ந்த நாகரிக முடையவர்களாய் அரசு புரிந்துவந்த தனித் தமிழ் மக்கள் என்பர் சிலர்.

நிற்க, பேரரசர்கள் தங்கள் நாட்டைப் பல பகுதிகளாகப் பகுத்து அப்பகுதிகளுக்குத் தம் சொந்தமரபினரைத் தலைவர்களாக நியமித்தலும் எளிதில் போக்குவரவு செய்யவொண்ணாத மலைப்பிரதேசங்களுக்கு அங்குவாழும் குடிகளிலேயே தலைவர்களை நியமித்தலும் பெருவழக்கு. போரில் புதிதாகவென்று அடிப்படுத்திய அயல்நாட்டின் பகுதிகளிலும் மேற்கூறியவாறே தலைவர்கள் நியமிக்கப் பெற்றனர். முடியுடைப் பேரரசர்கள் உயர்ந்து விளங்குங் காலத்து இத்தகைய சிற்றரசர்கள் அவர்களுக்கு அடங்கி யொழுகுதலும், அவர்கள் தாழ்ந்து போங்காலத்து இவர்கள் சுவாதீனமடைதலும், பேரரசானது பிறவேந்தனால் கொள்ளப்பட்ட காலத்து அப்புதிய வேந்தனுக்கு அடங்காது சுயேச்சையாக அரசுபுரிதலும் எங்கும் இயல்பே.

அத்தகைய சிற்றரசுகளில் காயாமொழிச் சிற்றரசு ஒன்று. இது பன்னெடுங்காலமாக ஆதித்தர்களால் நடத்தப்பெற்றுள்ளது. ஆதித்தர் என்னும் பெயர்மாத்திரையானே இன்னார் சூரியகுலத்தினர் என்பது போதரும். தமிழ்நாட்டில் வசித்தலான் சோழ வம்சத்தினர் என்பது சாலும். பாண்டி மண்டலப்பகுதியை ஆட்சி புரிந்தமையான் அப்பகுதியானது ஒருகாலத்திற் சோழர்களான் வென்று கீழ்ப்படுத்தப்பட்டுப் பின்னர் எக்காலமும் எவருக்கும் அடங்காது தனியரசாயிருந்தமை பெறப்படும். மேற்கூறிய விஷயங்களை நன்கு புலப்படுத்துதற் பொருட்டே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

யான் இளமைப்பருவத்தில் ஆதித்தர்கள் பெருமையை என் பெற்றோர்கள் வாயிலாகக் கேட்டுள்ளேன். பின்னர் உத்தியோக சம்பந்தமாய் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள இப்பாளையங்கோட்டையில் வந்து வசிக்க நேர்ந்தபொழுது அவர்கள் வரலாற்றைக் குறித்துப் பற்பல விஷயங்களை நன்குணர்ந்தேன். அங்கனம் உணர்தற்குக் கருவிகளாயிருந்தோர் காலஞ்சென்ற ராஜமகருஷி சட்டம் பிள்ளை ஐயாவின் மூத்த புத்திரரான ரபிபாண்டிய நபியவர்களும் மாவீடுபண்ணைக் கிராமமுனிசீபு நாடார் புதல்வரும் எனது ஆருயிர் நண்பரும் "ஆனந்த விஜயன்" பத்திராதிபருமான ஸ்ரீமான் ஏ. இராஜநாயக நாடாரவர்களுமே. நாளடைவில் அவ்வாதித்தர் மரபினர் தாமும் எனக்கு நெருங்கிய பழக்கமுடையோராயினர். அவருள் சான்றாண்மை சாயல் ஒழுக்கத்திற் சிறந்து பொது நல வுழைப்பின் மீதே எப்போதும் சிந்தை யூன்றப் பெற்றவருமாகிய ஸ்ரீமான் அ. பகவதி ஆதித்தர் சில வருடங்களுக்குமுன் சேகரித்து வைத்திருந்த அரிய விவரங்கள் யான் இப்புத்தகம் எழுதுவதற்குப் பெரிதும் உதவியாயின.

இப்புத்தகம் தேச சரித்திரம் போன்று யாவருக்கும் ஒருங்கே பயன்படுவதன்றாயினும் பொதுவாகப் பண்டை மரபுவரலாறுகளை ஆராய்ந்துணர விரும்புவோர்க்கும், சிறப்பாக இத்தென்னாட்டில் ஆதித்தர் மரபைக் குறித்துத் தெரிந்துகொள்ள மிக்க ஆவல் கொண்டுள்ள பல பெரியோருக்கும் இனிது பயன்படுமென்பது எமது துணிபு.

பாளையங்கோட்டை,

1-12-30. **தா. மாசில்லாமணி நாடன்.**

## 1-ம் அத்தியாயம்

# பொது விவரணம்

சீருஞ் சிறப்பும் செறிந்து விளங்குகிற நமது இந்தியா தேசம் முற்காலத்தில் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு பிரிக்கப்பட்டதில் தக்ஷிணப் பிரதேசமாகிய தமிழ் மாகாணம் சேர சோழ பாண்டிய நாடுகளாகும். இதில் சோழ நாட்டை அரசாண்டு வந்த அரசர்கள் மாத்திரம் சூரியகுல வம்சத்தவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். நீண்ட காலமாகத் தமிழ் மாகாணத்தை அரசாண்டு வந்த சேர, சோழ, பாண்டியர்கள் கி.பி. பத்து நூற்றாண்டு காலம் வரைக்கும் தங்கள் தங்கள் நாட்டோடு திருப்தி யடைந்தவர்களாய் தங்கள் தங்கள் நாடுகளுக்கே மன்னர்களா யிருந்து அரசியற்றி வந்தார்கள்.

பின்னர் சுமார் இரண்டு நூற்றாண்டு காலம் அதாவது விஜயாலயனுக்குப் பௌத்திரனும் (1-ம்) ஆதித்தனுக்குப் புத்திரனும் இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், கோதண்டராம ஆதித்தன் என்ற நான்கு குமாரர்களுக்குத் தகப்பனும் ஆகிய (1-ம்) பராந்தகன் கி.பி. 907-ல் முடி சூடப்பட்ட காலமுதல் (3-ம்) குலோத்துங்கன் அரசாண்ட கி.பி. 1190 ம் ஆண்டு வரை, சோழ மன்னர்கள் கேரள, ஈழ, பாண்டிய மன்னர்களுடனும் பரத கண்டத்திலுள்ள வேறு மன்னர்களுடனும் போர் புரிந்து ஜெயங்கொண்டு ஜெயிக்கப்பட்ட மன்னர்களைச் சிற்றரசர்களாக்கி அவர்களிட மிருந்து திறைவாங்கி வணங்காமுடி மன்னர்களாய் அரசாண்டு வந்தனர். திறைப் பணம் செலுத்தும் சிற்றரசர்க ளெல்லோரும் கி.பி. 1190 ம் வருடத்துக்குப் பிறகு திறை செலுத்தாமல் நிறுத்திக்கொள்ளவே தனது பிந்திய வாழ்வில் பிரபல்ய மற்றிருந்த (3-ம்) குலோத்துங்கன் திறை வசூலிப் பதற்குச் சக்தியற்று சோழ நாட்டை மட்டும் அரசாண்டு வந்தான்.

இந்த நிலைமையில் (3-ம்) குலோத்துங்கனுக்குப் பிறகு அவன் மகன் (3-ம்) இராஜராஜன் கி.பி. 1216 ல் பட்டத்துக்கு வந்தான். இவன் காலத்தில் பாண்டிய நாட்டை மதுரையி லிருந்து அரசாண்டு வந்த (1-ம்) மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பவன் மகாபிரபல சித்தனாயிருந்து பல நாடுகளையும் பிடித்து பேரரசனுய் விளங்கினான். அக்காலத்தில் (3-ம்) இராஜராஜன் (1-ம்) மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குக் கீழாக சோழ நாட்டில் சிற்றரசனாயிருந்து திறைப்பணம் செலுத்திவர நேரிட்டது. அவ்வாறே கி.பி. 1246-ம் வருடம் வரை அரசாண்டு வந்தான். இவனுக்குப் பிறகு இராஜேந்திரன், வீரசோழன் என்னும் மன்னர்களும் கி.பி. 1314 க்கு மேல் வீரசம்பன் என்பவனும் அரசாண்டு வந்தார்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டிருக்கும் சோழ வம்ச சரித்திரச் சுருக்கம் என்னும் புத்தகத்தில் "சோழவம்சம் குறைந்த அளவு பதினைந்து நூற்றாண்டுக் காலம் சிலகாலம் பிரபலமாகவும் சிலகாலம் பிறருக்குட்பட்டும் தொடர்ச்சியாக ஆண்டு வந்த தென்பது திண்ணம்" என்று அதன் ஆசிரியர் திருவனந்தபுர ஸமஸ்தான சாஸன பரிசோதகர் து.அ. கோபிநாதராவ் எம்.ஏ. எழுதியிருக்கிறார்.

கி.பி. 1559 ம் ஆண்டில் சோழ தேசத்தையாண்ட வீரசேகர சோழன் மதுரை மீது படையெடுத்து வந்து பாண்டிய நாட்டையாண்டிருந்த சந்திரசேகர பாண்டியனை ஜெயித்துப் பாண்டிய நாட்டை சோழ நாட்டோடு சேர்த்து அரசாண்டு வந்தான். விஜய நகரத்து வேந்தராகிய கிருஷ்ணராயரின் தளகர்த்தர் நாகமநாயக்கர் தண்டு தளத்தோடு சண்டைக்கு வந்து வீரசேகர சோழனைத் துரத்தினார்.

இவ்வாறு கி.பி. 1559-ம் வருடம் வரை அரசாட்சி செய்து வந்த சோழ மன்னர்களில் மிண்டிங்கல் என்னுமிடத்தில் கி.பி. 1018-ல் பட்டாபிஷேகஞ் செய்து 1028-ல் கங்கை கொண்ட சோழபுரத்தில் சிம்மாசன மேறி 1052-வரை அரசாண்டு வந்த ராஜகேசரிவர்மன் இராஜாதிராஜனைப் பற்றிச் சொல்லுகிற சாஸனத்தின் மெய்க்கீர்த்தியிலும் இலங்கைச் சரித்திரமாகிய மகா வமிசத்திலும் இவன் தன்னுடைய உறவினர்களில் எழுவரைச் சேரபாண்டிய சாளுக்கிய கங்க ஈழ பல்லவ கன்யா குப்ஜ நாடுகளுக்கு அரசராக நியமித்தானென்று எழுதப் பட்டிருக்கிறது.

கி.பி. 1070-ம் வருடம் முதல் 1118-ம் வருடம் வரை அரசாண்ட (1-ம்) குலோத்துங்கனது சாஸனத்தில் இவன் பாண்டியர்களோடு சண்டை செய்து ஒரு பாண்டியன் தலையை வெட்டி மன்னார் குடாக்கடலைச் சார்ந்த நாடும் பொதியமலையைச் சார்ந்த கூற்றமும் கன்னியாகுமரியும் கோட்டாறும் கைக்கொண்டு பாண்டியர்கள் பிற்காலத்து தமதென்னாதிருக்க வேண்டி எல்லைகளை நன்கு வகுத்து அவ்விடங்களிற் சேனைகளை நிறுத்திப் பத்திரப்படுத்திக் கொண்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சங்கரன்கோவில் தாலுகாவுக்கு வடபாலிருக்கிற கரிவலம் வந்த நல்லூரை யடுத்துச் சோழபுரம் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அவ்வூரில் கோட்டை கொத்தளங்கள் அரண் மனைக ளிருந்த பழைய சின்னங்கள் இன்னும் காணப்படுகின்றன. சோழபுரம் என்ற பெயருடைய வூர்கள் வேறு சிலவும் பாண்டிய நாட்டில் உள.

பாளையங்கோட்டையிலிருந்து கிழக்கு நோக்கி திருச்செந்தூருக்குப் போகும் பாதையில் பதினோராவது மைலில் அதாவது ஸ்ரீ வைகுண்டத்துக்கு மேற்கே மூன்றாவது மைலில் ஆதித்தநல்லூர் என்ற ஒரு ஊர் இருக்கிறது. இவ்வூரில் பூர்வீக மண் தாழிகள் பூமியினுள்ளிருந்து தோண்டி எடுக்கப்பட்டன. அவற்றோடு அகப்பட்ட சில சாமான்களைச் சென்னை பொருட் காட்சிசாலைக்குக் கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள். இவ்வூரை யடுத்து வடக்கே ஒரு மைல் தூரத்தில் பூர்வீகமான ஒரு நகரம் இருந்திருக்க வேண்டுமென்று ரீக் துரை கண்டு பிடித்தார். அதற்குரிய சில அடையாளங்கள் அங்கு இருக்கின்றன.

மேற்கண்ட சோழ மன்னர்களாகிய ராஜகேசரிவர்மன் இராஜாதி ராஜனின் உறவினர்களோ, (1-ம்) குலோத்துங்கனது பிரதிநிதிகளோ பாண்டிய நாட்டி லிருந்து அரசாண்ட இடம் இந்த சோழபுரம், ஆதித்தநல்லூர் என்பவைகளாய் இருக்க வேண்டு மென்பதும் பிற்காலத்தில் இந்த உறவுப் பிரதி நிதிகளின் வம்சத்தார் பாண்டியர்களுக்குட்பட்டு ஐக்கியமாகி யிருக்கக் கூடுமென்பதும் ஊகித்தறியலாம்.

இந்த நூலில் கி.பி. பதினாறாம் நூற்றாண்டு முதல் தென்பாண்டி நாட்டிலிருந்து அரசாண்டு வாழ்ந்து வருகிற ஒரு

சோழ வம்சத்தாரின் சரித்திரம் வரையப்பட்டுள்ளது. இந்நூலுக்கு மூலபுருடன் கி.பி. 1560 ம் வருடத்திலிருந்த காயம் பொழில் ஆதித்த நாடன் என்பவராவர். இந்த ஆதித்த நாடன் சோழ நாட்டில் கி.பி. 1559 ல் ஆண்ட கடைசிச் சோழனாகிய வீரசேகரச் சோழனாகவோ அவன் குமாரனாகவோ இருக்க வேண்டும். அல்லது ராஜகேசரிவர்மன் இராஜாதிராஜன் (1-ம்) குலோத்துங்கன் இவர்களின் உறவுப் பிரதிநிதிகளின் வம்சத்தினராக இருக்க வேண்டும். எவ்வாற்றானும் இவர் சோழ வம்சத்தினர் என்பது தெளிவாகும்.

இதைத் தவிர இந்த ஆதித்த நாடனுக்கு முன்னுள்ளோர் யார் என்பது ஆராய்ச்சியில் துலங்கவில்லை யாதலாலும், மேலே கூறிய சான்றுகளே பெரும்பாலும் ஒத்து வருவதாலும், இதை மறுத்தற்கு வேறு ஆதாரங்கள் தோன்றும் வரைக்கும் இங்கனம் கொள்ளலே அமைவுடையதாம்.

## 2-ம் அத்தியாயம்

# மானாட்டு அரசும் சோழவம்ச ஆதித்தர்களும்

பழைய பாண்டிய தேசமானது தற்காலம் மதுரை இராமநாதபுரம் திருநெல்வேலி என மூன்று ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் திருநெல்வேலி ஜில்லா எட்டுத் தாலுகாக்களைக் கொண்டுள்ளது. இவைகளில் திருச்செந்தூர் தாலுகா ஒன்று. இந்தப் பிரதேசம் கி.பி. 1560-ம் வருடம் முற்கூறியவண்ணம் சோழ வம்ச பரம்பரையில் வந்த ஆதித்த நாடன் ஆளுகையிலிருந்து வந்தது. ஆதித்தநாடன் திருச்செந்தூரை யடுத்த காயம்பொழிலில் சிற்றரசனாயிருந்து அரசியற்றிவந்தார். இக்காலத்தில், பாண்டியர்களில் ஒருவனாகிய வீரபாண்டியன் என்போன் தனது புத்திரியின் வதனமானது அசுவத்தை ஒத்திருந்தபடியால் அவள் சுயரூபம் பெறுவதற்கு மனதிலே ஸ்ரீ சுப்பிரமணியரைத் தியானித்து பக்தி கொண்டு திருச்செந்தூர் வந்து பஹவான் திருவடிகளை நினைந்து ஆலையத்தருகே ஒரு ஸ்னானக்கட்டத்தில் தன்மகளுக்கு ஸ்னானம் செய்வித்தபோது அவள் சுயரூபம் பெற்றாள். அதுமுதல் அந்த ஸ்னானக்கட்டம் வதனாரம்ப தீர்த்தமென்ற பெயரால் விளங்குகிறது. பாண்டியன் மகளுக்கு நல்லமுகம் வந்ததும் பழைய குதிரை முகத்தை ஸ்ரீபுவன மகாதேவி என்னும் அம்மன் ஏற்றுக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. அந்த அம்மன் வெயிலுகந்த அம்மன் என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

அப்பால் வீரபாண்டியன் தனது புத்திரியை அவ்விடத் திற்கருகில் காயம்பொழிலிலுள்ள முன்சொன்ன ஆதித்தநாடன் என்னும் சோழனுக்கு மணம் செய்வித்து தனது மகளிருக்கும் புரிக்குத் தனது பெயரினாலேயே வீரபாண்டியன்பட்டினம் என்று பெயர் விடுத்து ஏகினான். அங்கு அவன் அன்று கட்டுவித்த குதிரையின் சொரூபம் இன்றும் நிலைத்துநிற்கிறது. காயம்பொழிலும் வீரபாண்டியன்பட்டணம் என் வழங்கப்

படுகிறது. வீரபாண்டியன்பட்டணத்தையடுத்த திருச்செந்தூரை சதுர்வேதமங்கலம் என்று கூறுவர் முன்னோர்.

தக்ஷிணமாற நாடார்களுடைய பொருளுதவியினாலும் இந்த ஆதித்த நாடனுடைய முயற்சியினாலும் பாண்டிநாட்டின் பல ஊர்களில் மகமைப் பேட்டைகள் என்ற வர்த்தக மத்தியஸ்தலங்கள் கட்டப்பட்டுள்ளன. அவைகளிற் பல இன்னும் இருந்து வருகின்றன.

கி.பி. 1564-ம் வருடம் வரை திருநெல்வேலியிலிருந்து அரசாண்டுவந்த வீரபாண்டியனுக்கும் அதற்குமேல் தென் காசியிலிருந்து அரசாண்டுவந்ததாகச் சொல்லப்படும் அதி வீரராமபாண்டியனுக்கும் ஆதித்தநாடன் திறை செலுத்திக் கொண்டு சிற்றரசனாகவே இருந்து வந்திருக்கக்கூடும். ஷை வீரபாண்டியனே ஆதித்த நாடனின் மாமனாரென்பது யூகித்துக்கொள்ளக்கூடியது.

ஆதித்தநாடன் தம்முடைய நாட்டில் மிஞ்சிய வருமானத்தை யெல்லாம் திருச்செந்தூரிலுள்ள சுப்பிரமணிய சுவாமியின் கைங்கர்யத்துக்கே செலவுசெய்து, கோவில் காரியாதிகளை ஒழுங்காய் மேற்பார்ப்பதற்குச் சந்நியாசியான ஒருதம்பிரானை நியமித்திருந்தார். சுவாமியின் திருவாபரணங்களடங்கிய கருவூலமும் பணபண்டாரங்களும் எல்லாம் இவருடைய மேற்பார்வையிலேயே இருந்துவந்தது. சுப்பிரமணிய சுவாமிக்குரிய பூஜைச் செலவுகளெல்லாம் இவராலேயே நடந்துவந்தது. திருச்செந்தூரிலுள்ள வெயிலுகந்த அம்மனென்னும் ஸ்ரீ புவனமகாதேவியையும் கடற்கரையிலுள்ள சுப்பிரமணியக்கடவுளையும் பயபக்தியுடன் அன்றாடம் தொழுதுவருவார். ஒருகால் ஆதித்த நாடனின் கனவில் ஸ்ரீ முருகக்கடவுள் தோன்றி "உன்னை எனது வலது கண்போல் பார்த்துக்கொள்வேன்; உன்னுடைய வாழ்வாவது உனது சந்ததியார் வாழ்வாவது கடல்வற்றின போதிலும் வற்றாது" என்று வரமருளியதாகச் சொல்லப்படுகிறது.

ஆதித்த நாடனுக்குப் புதல்வர்கள் இருவர். அவர்கள் சிவந்தி ஆதித்தநாடன், குமாரசாமி ஆதித்தநாடன் என்போர். பிதாவாகிய ஆதித்த நாடனின் காலத்துக்குப்பிறகு

இவர்களிருவரும் திருச்செந்தூருக்கு ஐந்து மைலுக்கு மேற்கிலுள்ள ஓரிடத்தை வாசஸ்தலமாகக் கொண்டனர். அந்த வாசஸ்தலம் காயாமொழி என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

தென்காசியிலிருந்து அரசாண்டுவந்த அதிவீரராம பாண்டியன் உத்தரவுப் பிரகாரம் பாண்டியர்களுடைய பெண்டுகளெல்லாம் கோஷா முறையைக் கைக்கொள்ளவே ஆதித்தநாடன் குமாரர்களும் தங்களுடைய பெண்களும் கோஷாமுறையைக் கொள்ளும்படிச் செய்துகொண்டனர். தந்தையைப்போலவே இவர்களும் தங்கள் வருமானத்தையெல்லாம் ஸ்ரீ ஷண்முகக்கடவுளுக்காகச் செலவுசெய்தது மல்லாமல் திருச்செந்தூரிலிருக்கும் சிவன்கோவிலுக்கு முன்னால் கி.பி. 1584-ம் வருடம் மண்டபமும் கட்டி முடித்தனர். 20-10-30-ல் நாடார் குலமித்திரனில் தோன்றும் பின்வரும் விஷயம் அவர்களின் உரிமையை நன்கு விளக்குகிறது.

## பழந்துண்டு

"மித்திரன் மலர் 11 இதழ் 48-ல் "யோசனை கூறுங்கள்" என்ற விஷயத்தில் ஆலய விஷய தஸ்தாவேசுப் பழந்துண்டு ஒன்றைக் குறிப்பிடுவதாயுள்ளது பின்னதாகும்:-

திருச்செந்தூர் சிவன் கோவிலுக்குள்ளிருக்கும் மண்டபம், முற்காலத்தில் திருச்செந்தூர் தாலுகா, காயாமொழி சிவந்தி ஆதித்தநாடார் என்பவரால் கட்டிவைக்கப்பட்டதுந்தவிர, மேற்படி கோயில் சிவக்கொழுந்தீஸ்வரர் சந்நிதி ஆயிரக்கால் பந்தல் மண்டபமும், அதைச்சேர்ந்த தண்ணீர்ப்பந்தல் மண்டபமும், நந்தவனமும் மேற்படி சிவந்தி ஆதித்த நாடாராலும், குமாரசுவாமி ஆதித்தநாடார் என்பவராலும் கட்டப்பட்டன. அவைகளின் குறைவேலையை நாளதுக்கு சுமார் 100-வருஷங்களுக்கு முன் ராமலிங்க ஆதித்த நாடார் என்பவர் கட்டிமுடித்தார். துவக்க முதலே இந்த மண்டபங்கள் மேற்படி ஆதித்த நாடார்களின் ஆதீனத்திலிருந்து வந்தன. ஆவணி, மாசி மாத உற்சவங்களில் மேற்படி பந்தல் மண்டபத்துக்குள் மேற்படி ஈஸ்வரர் வரும்போது நடக்கும் நைவேத்தியச்செலவு ஆதித்த நாடார்களால் நடத்தப்படும். மேற்படி மண்டபத்து முகப்பிலிருக்கும் 6-ம் திருநாள் சாட்டையடி மண்டபப்படியும் மேற்படி ஆதித்த நாடார்க

ளுடையது. இதுபோக திருச்செந்தூர் கோவிலுக்கு (ரதம்) தேர்செய்து வைத்ததும் ஆதித்த நாடார்கள் தான். இது விஷயமாய் திருச்செந்தூர் கோவில் 'பிரபந்தம்' என்னும் பழைய நூலில், "அட்டதிசை புகழ் ஆதித்த நாடார் கொட்டகை தேரையும் பாராய்" எனப் பாட்டு தருகிறது. ஆவணி, மாசி மாதங்களில் ரத உற்சவம் நடக்கும்போது, மேற்படி ஆதித்த நாடார்களை மேற்படி கோவில் ஸ்தானீகர்கள், தாசிகள் முன்பின்வர, மேளதாளங்களோடு மிக்க மரியாதையாய் மேற்படி தேருக்குச் சமீபமாக அழைத்துவர, அவர்கள் முன்னாயத்தமாய் பலி, விடலை எறிதல் முதலிய கிரியைகளை நடத்திக்கொண்டு, மேற்படி தேர்வடத்தைத் தொட்டுக்கொடுத்த பின்பே இதர குலத்தவர்கள் தேரை இழுப்பதுண்டு. இந்த வழக்கம் ஞாபகத்துக்கெட்டாக்கால முதல் நடந்து வருகிறது. மேற்படி தேர் அலங்காரச் செலவையும் இந்த ஆதித்த நாடார்களே கொடுத்து வருகிறார்கள். இது விஷயமாய் 'ஆர்வந்தால் தேரோடும்? ஆதித்தநாடன் வந்தால் தேரோடும்" என அவ்வட்டகையில் யாவருமறிந்த பழமொழியிருந்து வருகிறது. மேலும் பிரதிதினமும் சுப்பிரமணியர் ஆலயத்தில் நடக்கும் 'அறுபத்துமூவர்' அர்ச்சனைச்செலவு மேற்படி ஆதித்த நாடார்களால் நடந்து வருகிறது. விசாககாலத்தில் ஊரடங்க பிராமண போஜனம் ஆதித்த நாடார்களால் கொடுக்கப்பட்டு வருகிறது. ஐப்பசி மாதத்தில் சுப்பிரமணியருக்கு திருக் கல்யாண உற்சவம் நடக்கும்போது முதல்நாளில் மாப்பிள்ளை வீட்டுச்செலவாக கல்யாணவிருந்தும், ஊரடங்க பிராமண போஜனமும் ஆதித்த நாடார்களால் நடக்கும். மறுநாள் பெண் வீட்டுவகையாய் நடக்கும் விருந்தும், ஊரடங்க பிராமண போஜனமும், வள்ளியம்மை தினைப்புனமண்டபப்படியும், நட்டாத்தி ஜமீன்தாரான திருவழுதி நாடார் செலவில் நடக்கும். ஆவணி, மாசி மாதத்திருநாட்களில் திருவாங்கூர் மஹாராஜா வால் நடத்தப்படும். உற்சவத்தின் இரண்டாம் 'சேவை' மேற்கண்ட ஆதித்த நாடார்களால் நடத்தப்படும். மேற்படி தேவஸ்தான விஷயமாகவும் தேர் விஷயமாகவும் ஆதித்த நாடார்கள் முற்காலத்தில் மிகுதியான மானியங்கள் விட்டுக் கொடுத்திருப்பதில், சிலவற்றுக்கு அவர்களே நாளதுவரை

ஹக்தார்களாகவும் இருந்து வருகிறார்கள். அப்படியே மேற்படி சுப்பிரமணிய கோவிலின் "ஆட்ட விசேஷம், மாஸ்த விசேஷம், ஆற்று திருமஞ்சனம்" இவைகளுக் காகவும், திருச்செந்தூரிலுள்ள நந்தவன பரிபாலனம், மடத்து திருவிளக்கு இவைகளுக்காகவும் நட்டாத்தி திருவழுதி நாடார் குடும்பத்தார் விட்டுக்கொடுத்த மானியச் சொத்துக்கள் சிலவற்றின் ஹக்தார்வேலை, மேற்படி திருவழுதிநாடார் குடும்பத்திலிருந்து வருகிறது. கார்த்திகை தீப உற்சவத்தில் திருச்செந்தூரில் நடும் 'சொர்க்கப்பனை'யும் அதைச் சேர்ந்த செலவும் ஆதித்தநாடார்களால் நடத்தப்பட்டு வருகின்றன. வெயிலுகந்த அம்மன் 8-ம் திருநாள் மண்டபப்படி செலவு பூராவும் ஆதித்தநாடார்களால் நடந்து வருவதுமல்லாமல் தெற்குரதவீதியிலிருக்கும் மண்டபமும் அதைச் சேர்ந்த நந்தவனமும் ஆதித்தநாடார்களின் ஆதீனத்திலேயே இருந்து வருகின்றன. மேற்படி மண்டபச் செலவுக்காகவும், அதி லிருக்கும் (கணபதி).பிள்ளையார் பூசைக்காகவும் முன்னமே மேற்படி நாடார்கள் போதிய மானியமும் விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். பிரதிமாதத்தின் கடைசி சுக்கிரவாரத்தில் சுப்பிரமணியர் கோவிலில் நடக்கும் நைவேத்திய அலங்கார எழுந்திருத்தம் செலவு பூராவும் நாஞ்சினாட்டைச் சேர்ந்த ராஜாக்கள் மங்கலம், பத்மநாப நாடார் குடும்பத்தவரால் பரம்பரையாய் நடந்துவருகிறது. பிரதிதினமும் மேற்படி கோயிலில் நடக்கும் 'உதயமார்த்தாண்ட பூசைக் குரிய புஷ்பச் செலவு குட்டம் குமாரவீரமார்த்தாண்ட நாடார் குடும்பத்த வரால் நடந்துவருகிறது. மேற்படி கோவில் கோபுரத் தின் மேலவாசலிலிருக்கும் அம்மனுக்கு பிரதி தினமும் நடக்கும் பூசைச்செலவு மூலப்புளி, சிவ சுப்பிரமணிய நாடார் குடும்பத்தவரால் நடந்துவருகிறது. இப்படியே இன்னும் பலவுண்டு.

இவர்கள் இருவரும் காயாமொழியில் தென்புறத்திலும் வடபுறத்திலும் இரண்டு மாளிகைகள் கட்டி அதையே தங்கள் இருப்பிடமாகக் கொண்டதால் சிவந்தி ஆதித்தநாடன் சந்ததியார்களெல்லோரும் தெற்குவீட்டுக்காரரென்றும் குமார்சாமி ஆதித்தநாடனின் சந்ததியார்களெல்லோரும் வடக்கு வீட்டுக்காரரென்றும் சொல்லப்பட்டார்கள். தெற்கு வீடு சிவந்தி ஆதித்த நாடனின் புதல்வர் சுப்பிரமணிய

ஆதித்தநாடன் என்பவராகும். இவர் அடிக்கடி தேசாந்திரம் சென்றுவருவார். தேசாந்திரப்பிரயாணத்தில் வழிதப்பிய வேளைகளில் ஸ்ரீமுருகக்கடவுள் ஒரு ரிஷபமாகவந்து காட்சி யளித்து அவருக்கு வழிகாட்டுவதுண்டு என்று சொல்லப்படுகிறது. இந்த சுப்பிரமணிய ஆதித்த நாடனின் புதல்வர்கள் ஐவர். அவர்கள் ஆதித்த நாடன், திக்கெல்லாங் கெட்டிநாடன், அறுபத்துமூவர் ஆதித்தநாடன், தாயங் கொட்டை ஆதித்த நாடன், ராமலிங்க ஆதித்தநாடன் என்பவர்களாவர்.

வடக்கு வீடு குமாரசாமி ஆதித்த நாடனின் புதல்வர் ராமசாமி ஆதித்த நாடன், அவருக்கு சுப்பிரமணிய ஆதித்த நாடன், தீத்தா ரப்ப ஆதித்த நாடன் என இரு குமாரர்கள் இருந்தனர்.

இவர்களெல்லோரும் அக்காலத்தில் காயாமொழியிலுள்ள துர்க்கை அம்மன் என்ற கௌமாரிதேவிக்கு ஒரு ஆலயம் கட்டியது மல்லாமல் தங்கள் சிம்மாசன ஸ்தலமாக சதுர்க்கை என்றொரு கட்டிடமும் கட்டினார்கள். பிற்காலத்திலுள்ள போடிநாயக்கனூர் சோமசுந்தரக் கவிராயர் முத்துசாமி நாயுடு இந்த சதுர்க்கையைப் பற்றி

''தென்ற லுலாவுந் திருமகளும் வீற்றிருப்பாள்
மைந்தர் குலதெய்வ ரம்பையர்வந் - துந்தவே
ஆதித்த பூப னருள்சதுர்க்கை மீதிருந்து
வேதத் தமிழ்மணக்கு மே.''

என்று பாடியிருக்கிறார்.

இவ்வாறு இவர்கள் வாழ்ந்து வரும் காலத்தில் காயா மொழிக்கு இரண்டு மைலுக்குத் தென்மேற்கும் திருச்செந் தூருக்கு ஏழு மைலுக்கு மேற்குமாக மானாடு என்னும் பேரூரைத் தலைநகராகக் கொண்டுள்ள மானவீரவளநாடு என்றொரு பகுதி யிருந்தது. இப்பகுதி வடபத்து, தென்பத்து என இரண்டாகப் பிரிக்கப்பட்டும் இருந்தது. இவற்றைப் பாண்டிய ராஜ வம்சத்தினர் ஆண்டு வந்தனர். வடபத்து இலாகாவில் அரசாண்டு கொண்டு வந்த வழுதிகளுக்குள் ஒற்றுமையில்லாதிருந்தது.

ஏழு கரைக்காரர் அல்லது ஏழு தண்டிகைக் காரராகிய வெட்டியாண்டான் என்னும் வெற்றி கொண்ட நாடன் சிம்மங்கரையான் என்ற சிமிளி, பின்னங்கரையான்,

குமாரக்கரையான், அத்தி பெரியவன், அறம்வளர்த்தாண்டான், சரவணப் புதியவன், என்ற எழுவரும் வீரப்ப நாடன் தீத்தியப்ப நாடன் வடமலைநாடன் என்ற மூவருக்குமுள்ள பாகத்தைக் கொடுக்காமல் தாங்களே நிர்வகித்து அநுபவித்து வந்தனர். எனவே இந்த மூவரும் காயாமொழியிலுள்ள ஆதித்த நாடன் திக்கெலாங் கெட்டி நாடன் ஆகியவர்களைத் துணைவேண்டினர். ஆதித்தர்களும் இம்மூவருக்கும் பணமும் படையும் கொடுத்துதவினர். இரு திறத்தினருக்கும் போர் நிகழ்ந்தது. போரில் ஏழுகரைக்காரர் தோற்றுப் போனதால் ஆதித்தர்களும் இம்மூவரும் ஏழு தண்டிகைக்காரர்களின் ஆட்சியான பூமியைக் கைப்பற்றிக்கொண்டனர். அது முதல் ஆதித்தர்களும் அம்மூவர்களும் உடன்பிறந்த சகோதரர்கள் போல் வாழ்ந்து வந்ததுடன் குதிரைமொழிக் கிராமத்தி லிருக்கும் சுந்தராக்ஷி அம்மன் கோவிலுக்கும் அதன் சமீபத்தி லிருக்கும் கலியுகவரதர் கோவிலுக்கும், அதன் மேற்கிலிருக்கும் கருக்குவேலையன் கோவிலுக்கும் பள்ளிப் பத்துக்கு வடபுறமாயிருக்கும் வெளிநின்ற பத்திரகாளியம்மன் கோவிலுக்கும் மிகுந்த மானியங்கள் விட்டுக்கொடுத்தார்கள். இவைகளை யெல்லாம் விபரமாகச் சொல்லகிற ஒரு தாமிர சாஸனம் கலியுகவரதர் கோவிலில் வருடந்தோறும் நடந்து வருகிற பங்குனி மாத உத்தரத்திலிருந்து ஐந்தாம் நாள் திருவிழாவில் பழங்குளத்துப் பிள்ளைமாரால் கொண்டு வரப்பட்டு நாளதும் வாசிக்கப்படுகிறது. செம்மறிக்குளம் கிராமத்தின் தென்பாலிருக்கிற நங்க மொழியிலுள்ள காளத்தியீஸ்வரர் கோவிலுக்கும், இவர்கள் ஏராளமான கைங்கர்யங்கள் செய்து வந்ததாகச் சொல்லப்படுவதுண்டு.

நிற்க, வீரப்ப நாடன் தீத்தியப்ப நாடன் வடமலை நாடன் ஆகிய மூவர்களுடன் ஆதித்தர்கள் சகோதர தத்துவமாக நடந்து வந்த போதிலும் அம்மூவரும் ஆதித்தர்களை விசேஷமாக சிரேஷ்டராக மதித்து வந்தனர். ஆலயத்துள் காணிக்கை செலுத்துதல் பிரசாதம் பெறுதல் ஆட்சிமுறையில் ஆலோசனை பெறுதல் இவையாவும் ஆதித்த நாடனுக்கே முதலில் அருளப்பட்டன.

இவ்வாறு இருக்கையில் அம்மூவர்களில் வடமலை நாடன் காலஞ்செல்லவே அவரின் ஒரே குமாரராகிய அய்யக்குட்டி

நாடனும் வீரப்ப நாடனும் தீத்தியப்ப நாடனும் அவர்கள் உறவினர் ஐவரும் திக்கெலாங்கெட்டி நாடனும் ஆதித்த நாடனைத் தலைவராகக்கொண்டு மானவீர வளநாட்டு வுடபத்து இலாகாவை அரசாண்டு வந்தனர்.

வடமலை நாடனின் சந்ததியர்கள் பள்ளிப்பதிலும் வீரப்ப நாடனின் சந்ததியார்கள் சீருடையாபுரத்திலும் தீத்தியப்ப நாடனின் சந்ததியர்கள் பரமன்குறிச்சியிலும் நாளதும் வசித்து வருகிறார்கள்.

சகாப்தம் 1561-ல் (கி.பி. 1639) எழுதப்பட்டதாய் திருச்செந்தூர் தாலுகா குதிரைமொழி ரிஸர்வ் பாரஸ்ட்டின் (முத்துக் கிருஷ்ணாபுரத்தின்) தென் ஓரத்தில் நிற்கிற ஒரு பெரும் சாஸனக் கல்லில் அக்காலத்தில் மேற்கண்ட மானவீர வளநாட்டு வடபத்து இலாகாவில் ஆதித்த நாடன், கோவிந்தப் பணிக்க நாடன். வீரப்ப நாடன், தீத்தியப்ப நாடன், பிச்ச நாடன், அய்யக்குட்டி நாடன், திக்கெலாங்கெட்டி நாடன், நினைத்தது முடித்த நாடன், அவத்தைக் குதவி நாடன், குத்தியுண்டா நாடன் என்பவர்கள் ஜமீன்தார்களும் பிரபுக்களும் தங்கள் இலாகாவுக் குட்பட்ட சர்வஜாதிக் குடிகளின் பேரிலும் தீர்வைகளை ஏற்ற, இறக்க, ரத்துச் செய்ய அதிகாரமுடையவர்களா யிருந்து அக்காலத்தில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் என்னும் வடுக ராஜாவின் துரைத் தனத்திற்குத் தீர்வை முதலிய விஷயங்களில் எப்பொறுப்பு முடையவர்களாய் நாடாண்டு வந்ததாக நாளதும் துலங்கிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு அக்காலத்தில் அரசாட்சி ஒழுங்காக நடை பெற்று வரும் பொழுது கோயில், குளம், அரசியல், ஜனசமூகம் முதலிய பல துறைகளிலும் ஆதித்த நாடன் முதன்மை ஸ்தானம் வகித்து வருவதையும் தாங்கள் அவர் சொற்படி கேட்டு நடந்து வருவதையும் வீரப்ப நாடன் நினைத்து அவர்மீது பொறாமை கொண்டார். பாண்டிய வம்சத்தின ரென்று சொல்லிக் கொண்டு தாங்கள் எண்மரிருந்தும் சோழவம்சத்திலிலுள்ள ஒருவருக்குக் கீழ்ப்படிந்து நடந்து வருவது மானக்குறைவெனக் கருதினார். எனவே அவரை மானவீர வளநாட்டை விட்டுத் துரத்த வேண்டும். அல்லது கொலைசெய்து விடவேண்டுமென்று

தமக்குள் தீர்மானித்துக் கொண்டார். அக்காலத்தில் திக்கெலாங்கெட்டி நாடன் இறந்து போகவே கடவுள் தமது பங்கிலிருப்பதாக வீண் கனவு கண்டு கொண்டிருந்தார். ஆதித்த நாடனைக் கொன்றுவிட்டு அங்கனம் கொன்றதற்குக் காரணமாய் அவர் மீது ஏதேனும் ஒரு அபாண்டமான பழியைச் சுமத்தி விடலாம் என்பது வீரப்ப நாடனின் எண்ணம். அதுவுமல்லாமல் தான் மிக்க வீரதீரம் பொருந்திய பராக்கிரமசாலியாகையால் கொன்றதற்கு ஒரு காரணமுங் கூடச் சொல்லாமல் தமது சகாக்களாகிய பாண்டியர்களையும் தமக்குக்கீழே அடக்கி வைத்துத் தான் தலைவனாக இருந்து மானவீர வளநாட்டை அரசாண்டு வரலாம் என்பதும் வீரப்ப நாடனின் கருத்து.

இத்தகைய கருத்து நெடு நாளாக நெஞ்சில் வைத்துக் கொண்டிருந்த வீரப்ப நாடனுக்கு அவர் சகாக்களாகிய பாண்டியர்களிற் சிலரும் உடந்தையாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

மானாட்டு அரண்மனையின் ஸ்நான அறையில் வழக்கம்போல் ஒரு நாட் காலையில் ஆதித்த நாடன் எண்ணெய் ஸ்நானம் செய்து கொள்ளப் புகுத்தபோது ஏற்கனவே அங்கு ஒளிந்திருந்த வீரப்ப நாடன் பின்புறமாகச் சென்று வாளை யெடுத்து ஓங்கி ஒரே வெட்டாக அவரை வெட்டிவிட்டுப் பரிசாரகர்கள் கைக்குத் தப்பி ஓடிவிட்டார். பரிதாபம்! தலை தரையில் உருண்டு விட்டது. உதிரம் பெருகிற்று உயிரும் போனது. உடலுஞ் சாய்ந்தது. கோரமான இந்தக் காட்சியை அரண்மனையின் மற்றொரு அறையிலிருந்த பிச்சை நாடன் கண்டு ஓடி வந்தார். வீரப்ப நாடனை நோக்கி அடாபாவி! இது நியாயமா? இப்படியுஞ் செய்தாயே, தெய்வமும் உண்டே என்று மட்டுஞ் சொல்லி விட்டு "ஆதித்த நாடனைக் கொலை செய்த வீரப்ப நாடன் ஆதித்த நாடனின் மனைவிக்கும் குழந்தைக்கும் தீங்கும் செய்யக் கூடுமாகையால் முதலில் அவர் மனைவியையும் குழந்தையையுமாவது பிழைக்கச் செய்வோம்" என்ற எண்ணத்துடன் அந்தப் புரத்தை நோக்கி விரைந்து சென்றார். நிகழ்ந்த அநியாயத்தைப் பணிப் பெண்களிடம் சொல்லி அரற்றி அழுதார். வெளிக்குத் தெரியின் தமக்கே மோசம் வருமாகையால் இதுசமயம்

வருத்தத்தை யெல்லாம் பொறுத்துக் கொண்டு துரிதமாகப் பின்வாசல் வழியாக எஜமாட்டியைக் காயாமொழிக்குப் புறப்படச் சொல்லுங்கள் என்று ஆக்ஞாபித்தார்.

குழந்தை நித்திரையி லிருந்தது. அதனை அப்படியே எடுத்து ஒரு பஞ்சுப் பெட்டியில் வைத்து குழந்தையின் மேல் பஞ்சை லகுவாகத் தூவி மறைத்து ஒரு தாதியின் தலையில் வைத்து அவளைக் காயாமொழிக்குக் கொண்டு போகச் செய்தனர். அவள் ஒரு பஞ்சுப்பெட்டியைக் கொண்டு போவது போல் குழந்தையைக் கொண்டு போனாள். க்ஷணநேரத்தில் சில தாதிகளும் சில காலாட்களும் சூழ்ந்து வர மூடுபல்லக்கி லிருந்துகொண்டு ஆதித்த நாடன் மனைவிதென் திருப்பேரை மாவீடுபெண்ணை திருவழுதி நாடர் புதல்வி வெள்ளையம்மை நாடாச்சியும் காயாமொழிக்குப் போய்க் கொண்டிருந்தார்.

அதிர்ஷ்டவசமாக குழந்தையும் தாயும் யாதொரு இன்னலுமில்லாமல் காயாமொழி வந்து சேர்ந்தனர். காயா மொழியில் அப்பொழுது அறுபத்து மூவர் ஆதித்த நாடன், தாயங்கொட்டை ஆதித்த நாடன், ராமலிங்க ஆதித்த நாடன், சுப்பிரமணிய ஆதித்த நாடன், தீத்தாரப்ப ஆதித்த நாடன் என்பவர்களிருந்தனர். அவர்கள் இந்த விபரீத சம்பவத் தைத்தெரிந்து கொண்டதும் யுத்த சன்னத்தராய் மானாடு சென்றார். ஆனால் அங்கு யுத்தம் நடைபெறவில்லை. மானாட்டில் சில பாண்டியர்கள் இவர்களுடன் சேர்ந்து கொண்டனர். சில பாண்டியர்கள் யாருக்கு வந்த விருந்தோ என நடுநிலைமை வகித்து ம்றைந்து கொண்டனர். வீரப்ப நாடன் மட்டும் அகப்பட்டுக்கொண்டார். பழக்குப்பழி வாங்கிக் கொலைசெய்யப்பட்ட ஆதித்த நாடனுடன் வீரப்ப நாடனையும் சேர்த்தே புதைத்து விடவேண்டுமென்று இவர்கள் தீர்மானித் திருந்தார்கள். ஆனல் ''வீரப்ப நாடனை வெட்டவேண்டாம். அவன் பழி அவனுடனேயே இருக் கட்டும்'' என்று வெள்ளையம்மை நாடி சொல்லி யிருந்தார். அந்த வார்த்தைக்காக வீரப்ப நாடனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து விட்டுக் கொலை செய்யப்பட்ட ஆதித்த நாடனுக் குரிய ஈமக்கிரியைகளை நடத்தி முடித்துக் காயாமொழி வந்து சேர்ந்தனர்.

இதன் பின்னர் மானாட்டில் பலவிதமான குழப்பங்கள் நடைபெற்றுக் கொண்டே யிருந்தன. என்றாலும் ஆதித்தர் களின் அரசாட்சி நடைபெற்றே வந்தது. பிரஜைகளும் ஆதித்தர்களின் அரசாட்சியையே விரும்பினர். மதுரை மன்னராகிய திருமலை நாயக்கரது ஆதரவும் ஆதித்தர்களுக்கு இருந்து வந்தது. மானவீரவள நாட்டின் வடபத்திலாகா விலுள்ள ஒருசிறு ஊரையே வாசஸ்தலமாகக்கொண்டு வெள்ளையம்மை நாடாச்சியை அரசியா யிருக்கச் செய்து அவரின் பிரதிநிதிகளாக தாயங்கொட்டை ஆதித்த நாடன் சுப்பிரமணிய ஆதித்த நாடன் ஆகிய இவர்களும் நாட்டை யாண்டு வந்தார்கள்.

இவ்வாறு ஆண்டு வருங்காலத்தில் வெள்ளையம்மை நாடாச்சியின் குமாரனாகிய மருதப்பன் வாலிபப் பிராயமடைந்து கி.பி. 1670-ம் வருடத்திலிருந்து நாட்டை யாண்டு வந்தார். மருதப்பன் என்பது அவர் பெயராயிருந்த போதிலும் அவர் ஆறுமாதக் குழந்தையாக இருக்கும் பொழுது பஞ்சுப் பெட்டியில் வைத்துக் காப்பாற்றிக் காயாமொழிக்குக் கொண்டு வரப்பட்ட காரணத்தால் பஞ்சாதித்தன் என்ற பெயராலும் அழைக்கப்பட்டார். இந்த இரு பெயராலும் அவர் வாசஸ்தலம் மருதூரென்றும் அவர் ஆண்டநாடு பஞ்சமாநாடு என்றும் வழங்கப்பட்டது.

மருதப்பன் என்ற பஞ்சாதித்தன் இவ்வாறு சுமார் பத்துவருட காலம் நாடாண்டு வருகையில் காயாமொழி யிலுள்ள அறுபத்து மூவர் ஆதித்த நாடன், ராமலிங்க ஆதித்த நாடன், தீத்தாரப்ப ஆதித்த நாடன் ஆகியவர்கள் திச்செந்தூரிலுள்ள தங்கள் குல தெய்வத்துக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டே வந்தனர். கி.பி. 1675-ம் வருடம் அவர்கள் திருச்செந்தூரிலுள்ள சிவன்கோவிலில் தங்கள் முன்னோர்களைத் தொடர்ந்து தாமும் ஒரு மண்டபமும் கட்டினர். பின்னர் அவர்களில் ஒருவர் பின் ஒருவராகக் காலமாயினர். அவர்களில் சுப்பிரமணிய ஆதித்த நாடன் தவிர மற்றவர்களுக்குச் சந்ததியில்லை.

தமது சிறிய தந்தையர்களெல்லாரும் காலமானதும் மருதப்பன் என்ற பஞ்சாதித்தன் காயாமொழிக்கே வந்து தமது முன்னோர்களைப்போல் அவ்வூரையே வாசஸ்தலமாகக்

கொண்டார். இவர் காயாமொழிக்கு வந்ததும் மருதூரிலுள்ள இவரது குடிபடைகளும் காயாமொழிக்கே வந்து குடியேறி விட்டனர். இதனால் காயாமொழியும் மருதூர் என வழங்கப்படுகிறது.

இந்த மருதப்பன் என்ற பஞ்சாதித்தன் காலத்தில் அரசாட்சியானது ஒழுங்காகவும் நியாயமாகவும் நடை பெற்றது. தர்மசாலியாகவும் பிரக்யாதியுள்ளவராகவும் விளங்கினார். திருச்செந்தூரில் கோவில் திருப்பணிவேலைகளும் சுவாமியின் அநேக ஆபரணங்களும் இவர் காலத்தில் செய்யப்பட்டன. இதரஉற்சவமும் இவராலேயே ஏற்படுத்தப்பட்டது. பத்துத் திருநாளையும் வரிசையாக நடத்தியது இவர் தான். இவரைப்பற்றி சாந்தப்பக் கவிராயர் என்பவர்,

**''அந்த ஆதித்தனையும் ஆனமரு தூர்வாழும்**
**இந்த ஆதித்தனையும் எண்ணுங்கால் முந்தமுந்த**
**காய்வா னாதித்தனவன் சந்ததமும் கர்ணனைப்போல்**
**ஈவானா தித்த னிவன்.''**

என்று பாடியிருக்கிறார்.

இந்த மருதப்பன் என்ற பஞ்சாதித்தனின் தாயாராகிய வெள்ளையம்மை நாட்டாச்சியால் காயாமொழியில் ஒரு பார்வதி அம்மன் கோவில் அமைக்கப்பட்டது.

மருதப்பன் என்ற பஞ்சாதித்தனின் குமாரரின் பெயர் திக்கெலாங்கெட்டி ஆதித்த நாடன். இந்தத் திக்கெலாங் கெட்டி ஆதித்த நாடனுக்கு இருபுதல்வர்கள். அவர்களின் பெயர்கள் ஆதித்தநாடன், புதுநயினார் ஆதித்த நாடன் என்பவைகளாகும். இந்த புதுநயினார் ஆதித்தனுக்கு புத்திரோற்பத்தியில்லை. இவ்விருவர்களில் ஆதித்த நாடன் மிகவும் சௌந்தர்ய முள்ளவர். அவரைக் கண்ணுற்ற கன்னிகை ஒருத்தி அவர் மீது காதல் கொண்டாள். ஆயினும் காதலை வெளிக்குச் சொல்லிக் கொள்ளக்கூடவில்லை. அவள் அல்லும் பகலும் உண்ணும் போதும் உறங்கும்போதும் ஆதித்த நாடனையே நினைந்து நினைந்து உருகினாள்.

ஒரு நாள் அவள் தனது தோழிகளுடன் சென்று ஸ்நானஞ் செய்து விட்டு ''ஆதித்தா' என்று சொல்லிக் கொண்டு

விபூதியை நெற்றியிலணிந்தாள். அவளது குறிப்பறிந்த தோழிகள் அவளது காதலைத் தாயிடம் வந்து தெரிவிக்க அவள் தன்மகளைக் கடிந்துரைத்தாள். இந்தச் சம்பவத்தை,

''திக்கெல்லாங் கெட்டியருள் சேயென் றேனோ
செட்டிதோ ளேறியென்று செப்பினேனோ
இக்குவேள் புதுநயினார் துணையென்றேனோ
ஈழன்திறை கொண்டானென் றியம்பினேனோ
அக்கைமா ருடன்கூடிச் சுனைநீராடி
ஆதித்தா என்றிலைநீ றணிந்ததற்குத்
தக்கசாஸ் திரம்படித்த கள்ளியென்று
தாயேசி யெனையடிக்கத் தான்வந்தாளே:''

என்ற கவியால் அறியலாம்.

ஷை ஆதித்த நாடனின் குமாரர் சுப்பிரமணிய ஆதித்த நாடன். சுப்பிரமணிய ஆதித்த நாடனின் குமாரர் சிவந்தி ஆதித்த நாடன். இந்த சிவந்தி ஆதித்த நாடனின் காலம் கி.பி. 1780ம் வருடம் காயாமொழி தெற்கு வீட்டில் இவர் தலை சிறந்து விளங்கினார்.

இதுபோலவே குமாரசாமி ஆதித்த நாடன், ராமசாமி ஆதித்த நாடன், சுப்பிரமணிய ஆதித்த நாடன், தீத்தாரப்ப ஆதித்த நாடன் வெளிறினபெருமாள் ஆதித்த நாடன், இராமகிருஷ்ணமுத்து ஆதித்த நாடன் என்ற பெயர்களுள்ள பல ஆதித்தர்கள் காயாமொழி வடக்கு வீட்டிலிருந்து வந்தும் குடும்பம் விருத்தியாகாமல் கடைசியில் சுப்பிரமணிய ஆதித்தநாடன் என்னும் ஒருவரே கி.பி. 1800ல் தலையெடுத்து விளங்கினார். இவர் உடல் முழுதும் எதிர்ரோம முள்ளவர். இவருக்குக் குமாரசாமி ஆதித்தன் என்னும் ஒரு இளைய சகோதரர் உண்டு. அவர் மிருதங்கம் வீணை வாசிப்பதில் மகா நிபுணர். அவருக்குச் சந்ததியில்லை.

## 3-ம் அத்தியாயம்

# காயாமொழிச் சிவந்தி ஆதித்தரும் பாஞ்சாலங்குறிச்சிக் கட்டப்பொம்மு நாயக்கரும்

''பேரரசர்களாகிய சேர, சோழ பாண்டியர்களுக்குக்கீழ் அவர்கள் வம்சத்துசிற்றரசர்கள் ஆளுகையும் உண்டு. வடுகு, மகமதிய அரசர்களின் படை யெழுச்சியால் அவர்களது பேரரசோடு சிற்றரசுகளும் அநேகமாக அழிக்கப்பட்டன. அப்படி அழிந்தது போக நின்றனவும் சிலவுண்டு. அப்படி நின்றவைகளாகிய காயாமொழி, படுக்கப்பத்து, மாவீடு பண்ணை முதலிய நூற்றுக் கணக்கான ஊர்களையும் கைவசப்படுத்த ஊமையராலும். கட்டப்ப நாயக்கராலும், கான்சாய்புவாலும் பலதடவை முயற்சி செய்யப்பட்டு முடியாமற் போய்விட்டது. அவைகளெல்லாம் பூர்வ சிற்றரசு பாத்யதையிலிருந்து தொன்று தொட்டு பரம்பரையாக நாளதும் அநுபவித்து வருவன'' என்று கி.பி. 1922-ம் வருடம் மே மாதம் வெளியான க்ஷத்திரிய மித்திரன் பத்திரிகை மலர் 3, இதழ் 9-பக்கம் 278-ல் ஆசிரியர் க. விஜயதுரைசாமி கிராமணியார் வெளியிட்டுள்ளார். அதிலிருந்து இதனை விரிவாக ஆராய்ச்சி செய்து பார்த்த பொழுது பின் வருமாறு விபரமாகத் தெரிய வருகின்றது.

காயாமொழி தெற்கு வீட்டில் கி.பி. 1780-ம் வருடத்தில் தலைசிறந்து விளங்கிய சிவந்தி ஆதித்த நாடனிடம் அக்காலத்தில் பாஞ்சாலங்குறிச்சியில் பாளையப்பட்டாக இருந்த கட்டப்பொம்மு நாயக்கர் என்பவர் தமது காலாட்களில் சுமார் முப்பது பெயரை அனுப்பித் திசைகாவல் கேட்கும்படியாகச் சொல்லியிருந்தார்.

திசைகாவல் என்பது தேசகாவலாகும். பாளையப் பட்டுக்காரர்கள் தங்கள் ஆட்சிக்குள்ளடங்கிய ஒவ்வொரு கிராமத்துக்கும் சிலரைக் காவலராக அமத்தியிருப்பார்கள்.

கிராமத்துத் தலைவன் திசை காவல்வரி என்று வசூல் செய்து ஷெ காவலர்களிடம் கொடுத்துக் கொண்டிருப்பது வழக்கம்.

இத்தகைய வழக்கத்தை காயாமொழியிலும் உண்டு பண்ணிவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையப்பட்டுக் கட்டபொம்மு நாயக்கர் சில ஆட்களை சிவந்தி ஆதித்தநாடனிடம் அனுப்பி வைத்திருந்தார். சிவந்தி ஆதித்தநாடன் அவர்களுக்கு தாகசாந்தி செய்வித்து தனக்குத் தன்னுதவி போதுமென்றும் இதுவரையில் வழக்கமில்லாத பிறர் சகாயம் வேண்டுவதில்லை என்றும் திசைகாவல் தரமுடியாதென்றும் சொல்லி அனுப்பிவிட்டார்.

அவர்கள் காயாமொழியை விட்டுத் திரும்பிப் போகையில் மேய்ச்சல் நிலங்களில் விடப்பட்டிருந்த ஆதித்தர்களது மாட்டு மந்தையைப் பற்றி ஓட்டிக்கொண்டு சென்றனர். மந்தைக் காவலர்கள் ஓடோடியும் வந்து இது சம்பவத்தை சிவந்தி ஆதித்த நாடனிடம் முறையிட அவரும் அவரது ஆப்த நண்பர் முரட்டுக்கட்டை என்னும் முகம்மதியரும் ஏனைய காலாட்களும் வடதிசை நோக்கி விரைந்து சென்று திசை கொள்ளைக் காவலர்களை நிந்தித்து நன்றாய்ப் புடைத்து ஆத்தூர் மேட்டிலிருந்து மாட்டு மந்தையை மீட்டுக் கொண்டு வந்தனர்.

இந்த அபஜெயத்தைத் தமது காவலர்களிடம் கேட்ட கட்டப்பொம்மு நாயக்கர் ஒருதந்திரஞ் செய்தார். தென்கட லோரமுள்ள குட்டத்தில் திசைகாவல் கைக்கொண்டால் இடைநடுவிலுள்ள காயாமொழியை முறியடித்து விடலாம் என்பது அவரது எண்ணம். அந்த எண்ணத்தின் மீது ஒரு முப்பது பேரைக் குட்டத்துக்கு அனுப்பினார்.

குட்டம் அக்காலத்தில் அழகப்ப வீரமார்த்தாண்ட நாடனுடைய தலைமையின் கீழ் இருந்தது. அவர் கட்டப் பொம்மு நாயக்கரின் காலாட்களுக்குத் தாகசாந்தியேனும் செய்விக்காமல் திசைகாவலுக்கும் இசையாதிருந்தார். அதையறிந்த நாயக்கரது காலாட்கள் திரும்பிப் போவதாகப் பாவனைகாட்டி அவ்வூர்ப் புறத்துள்ள தெங்குகள் வளர்ந்த தோப்பில் பெரும் நாசஞ்செய்து விட்டுப் புறப்பட்டனர். புறப்படுஞ் சமயம் மார்த்தாண்ட நாடர்கள் காலாட்களுடன்

குழுமி வந்து நாயக்கரது சேவகர்களைப் பிடித்துக் குடுமியைக் கொய்து பலவிதமாக இம்சித்து பாஞ்சாலங்குறிச்சிக்கு ஓட்டிவிட்டனர்.

பாஞ்சாலங்குறிச்சியில் இவர்கள் குட்டத்தில் நடந்த விருத்தாந்தங்களைக் கூட்டியும் குறைத்தும் கட்டப்பொம்மு நாயக்கருக்குச் சொன்னார்கள்.

கட்டப்பொம்மு நாயக்கருக்குக் கோபம் பிறந்தது. "ஒரு வாரத்துக்குள் யுத்தம் நடைபெறும்" என்பதாகக் காயாமொழிக்கும் குட்டத்துக்கும் தூது அனுப்பி விட்டார். யுத்தத்தில் எதிரிகளின் குடுமியைக் கொய்து விடுபவருக்கும் பரிசளிக்க வேண்டுமென்று சில ஆபரணங்களும் தயார் செய்து வைத்திருந்தார்.

திருச்செந்தூருக்கு மேற்கே இரண்டு மைல் தூரமுள்ள தலைவாணிச் சாத்தான் கோவில் பக்கமே யுத்தக்களமா யிருந்தது. கீழ்பக்கத்தில் கட்டப்பொம்ம நாயக்கரும் அவரின் இளைய சகோதரர் ஊமைத்துரையும் இரண்டு பல்லக்குகளிலும் மேற்பக்கத்தில் ஆதித்த நாடனும் மார்த் தாண்ட நாடனும் இரண்டு பல்லக்குகளிலும் வீற்றிருந்தனர். போர்முகத்தில் இருமடங்கு காலாட் படைகள் பதினாயிரம் வரை யிருக்கும். கொம்பு முழக்கக்காரர்கள் நூறுபேரிருந்தனர். குதிரைவீரர்கள் பதின்மரே உலாவினர். யுத்தம் ஆரம்பமானதும் தாம் ஒருவரே நின்று பொருது வென்றி பெறுவதாக ஊமைத்துரை உறுதிகூறி தமயனைத் திருச் செந்தூருக்கு அனுப்பி வைத்தார். அவ்வளவு தைரியத்தோடு ஊமைத்துரை உறுதி கூறியபோதிலும், தமயன் சென்றபிறகு தனியராய் யுத்தத்தை ஆரம்பியாமல் எதிரிகளைக் கண்டு பிரமித்து வாளா விருந்தார். அது சமயம் யுத்தத்தை ஆரம்பிப்போமா என்று மார்த்தாண்டர் ஆதித்தரிடம் ஆலோசனை கேட்க அவர் நாமாக முந்தக்கூடாது. எதிரிகள் முந்தட்டும். அதைக் காரணமாகக் கொண்டு யுத்தத்தை ஆரம்பிக்கலாம் என்று கூறினார்.

மார்த்தாண்டருக்கு அவ்வளவு நேரத்துக்கு மேல் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. பல்லக்கிலிருந்து கீழே இறங்கினார். காலாள் ஒருவனிடம் காதில் ஏதோ

ஊதினார். அந்தக் காலாள் சற்றுத் தூரத்தில் மேய்ந்து கொண்டு நின்ற கழுதைகளில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு வந்து தேங்காய்க் கொப்பரையைக் கீறி அதன் காதில் கௌவவிட்டு வாலில் காவோலையை கட்டித் தீயைக் கொழுத்தி நாயக்கர்சேனைகளுக்குள் முடுக்கினான். காதுவலி பொறுக்க முடியாமலும் தீச்சூட்டை தாங்க முடியாமலும் அக்கழுதை கத்திக்கொண்டு நாயக்கர் சேனைகளுக்குள் ஓடியது. உடனே ஊமைத்துரை யுத்தத்தை ஆரம்பிப்பதற்காக மல்லாரிகளை முழக்கச் சொன்னார். க்ஷணநேரத்துக்குள்ளாக இருமருங்கிலும் எங்கெங்கு பார்த்தாலும் கொம்பு மல்லாரிகள் முழங்கின. ஊமைத்துரை பல்லக்கை விட்டு இறங்கிப் போர்முகத்துக்கு வரவே மார்த்தாண்டரும் போர்முகத்துக்கு வந்தார். ஆதித்தர் பல்லக்கை விட்டு இறங்கிப் போர்முகத்துக்கு வரவே அவரது நண்பர் முரட்டுக்கட்டையும் அங்கு தோன்றி ஆதித்தருக்குக் கண்ணும் கூவசமும் போல் நின்றிலங்கினார். யுத்தமும் ஆரம்பித்து விட்டது. ஈட்டிகள் பாய்ந்தன, விற்கள் குவிந்தன அம்புகள் பறந்தன. வாட்கள் உலாவின. தடிகள் முழங்கின அவற்றால் தலைகள் உருண்டன. நெஞ்சுகள் பிளந்தன, கைகாலொடிந்தன. குடல்கள் சாய்ந்தன, பிணங்கள் குவிந்தன, குருதியாறு பெருகி ஓடியது. ஆதித்தரும் அவரைவிட ஆக்குரோசமாய் மார்த்தாண்டரும் முரட்டுக்கட்டையும் சலிப்பின்றி முனைந்து நெருக்கவே ஊமைத்துரை புறங்காட்டி ஓடினார். பின்பு குதிரையில் சவாரி செய்து கொண்டு பாஞ்சாலங் குறிச்சிக்குப் புறப்பட்டார். அச்சமயம் திருச் செந்தூரிலிருந்து மூன்று பிராமணர்கள் வந்தனர். அவர்கள் ஊமைத்துரையைக் குதிரையை விட்டுக் கீழே இறங்கச் சொல்லி அவரை நோக்கி, "தங்கள் தமையனார் கட்டப் பொம்ம நாயக்கர் திருச்செந்தூர் வந்தார். அவர் இங்கு நடந்துபோன சம்பவத்தை நடக்கப் போவதாகச் சொன்னார். நாங்கள் உடனே மிகவும் வருத்தப்பட்டு ஆதித்த மார்த்தாண்டர்களின் பெருமைகளை அவருக்கு எடுத்துச் சொன்னோம். உங்களைப் போலவே அவர்கள் உங்களுக்கு முன்னரே திருச்செந்தூர் ஸ்ரீ முருகக் கடவுளுக்கு வேண்டிய திருப்பணிகள் செய்து வருபவர்கள். திருச்செந்தூரில் பிராமணர்களைக் குடியேற்றியவர்கள். அவர்கள் முன்னோர் களில்லையானால் நமது கோவில் இவ்வளவு பிரபல்யமாகி

யிருக்காது. உங்களைப்போல் அவர்களும் மகா பக்தர்கள். நீங்களெல்லாம் முருகனின் பக்தர்களாயிருந்து கொண்டு உங்களுக்குள் சண்டை போடலாமா? நீங்களெல்லாம் ஒற்றுமையாகச் சண்டை சச்சரவு இல்லாமல் வாழவேண்டியவர்கள். இந்த யுத்தம் நடந்திருக்கக் கூடாது. உங்கள் தமையனார் கட்டப்பொம்ம நாயக்கர் எங்கள் வார்த்தைகளை அங்கீகரித்தார். யுத்தக்களம் சென்று தம்பியையும் எதிரிகளையும் சமாதானஞ் செய்து அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றார். நாங்கள் அதிக சந்தோஷமாக வந்தோம். துரதிஷ்டமாக நாங்கள் வருமுன்னதாகவே உங்கள் யுத்தம் நடைபெற்றுப் பல உயிர்கள் நாசமாயின. இப்போது அதற்காக வருந்துவதில் பயன் இல்லை. இனிமேலாவது சமாதானமாகுங்கள். தமயனாரும் சொல்லியனுப்பி இருக்கிறார்'' என்றனர். ஊமைத்துரையும் உடன்பட்டார். ஒருங்கே ஆதித்த மார்த்தாண்டர்களிடம் வந்தனர். அவர்களும் பிராமணர்களின் வார்த்தைகளுக்கு இணங்கினர். ஊமைத்துரையும் ஆதித்த மார்த்தாண்டர்களிடம் உறவு பாராட்டிச் சகோதரர் முறையாய் நடந்து கொண்டார். பாஞ்சாலங்குறிச்சி பாளையப்பட்டு தானாதிபதி சிவசுப் பிரமணியபிள்ளை மத்தியில் நின்று சமாதானம் வாழ்த்துக் கூறினார்.

பின்னர் உத்தரவுப் பிரகாரம் எஞ்சிய சேனைகள் யுத்தத்தில் மாய்ந்தவர்களுக்குச் செய்யத்தக்கன செய்தார்கள். அப்புறம் ஆதித்தரும், மார்த்தாண்டரும், ஊமைத்துரையும் மூன்று பல்லக்குகளில் திருச்செந்தூர் சென்றனர். அங்கு கட்டப்பொம்மு நாயக்கர் இருந்தார். அவர் ஆதித்த மார்த்தாண்டர்களை வரவேற்று ''இனி நமக்குள் சண்டையை மறந்துவிட வேண்டு''மென்று இனிய பிரிய வசனங்கள் சொல்லினர்.

பின்பு கோவிலிலிருந்து பிரசாதம் வந்தது. அதை உண்டுவிட்டு தத்தமது தேச வளமைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது கட்டப்பொம்மு நாயக்கர் ஆதித்த மார்த்தாண்டர்களை நோக்கி ஐயன்மீர்! தென்னாட்டிலுள்ள மற்றக் கிராமத்தினரையாவது திசைகாவல் கொடுக்கும்படியாக நீங்கள் ஆக்ஞாபிக்கப்படாதா என்றார். அதற்கு மார்த்தாண்டர் ஐய! அது முடியாத காரியம்.

இதற்குமுன் அந்த வழக்கமில்லை. உங்கள் காவல்காரர் கொஞ்சம் யோக்கியதையுடன் நடந்திருந்தாலாவது ஒருவேளை அதைப் பற்றி யோசிக்கலாம். உங்கள் காவல் காரர்கள் குறும்பூரில் சிலருக்கு அடி கொடுத்து கைகாலை முறித்துப் போட்டு விட்டுப் போய்விட்டனர். மானாட்டி லிருந்து நெய் விற்று வந்த இரண்டு இடைப்பெண்களிடமிருந்து அவர்கள் நெய் விற்றுவந்த பணத்தையும் அவர்கள் போட்டிருந்த ஆபரணங் களையும் சேலைகளையும் அபகரித்துச் சென்றனர். எங்கள் விஷயத்தில் மாடு திருடியிருக்கிறார்கள். தெங்கஞ் சோலையை அழித்திருக் கிறார்கள். இத்தகைய காரியங்களில் அவர்கள் இறங்கி யிருக்கிற படியால் மற்றக் கிராமக்காரர்களையும் திசைகாவல் கொடுக்கும்படியாக எங்களால் உத்தரவு பிறப்பிக்க முடியாது. இங்கு எங்கள் காவலே ஒழுங்காக நடை பெற்று வருகிறது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

உடனே கட்டப்பொம்ம நாயக்கர் மனவருத்தத்துடன் எனது காவலாளிகள் இத்தகைய அற்பத்தனங்கள் செய்திருக் கிறார்களா? அப்படி அவர்கள் செய்திருந்தால் அவர்கள் தலைமயிரை அறுத்துவிடக் கூடாதா என்றார்.

அவர் அவ்வாறு சொல்லி வாய்மூடுமுன் மார்த்தாண்டர் இதோ பாருங்கள், எமது பல்லக்கில் தொங்குகிற மயிர் கற்றை வேறுயாருடையதாக இருக்கும் என்றார்.

உடனே நாயக்கருக்கு சந்தோஷம் உண்டாகிவிட்டது. நடந்துபோன யுத்தத்தில் எதிரிகளான இவர்களின் குடுமியைக் கொய்பவனுக்குப் பரிசளிக்க வேண்டி வைத்திருந்த ஆபரணங்களை ஆதித்த மார்த்தாண்டர்களுக்கு அளித்தார்.

பின்னர் ஆதித்த நாயக்கரைத் தமது ஊருக்கு விருந்திற் கழைக்க நாயக்கரும் அவ்வழைப்பிற்கிணங்கி காயாமொழி வந்தார். ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சி சென்றார். காயாமொழி கௌமாரிதேவி என்னும் துர்க்கை அம்மன் கோவில் முன்னிலையில் ஓர் பந்தலிட்டு அதில் வாழை, தெங்கு முதலியவற்றால் அலங்காரம் செய்து வைத்திருந்தது. நாயக்கர் அங்கு எட்டு நாள் ஆதித்தரின் விருந்தாளியா யிருந்தார். பின்னர் நாயக்கரின் விருப்பத்துக்கு இணங்கி

ஆதித்தரும் மார்த்தாண்டரும் ஒன்பதாம் நாள் நாயக்கருடன் பல்லக்கில் பாஞ்சாலங்குறிச்சிக்குப் புறப்பட்டனர். அவர் களுடன் முரட்டுக்கட்டையும் காலாட்கள் ஒரு நூறு பேரும் சென்றனர். அங்கு நாயக்கரும் ஆதித்த மார்த்தாண்டர்களை அதிக அன்புடன் உபசரித்தார்.

இவ்வாறு அன்புடன் உபசார விருந்துண்டு உல்லாசமாக காலங்கழிக்கும்போது ஓர் தினம் கட்டப்பொம்ம நாயக்கர் தமது திறமைகளை ஆதித்த மார்த்தாண்டர்களிடம் காட்டு வதற்கு நினைத்து 'மனை' விளையாட்டுக்கு ஆதித்தரை அழைத்தார்.

ஆதித்தரும் உடன்பட்டு நாயக்கருடன் விளையாட ஆரம்பித்தார். மனைக்கோடு கீறி பதினைந்து நாயும் மூன்று புலியும் வைத்து விளையாடிவர ஆதித்தரே ஒவ்வொரு முறையும் வெற்றி பெற்றார்.

அடுத்த தினத்தில் நிரை என்னும் விளையாட்டு விளையாடினர். இந்த விளையாட்டிலும் ஆதித்தரே வெற்றி பெற்றார். மறுதினம் படைவெட்டு என்னும் விளையாட்டு விளையாடினர். இதிலும் ஆதித்தரே வெற்றி பெற்றார். நான்காம் நாளையில் சொக்கட்டான் விளையாட்டு விளை யாடினர். இந்த விளையாட்டிலும் ஆதித்தர் பக்கமே வெற்றியாயிற்று. ஐந்தாம் நாள் சதுரங்கம் விளையாடினர். இந்த விளையாட்டில் ஆதித்தர் ரதகஜதுரகபதாதிகள் இருக்கும் பொழுதே ராஜாவைக் கட்டிக் கொள்வார்.

அப்பொழுது நாயக்கர் இவ்விதமான யுக்தி விளை யாட்டில் தம்மை மிஞ்சியவர்கள் இல்லையென்று தாம் நினைத்துக் கொண்டிருந்ததாகவும் ஆதித்தர் தம்மைவிட எவ்வளவோ யூகசாலியா யிருந்து விளையாடித் தம்மை ஜெயித்துக்கொள்வதாகவும் சொன்னார். ஆதித்தர் அதற்குப் பதிலாக தமக்கு நாயக்கருக்கொப்ப யூகம் இல்லையென்றும் இதற்குமுன் இவ்வளவு அபார யூகசாலிகளிடம் தாம் விளையாடியதில்லை யென்றும் நாயக்கர் விளையாட்டில் தான் புதிய பல வழிகளைத் தெரிந்து கொள்ள நேர்ந்த தென்றும் விளையாட்டுகளிலும் கூட ஜெயிப்பதற்கு ஸ்ரீமுருகக்கடவுள் உதவி செய்வார் என்று தமக்குப் பரிபூர்ண

நம்பிக்கை உண்டென்றும் அந்த நம்பிக்கையினாலேயே தாம் ஜெயம் பெறுவதாகவும் கூறினார்.

ஆறாவது நாளையில் நாயக்கர் தேகபலத்திலாவது நாம் ஆதித்தர் வகையறாக்களை வென்றுவிட வேண்டுமென்று கிளித்தட்டு விளையாடுவதற்கு அழைத்தார். ஆதித்தரும் சம்மதித்தார். விளையாட்டு இடம் கோட்டைக்கு வெளிப்பகுதி யாயிருந்தது. ஏறி விளையாடி உப்புக் (ஜெயம்) கூறுபவர் கோட்டைச் சுவரின் நேரே ஓட வேண்டியதிருந்தது. ஆகையால் தட்டுக் கட்டும் பக்கத்தில் கிளியாயிருந்து விளை யாடுபவர் விரைவாய் ஓடுபவராதலால் கோட்டைச் சுவர் நேருக்கு ஓடுபவரைக் கட்டாயம் அடித்து விடலாம். எனவே கிளியாயிருந்து விளையாடுபவரை அன்று நாயக்கர் நன்கு உற்சாகப்படுத்தி வைத்திருந்தார். நாயக்கரது பிரியப்படி அவர் பக்கத்துக்காரரே தட்டுக் கட்டினர். ஆதித்த மார்த்தாண்டரது பக்கத்தினர் ஏறி விளையாடினர். ஏறி விளையாடும் பக்கத்தில் முரட்டுக்கட்டை என்னும் முகமதியர் மகா சமர்த்தர். தட்டுக்கட்டுபவர் எத்தகைய சூரனாயிருந்தாலும் இவர் மூன்றே மறுக்கில் மறுக்கித் தாண்டி விடுவார். இவர் கையில் ஒருமுழ நீளமுள்ள ஒரு கைத்தடி எந்த வேளையிலு மிருக்கும். இவரது சமர்த்து நாயக்கருக்கும் அவரது வகையறாக்களுக்கும் தெரியாமலிருந்தது. முரட்டுக்கட்டையும் தட்டேறினார். ஒவ்வொருவரையும் மூன்றே மறுக்குகள் செய்து தட்டுகளைக் கடந்து கொண்டே போனார். ஒவ்வொருவரையும் மறுக்குகை யிலும் முதல் மறுக்கில் அத்தாப்பார் என்றும் இரண்டாவது மறுக்கில் இத்தாப்பார் என்றும் மூன்றாவது மறுக்கில் ஆதித்த நாடரின் கண்ணைப் பார் என்றும் சொல்லிக்கொண்டே கடந்து போனார். இவர் ஒருவரால் ஆதித்த மார்த்தாண்டர்களது பக்கம் பலதடவை ஜெயித்துக்கொண்டே யிருந்தது. கடைசியாக நாயக்கர் பக்கத்தில் ஒரு புதிய கிளி விளையாட்டுக்காரரை நிறுத்தி வைத்திருந்தது. பாஞ்சாலங்குறிச்சியில் இவரை ஜெயிப்பார் யாரும் இல்லை. இவர் ஒரு சேனாதிபதி. இம்முறை முரட்டுக்கட்டையும் அடிபட்டு ஆதித்த மார்த் தாண்டகளது பக்கமும் அபஜெயப்படும் என்று அனைவரும் பேசிக்கொண்டனர். இதுசமயத்தில் முரட்டுக்கட்டை எல்லோரையும் மறுக்கிவிட்டு கிளித்தட்டுக்குட் போனார். வழக்கம் போல் மூன்று மறுக்குகள் மறுக்கிவிட்டு ஒவ்வொரு

மறுக்குக்கும் முறையே அத்தாப்பார் இத்தாப்பார் ஆதித்த நாடரின் கண்ணைப் பார் என்று கூறி உப்புக்கூவிக் கொண்டு ஓடினார். ஓடின விரைவில் தமது கைத்தடியை கோட்டைச் சுவரில் மோதிக் காயம்பட்டு அறிவு மயங்கிக் கிடந்தார். அறிவு தெளிந்த பிற்பாடு தாம் விளையாட்டில் சமர்த்தர் என்பதற்காக அவ்வளவு நாளாகப் பெற்றிருந்த பரிசுகளை முரட்டுக் கட்டைக்குச் சமர்ப்பித்தார். நாயக்கரும் முரட்டுக்கட்டைக்குக் கணக்கற்ற சன்மானங்கள் வழங்கி தம்மிடத்தில் வாசற் பிரதானியா யிருக்க வேண்டினார். அதற்கு முரட்டுக்கட்டை தாம் நாயக்கரையும் ஆதித்தரையும் சமமாகவே பாதிப்பதாகவும் ஆதித்தரிடமிருப்பது நாயக்கரிடம் இருப்பது போலவே என்றும் ஆதித்தருடன் செல்வதற்கு விடை தரவேண்டுமென்றும் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டார். மறுநாட் காலையில் ஆதித்த மார்த்தாண்டர்களும் முரட்டுக் கட்டையும் மற்றப் பரிவாரங்களும் பாஞ்சாலங்குறிச்சியை விட்டுக் காயாமொழிக்குப் புறப்பட்டனர். நாயக்கரும் அதிக சிறப்புடன் வழியனுப்பி வைத்தார்.

இதன் பின்னர் கட்டப்பொம்ம நாயக்கரும் சிவந்தி ஆதித்தரும் அந்யோந்நிய அன்புள்ளவர்களாய் ஒற்றுமை யுள்ள சகோதரர்களாகவே தங்கள் காலமெல்லாம் நடந்து வந்தனர். வேட்டையாடுமிடங்களில் அவர்கள் சிலவேளை சந்தித்திருக்கின்றனர். அவர்கள் நட்பு வளர்பிறையாகவே வளர்ந்து வந்ததற்குக் காரணம் அவர்கள் ஒருவரை யொருவர் மதித்து நடந்து கொண்டதேயாகும். கி.பி. 1799-ம் வருடம் கட்டப்பொம்மு நாயக்கர் மரண தண்டனைக்குட்பட்டபோது காயாமொழி சிவந்தி ஆதித்தரும் அவரைச் சேர்ந்தவர்களும் மிகவும் வருந்திப் புலம்பியதாகச் சொல்லிக் கொள்ளப்படுகிறது.

## 4-ம் அத்தியாயம்

# சோழ ஆதித்த வம்ச விருக்ஷம்

கி.பி. 1780-ம் வருடத்திலும் அதற்கு மேலும் காயாமொழி தெற்கு வீடு சிவந்தி ஆதித்த நாடனுக்கு சுந்தரக்குமார் ஆதித்த நாடன், தையல்பாக ஆதித்த நாடன், என இரு புதல்வர்கள் பிறந்தார்கள். இந்த சுந்தரக்குமார் ஆதித்த நாடன் சந்ததியார்கள் தெற்கு வீடு கீழவாசல் பண்ணையார்களென்றும் தையல்பாக ஆதித்த நாடன் சந்ததியார்கள் தெற்கு வீடு மேலவாசல் பண்ணையார்களென்றும் அழைக்கப்படுகிறார்கள்.

இதுபோலவே கி.பி. 1800-ம் வருடத்திலும் அதற்கு மேலும் காயாமொழி வடக்கு வீடு சுப்பிரமணிய ஆதித்த நாடனுக்கு இராமகிருஷ்ணமுத்து ஆதித்த நாடன் இராமசாமி ஆதித்த நாடன் என இரு புதல்வர்கள் பிறந்தார்கள். இவர்களில் இராமகிருஷ்ணமுத்து ஆதித்த நாடன் சந்ததியார்கள் வடக்கு வீடு மேலவாசல் பண்ணையார்களென்றும் இராமசாமி ஆதித்த நாடன் சந்ததியார்கள் வடக்கு வீடு கீழவாசல் பண்ணையார்களென்றும் வழங்கப்படுகிறார்கள்.

தெற்குவீடு கீழவாசல் பண்ணையார் சுந்தரக்குமார் ஆதித்தநாடனும் தெற்கு வீடு மேலவாசல் பண்ணையார் தையல்பாக ஆதித்த நாடனும் வடக்கு வீடு மேல வாசல் பண்ணையார் இராமகிருஷ்ணமுத்து ஆதித்த நாடனும் வடக்கு வீடு கீழவாசல் பண்ணையார் இராமசாமி ஆதித்த நாடனும் கி.பி. 1820-ம் வருடம் தங்கள் முன்னோர்களின் ஆட்சிக்குட் பட்டிருந்த பூமியை முதன் முதலாக நான்கு சமபங்குகளாக வைத்துப் பாகம் பிரித்துக் கொண்டனர். அப்பால் குடும்பம் விருத்தியாக ஆக பூர்வ ஆஸ்தியைப் பல பாகங்களாகப் பிரித்துக் கொண்டு தங்கள் தங்கள் பாகத்துக்குரிய தீர்வையை பிரிட்டீஷ் கவர்மென்டாருக்குச் செலுத்திக் கொண்டு நாளதுவரை வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த அத்தியாயத்தில் ஆதித்த வம்சாவளி விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களில் சிலர் சந்ததியில்லாத வர்கள், பலர் இறந்து போனவர்கள், உயிரோடிருப்ப வர்களுக்கு கி.பி. 1930-ம் வருடத்திலுள்ள வயதை அவரவர்கள் பெயருக்குக் கீழ் குறிக்கப்பட்டுள்ளது.

# காயாமொழி ஆதித்த வமிசாவழி

**(கி.பி.1930 வரை)**



# காயாமொழி தெற்கு வீடு கீழவாசல் பண்ணையாரின் வம்சாவளி

- சுந்தரக்குமார் ஆதித்த நாடன் (பிறப்பு கி.பி. 1780)
  - சிவந்தி ஆதித்த நாடன்
    - அறுபத்து மூவர் ஆதித்த நாடன்
      - சிவந்தி ஆதித்த நாடன்
        - அறுபத்து மூவர் ஆதித்த நாடன்
          - சிவந்தி ஆதித்த நாடன்
        - சுந்தரக் குமார் ஆதித்த நாடன்
          - இராம சாமி ஆதித்த நாடன்
        - சுவாமிநாத ஆதித்த நாடன்
        - வினாயக மூர்த்தி ஆதித்த நாடன்
        - சுப்பிரமணிய ஆதித்த நாடன்
          - சிவந்தி ஆதித்த நாடன்
          - சுந்தர பாண்டிய ஆதித்த நாடன்
          - இராஜ கோபால் ஆதித்த நாடன்
        - வேலாயுதப் பெருமாள் ஆதித்த நாடன்
          - ஞானேஸ் ஆதித்த நாடன்
          - பரமேஸ்வர ஆதித்த நாடன்
    - சுந்தரக்குமார் ஆதித்த நாடன்
      - குமாரசாமி ஆதித்தநாடன்
        - ஆறுமுகப் பெருமாள் ஆதித்த நாடன்
        - சுந்தரக் குமார் ஆதித்த நாடன்
      - சிவந்தி ஆதித்த நாடன்
        - சுந்தரக் குமார் ஆதித்த நாடன்
          - இராஜ சிவந்தி ஆதித்த நாடன்
          - பாலச் சந்திர ஆதித்த நாடன்
  - பார்வதி ஆதித்த நாடன்
  - பகவதி ஆதித்த நாடன்

# காயாமொழி தெற்குவீடு கீழவாசல் பண்ணையாரின் வம்சாவளி



# காயாமொழி தெற்குவீடு கீழவாசல் பண்ணையாரின் வம்சாவளி



# காயாமொழி தெற்குவீடு மேலவாசல் பண்ணையாரின் வம்சாவளி



# காயாமொழி தெற்குவீடு மேலவாசல் பண்ணையாரின் வம்சாவளி



# காயாமொழி வடக்கு வீடு மேலவாசல் பண்ணையாரின் வம்சாவளி



## காயாமொழி வடக்குவீடு கீழவாசல் பண்ணையாரின் வம்சாவளி



# 5-ம் அத்தியாயம்

## அபிதான விளக்கம்

### (1) சுந்தரக்குமார் ஆதித்த நாடன்

இவர் தெற்கு வீடு கீழவாசல் மூலபுருடன். திருச்செந்தூர் ஆலயத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களை ஏற்படுத்தி பூஜை செய்வதற்கு ஓதுவார்களையும் நியமித்தவர் இவர்தான். இவர் சந்ததியார் பலர் இவரது பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### (2) சிவந்தி ஆதித்த நாடன்

இவர் தெற்கு வீடு கீழவாசல் முதலாவது அறுபத்து மூவர் ஆதித்தரின் குமாரர். வில் வித்தையில் வல்லவர். தக்ஷிணத்தில் அக்காலம் வரை இவரை ஜெயிப்பாரில்லை.

### (3) குமாரசாமி ஆதித்தர்

இவர் தெற்கு வீடு கீழவாசல் பண்ணையார்களில் ஒருவர். மற்ற ஆதித்தர்களைப் போலவே ஸ்ரீமுருகக் கடவுள் மீது மிகுந்த பக்தியுள்ளவர். பக்தியின் மேலீட்டால் இவர் பாடிய பல பாடல்களில் கீழ்வரும் வெண்பா ஒன்று.

ஆறுமுகமே தெய்வம் அவனே குருசாமி
வேறுதெய்வ மெல்லாம் விருதாவே-ஆறுமுகம்
மெய்யென்ற வர்தமக்கு மெய்யாய் விளங்கிடுமே
பொய்யென்றார் வாய்புழுத்துப் போம்.

### (4) சிவசுப்பிரமணிய ஆதித்தர்

இவர் தெற்கு வீடு கீழவாசல் பண்ணையார்களில் ஒருவர். ஒரு வரகவி. எந்த நிமிடம் வேண்டுமானாலும் இவர் வாயிலிருந்து சுயகவி வருமாதலால் இவரை நிமிடக்கவி என்று

கூறுவர். வடக்கு வீடு மேலவாசல் இ.சு. இராமசாமி ஆதித்தருக்கு இவர் பிரியாத உற்ற நண்பராயிருந்தார். இவர் பாடிய பாமாலைகள் எண்ணிறந்தன. அவைகளெல்லாம் மறைந்து போயின. படுக்கப்பத்தில் கோவில் கொண்டிருக்கும் துர்க்கை அம்மனாகிய கௌமாரி தேவி பேரில் இவர் ஒரு பஞ்சரத்தினத் திருப்புகழ் பாடியுள்ளார். அந்நூலுக்கு வடக்கு வீடு மேலவாசல் இ.சு. இராமசாமி ஆதித்தர் சாற்றுக்கவி கொடுத்திருக்கிறார். அக்கவி பின் வருமாறு:

காயைமாமொழி யூர்தனில் வாழ்பவன்
கங்கைவேணி யனைத்தினஞ் சூழுவோன்
தூயவான்ரவி தன்குல சேகரன்
சோதியான பகவதி ஆதித்த
நேயநாட்டவன் அன்பிற் பிறந்தவன்
நிபுணனாம் சிவ சுப்ரமண்யக் கவி
தாயுமை கௌமாரி படுக்கைவாழ்
சங்கரிக்கிது தக்கது தக்கதே.

ஒரு வீட்டில் விருந்து சாப்பிடுவதற்காகச் சென்ற நிமிடக்கவியார் போஜனத்தை அதிவிரைவாக முடித்துக் கொண்டு வெளியில் வந்ததைக் கண்டு அவரது நண்பர் காரணம் வினவியபோது அவர் பாடிய வெண்பா.

அன்னங் கசப்பு அதிலுங் கறிகசப்பு
பின்னர்விட்ட நெய்யோ பெருங்கசப்பு மன்னாகேள்
பண்ணிமாட முக்கந்தன் பாவை சமைத்தகறி
உண்ணச் சுவையா தெவர்க்கும்.

## (5) பகவதி ஆதித்தன்

இவர் தெற்கு வீடு கீழவாசல் பண்ணையார்களில் ஒருவராகிய அரியாசனம் அவர்களின் குமாரர். வியாபாரத் துறையில் இறங்க வேண்டுமென்று இந்த வம்சத்திலிருந்து இரங்கோன் சென்றவர் இவர் ஒருவரே. இரங்கோனில் வியாபாரத்தில் இவர் முன்னேறி வரும் சமயம் துரதிஷ்டவசமாகப் பிணிவாய்ப்பட்டு தமது வாலிப வயதில் கி.பி. 1925-ம் வருடம் அங்கேயே உயிர் துறந்தார்.

## (6) இராமலிங்க ஆதித்த நாடன்

இவர் தெற்கு வீடு மேலவாசல் மூல புருடனின் குமாரர். இவர் காலத்தில் இவரது முயற்சியால் திருச்செந்தூரில் முன்னோர்கள் விட்டு வைத்துப் போன குறை வேலையை கி.பி. 1843-ல் பூர்த்திசெய்து மண்டபமும் கட்டி முடிக்கப்பட்டது.

## (7) இராமகிருஷ்ணமுத்து ஆதித்த நாடன்

இவர் வடக்கு வீடு மேலவாசல் மூலபுருடன். மருதப்பன் என்ற பஞ்சாதித்தன் காலத்திலிருந்து பஞ்சமாநாடு என்று வழங்கப்பட்ட காயாமொழிப் பிரதேசத்துக்கு பிரிட்டீஷ் ஆட்சியில் கி.பி. 1870 -ம் வருடம் வரையும் பஞ்சமாத்தாலுகா என்று பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. பஞ்சமாத் தாலுகாவின் முக்கியமான கிராமமாகிய காயாமொழியில் கி.பி. 1825-முதல் 1845-வரை வடக்கு வீடு மேலவாசல் மூலபுருடராகிய இராமகிருஷ்ணமுத்து ஆதித்த நாடரே கிராம முன்சீப்பாக இருந்தார். இவருக்கு உட்பட்ட பரமன்குறிச்சி, பள்ளிப்பத்து, குதிரைமொழி, தளவாபுரம் முதலிய ஊர்களில் மிராசுதார்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். மிராசுதார்களின் கடமை கிராம முனிசீப்புக்கு வரி வசூல் செய்து கொடுக்க வேண்டியதாகும்.

இவ்விதம் இவர் கிராமமுனிசீப்பாக இருந்து வரும் காலத்து சென்னை அசெஸ்மெண்டாபீஸ் முதலாவது மானேஜர் ஐயாச்சாமி முதலியாரவர்களின் குமாரர்களாகிய சபாபதி முதலியார், உமாபதி முதலியார், சிற்றம்பல முதலியார், பொன் னம்பல முதலியார், ஆகிய சகோதரர்களின் தலைமையில் சென்னை சைதாபுரம் என்ற சைதாப் பேட்டையில் சதுர்வேத சித்தாந்த சபை என்றொரு சங்கம் கி.பி. 1841-ம் வருடம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்தச் சபையில் முன்சொன்ன இராமகிருஷ்ணமுத்து ஆதித்தரும் ஒரு அங்கத்தினராவர். சென்னைக்கு அக்காலத்தில் போகவர ஒரு வருடம் பிடிக்கும். போக்குவரத்துச் சாதனங்களில்லாத அந்தக் காலத்திலேயே இவர் சென்னை சென்று ஷை சபையை நண்ணி சொற்பொழி வாற்றி விட்டுத் திரும்பியதுண்டு. அதன் மூலம் சபைத்தலை வர்களுக்கு இவர் முக்கியமான நண்பரா யிருந்தார். அக்காலத்தில் இவரின் வேண்டுகோளுக்கிணங்கி சபைத்தலைவர்கள் நால்வரும் சேர்ந்து "அம்மணியம்

ஐயாச்சாமியம்'' என்றொரு நூல் பாடினர். அந்த நூலில் இந்த இராமகிருஷ்ண முத்து ஆதித்த நாடார் 'திரிமூர்த்திகள் ஸ்தோத்திரம்' என்பதாக ஒரு வெண்பா பாடினார். அந்த வெண்பாவுக்கு அச்சதுர்வேத சித்தாந்த சபையார் பொருள் கூற இயலாதிருந்தனர். அதன்மேல் தாம் பாடிய அந்த வெண்பாவுக்கு தாம் தாமே பொருளுங் கூறினர். அதன்மேல் ஷை அம்மணீயம் ஐயாச் சாமியம் என்னும் நூல் புதுவைத் தமிழ்ப்புலவர் பொன்னுசாமி முதலியாரது சிறப்புப் பாயிரத்துடன் சென்னை சதுர்வேத சித்தாந்த சபைத் தலைவர்களில் ஒருவராகிய சிற்றம்பல முதலியாரால் இயற்றப் பெற்றதாக திருவண்ணாமலை ஞானதீபக்குடை தர்மகர்த்தா வீரக்குட்டி ஸ்ரீநிவாச முதலியாரால் முதலாவதாகப் பதிப்பிக்கப்பட்டது. இரண்டா வதாக ஷையார் அநுமதியின் பேரில் திருநெல்வேலி ஜில்லா எட்டயாபுரம் சமஸ்தான வித்வான் திருமயிலை வி. சுந்தர முதலியாரால் பரிசோதிக்கப் பட்டு மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில் கி.பி. 1910-ம் வருடம் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

புதுவைத்தமிழ் புலவர் பொன்னுசாமி முதலியாரால்சிறப்புப் பாயிரமாகச் செய்யப்பட்ட நேரிசை ஆசிரியப்பா அம்மணீயம் ஐயாச்சாமியம் என்னும் நூலில் 9-ம் பக்கத்திலிருந்து 15-ம் பக்கம் வரையில் உள்ளது. அதில் 11, 12, 13 ம் பக்கங்ககளில் இராமகிருஷ்ணமுத்து ஆதித்தரைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. அது பின்வருமாறு:

இன்னா விலம்பா டுடையோ ரிடுக்கண்
டுன்னா வாறிவண்டுகளறு மிரணிய
மழைபொழி யெழிலி மாண்புயர் பல்கலை
தழைதரூஉ மேதையர் தண்டாவவையினன்
பூதலத்தி யாங்கணும் பொங்கியாங் குறையுளி
யேதென மாழ்கிமீ தெழீஇ விசும் பண்மி
முகடுகீண் டோங்குறு மொய்கொண் மீக்குற்றினன்
மகரகேதனனென வையம் வியக்குறூஉ
மாடவர் பெண்ணல மவாவல் செய்மாழைய
னீடியவறனெலா நிலைபெற வீங்கோர்
சட்டகம் புனைந்த தாமெனூ உந்தன் மையன்
மட்டறு கலைவாய் மடுத்த பேரறிவினன்

பான்மைகூ ரொக்கலிற் பாங்கற் குழாமுயிர்
போனமெனப் புரிதரூஉம் புந்தியனோவா
தடையலரிடமற வடர்ந்தணி யணியா
விடர்தவிர் கெனவாங் கெய்து புவணங்குழி
யுற்றகோடீர முரிஞ்சலிற் சிவக்கப்
பெற்றுயர் தாளுடைப் பெற்றியங்குரிசி
றுன்றிய துகிர்ப்பூ தரத்தொடு மரகதக்
குன்றொன்றி யாங்கெழில் குலவிய மேனிப்
பரம்பொருட் சேவடி பரசுநர் தமையப்
பரமென வெண்ணுறூஉம் பண்பின னுலகி
ல்ன்னையின் றனமுறழ்ந் தாருயி ரோம்பு
மின்னலச்சரயு வெனுமிரு நதியின
னரர்பவந் தணந்து நற்கதி யுய்த்திடு
சுரநதிகுலத்துட் டோன்றிய புனித
னிலவிய விறற்றிற னீணிலத் திலகக்
குலவிய சிங்கக் கொடியுடைப் பொருநன்
மருக்கமழ் சந்தன மலர்தரச் சிவணிய
வுருக்கிள ரொலியலா ரொண்புய வரையினன்
முரண்கெழு கடிப்பிடு மும்முரசப்பறை
திரைகட லெனமுரல் செய்திரு முன்றிலா
னுவணத்திரடமக் குணாவினை வெஃகிச்
சிவணுமதிப் பெயர்ச் சீர்சாயகத்தினன்
கலைசான் முழுமதி கவித்தாங்கு கவியா
நிலவெறி வெண்குடை நிழற்று நீணிதிக்கோன்
சுடர்மணிப் பைம்மா சுணமுடி பொறுக்கும்
புடவியு மெண்டிசைப் பொருப்பும் வான்முகடுங்
கிடுகிடென்ற திர்தரக் கீழ்மே லலமரீஇ
நடமிடு வெண்பரி நடாத்து நரேந்திரன்
முன்னோன் வைகுறூஉ மூங்கிலின் வணத்த
தென்னப் பெறூஉம்பண் பியை வெண்கரியினன்
சாந்தவி யறழாஅத் தவநிலை சிறந்த
காந்தமா விருடிதன் காண்டகு கோத்திர
னீழந்திறை கொளீஇ யிருநிலத் திசைபெற
வாழுஞ் சான்றார் வண்குலத் தலைவன்
மாறாப்பல் வளம் வறப்பினு நல்கு
மேறாடி மாமலை யெனுமங் கத்தினன்

வானோரவாக்கொடு வதிதற்கிடனா
மானவீர வளநா டுடையோ
னேணநன் கமைந்தோங் கேமகூடம் பொரூஉ
மாணை சிவாநந்த ராமிரதத்தின
னொப்பறுதவம்பல வோவாது ஞற்றிய
சுப்பிரமணியா தித்த நாடான் சுதன்
கொய்யுளை யேழுடைக் கூவிரி யுகைக்கும்
வெய்யவ னெனுந்தனை வேட்டோ னகன்றுழி
விதுவெனும் விடன்றன் வெண்கதிர்க் காத்தாற்
கதுமெனக்கூய்க் கொடுககன வெள்ளிடைக்க
ணெழுதலை நோக்கியாங் கிதழ்க்கத வடைத்து
வழுவாங்குலமகள் வாழ்க் கைக்கிஃதென்
றுன்னுங்கற்பக முளமுண்டகமலர்
துன்னுநீர் நிலையஞ் சூழ்பைம் பொழிலுஞ்
செந்நெல்கழையெனச் செழித்தினி தோங்கு
மன்னக்குழாஞ்செறிந் தகல்சாலேயமும்
புவிமக டனக்குப் புனைமுடி கவித்தாங்
கவிமணிப் பன்னிலை யமைநெடு மாடமு
மோங்கிய மருதூர் காயாமொழியோ
னாங்குயர் முனிவீப் பாந்தகை மேயினோன்
விஞ்சிசைத் திருநெல் வேலி ஜில்லாப்
பஞ்சமாத் தாலுக் காவளர் பார்த்திப
னித்தலம்புகழு மிராமகிருட்டிண
முத்தாதித்தநா டான் மூதக்கோன்

* * * * * * * * * * * *

அம்மணீயம் ஐயாச்சாமீயம் என்னும் ஷை நூலின் 18, 19-ம் பக்கங்களில் இராமகிருஷ்ண முத்து ஆதித்தர் பாடிய திரிமூர்த்திகள் ஸ்தோத்திர வெண்பாவும் அதற்கு அவர் தானே செய்த உரையும் காணக் கிடைக்கிறது. அது பின்வருமாறு:

திரிமூர்த்திகள் ஸ்தோத்திரம்

''பெற்றோரைப் போற்றுவம் பேரம் மணீயநூல்
வற்றாச் சமுத்திரஞ்சூழ் வையத்து-ஞற்றோர்தம்
வேர்முக்கா லந்தெளிய வெண்பாவி லேசொல்லத்
தேர்முக்கோல் செங்கை தினம்.

(இ-ள்) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென்று ஒளவையார் திருவுள்ளம் பற்றியிருத்தலின் மக்களியாக் கையைப் பெற்ற யாம் நம்மையீன்றோராகிய தாய் தந்தை யரை யின்பொறுதற் பொருட்டு முற்பட அன்னோரை வழிபட்டு வணங்குது மென்று இந்நூலாசிரியர் கூறியது மன்றி முன்னெடுத்துக் காட்டிய சூத்திரத்துண் முதற்கட் கூறியது அன்னையாதலிற் றமதன்னையாகிய அம்மணியம்மா ளென்னு மியற் பெயரினையுடையாளை யவள தியற்கைச் சிறப்பை யெடுத்தினிது விளக்குதற்கு இச்சோதிடநூற் கவ்வன்னையின் பெயரையே பெயராகத் தந்து இஃது முட்டின்றி முடிதற் பொருட்டுத் தாம்வழிபடு கடவுளையும் மும்மூர்த்திகளையும் வணங்குங் கடவுள் வணக்கத்தை முறையே விற்பூட்டுப் பொருள் கோளாகவும் நிரனிறைப் பொருள் கோளாகவுமிச் செய்யுளிலு ரைத்தனம்; என்னை? ''தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளு மெய்தவுரைப்பது தற்சிறப்பாகும்'' என்றாராகலின் அஃதெங்கனமெனின்? எக் காலத்தும் வற்றுதலில்லா நெடுங்கடல் சூழ்ந்த இவ்வையத்தோர்கட்குரிய இறப்பெதிர்வு நிகழ்வெனு முக்காலத்தின் மூலத்தை யாவருமெளிதி லுணருமாறு பாவுட் சிறந்த வெண்பாவினா லிந்நூலைக் குறையறக்கூற ஆக்கல் அளித்தல் அழித்தலென்னு முத்தொழில்களையும் தமது செவ்விய கரத்தாலிடைவிடாது நடாத்தியருளு மொப்பற்ற கடவுளைத் துதிப்பாமென்று, தேர்தினம் பெற்றோரை என்பதென்னெனின் உரோகணி நாட்குரிய பிரமனையும், முக்கோல் தினம் பெற்றோரை என்பதென்னெனின் திருவாதிரை நாட்குரிய உருத்திரனையும் துதிப்போமென்று சொல்லியதாம். இதனுள் யாம் என்னும் எழுவாய் தொக்கு நிற்றது. இஃது பாளையங்கோட்டை திருநெல்வேலி ஜில்லா பஞ்சமாத்தாலுகாச் சீமானும் காயாமொழிக் கிராம முனிசீப்பும் அம்மணீயம் ஐயாச்சாமியம் நூலாசிரியருக்கு இஷ்டரும் ஆகிய இராமகிருஷ்ணமுத்து ஆதித்தநாடரவர்களால் உரையிடப் பட்டது.

(8) இராமசாமி ஆதித்தர்

இவர் முன் கூறப்பட்ட இராமகிருஷ்ண முத்து ஆதித்த நாடரின் பௌத்திரனாகும். தெற்குவீடு கீழவாசல் நிமிடக்கவி சிவசுப்பிரமணிய ஆதித்தருக்கு இவர் பிரியாத உற்ற நண்பராயிருந்தார். இவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர். நிமிடக்கவி சிவசுப்பிரமணிய ஆதித்தர் இவரைப்பற்றிப் பாடிய

பல கவிகளில் இரண்டு கவிகள் பின்வருவன.

இராமசாமி ஆதித்தர் மணக்கோலத்துடன் ஏரல்நகரில் பல்லக்கில் பவனி வருகையில் ஆற்றிலிருந்து தண்ணீர் மொண்டுகொண்டு வந்த பெண்கள், ''மணமகன் மணமகளுக்குச் சரியான சிவந்த அழகில்லை'' என்று பேசிக் கொண்டதைக் காதில் வாங்கிய நிமிடக்கவி சிவசுப்பிரமணிய ஆதித்தர் அப்பொழுது பாடியது:

குணம் குலம் கல்வி செல்வம் கோமள வளப்புச் செம்மை
மணந்திகழ் அரியதிண்டோள் மதன சுந்தரனைக் கண்டால்
அணங்கு நோய் செய்து மாதர் அவரவர் கணவரோடு
இணங்கி டிலிவனையெண்ணி ஏக்கமுற்றிருப்பர் மாதோ.

பானலங் கனிந்த கதலிச் செந் தேனும்
பைந்தொடி கலவியா ரமுதும்,
மேனல முளதே யாயினும் வெறுத்திடும்
மெய்யுயிர்த் துணையொடும் துணையாம்
கோனெனும் ராம சாமிஆ தித்தன்
கொவ்வைவாய் இன்னிசை கேட்கில்
வான்கட லொலியா தென்செவி நிறையும்
மாந்தியும் மால்மிக வுளதே.

## (9) இராமசாமி ஆதித்த நாடன்

இவர் வடக்குவீடு கீழவாசல் மூலபுருடன். இவர் புல்லுவிளைக் கிராண்டுக்குள் கோவில் கொண்டிருக்கிறார்.

ஆதித்த பூபதிகள் ஒவ்வொருவருடைய அபிதான விளக்கத்தையும் விளக்கப் போவதாயின் இந்நூல் மிகவும் பெரிதாகிவிடும். ஆகையால் கி.பி. 1800-ம் வருடத்துக்குப் பின்னுள்ளவர்களும் 1930-ம் வருடத்துக்கு முன் இறந்து போனவர்களுமாகிய பல பெரியார்களில் சிலரது அதாவது ஒரு ஒன்பதுபேரின் வரலாறுகளையே மேலே விளக்கினோம்; மற்றவர்களைப் பற்றியும் இக்காலத்தில் உயிருடன் இருக்கிறவர்களைப் பற்றியும் இந்நூலில் கொஞ்சமும் சொல்லப்படவில்லை.

## 6-ம் அத்தியாயம்

# திருச்செந்தூர் ஆலயமும் காயாமொழி ஆதித்தர்களும்

திருச்செந்தூர் ஆலயத்தில் மாத்திரம் காயாமொழி ஆதித்தர்களுக்கு இருக்கிற உரிமைகளை இந்த அத்தியாயத்தில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறேன்.

பஞ்சமாத் தாலுகாவில் கி.பி. *1843*-ம் வருடம் முத்துக் குமாரசாமியாபிள்ளை என்பவர் தாசில்தாராக இருந்தார். அவர் சில சாஸனங்களைப் பரிசோதித்து அவைகளை ஓலைப்பத்திரத்தில் பதிவு செய்து தமது கையெழுத்தும் வைத்திருக்கிறார். அதனை இவ்விடம் எடுத்தெழுதுகிறேன்.

(கி.பி. 1584)

**760**-ம் ஆண்டு தை-**14**மீ௳ நத்தேதி சுக்கிரவாரமும் அஸ்த நக்ஷத்திரமும் கூடின சுபயோக சுபதினத்தில் குடநாடு திருச்செந்தூர் சிரிபுவன மகாதேவி சதுர்வேதமங்கலத்தில் நாயனாரினைய நயினார் கோயில் சொர்ண நிலையத்தில் திருச்செந்தூர் சுவாமி சிவக்கொளுந்தீஸ்வரர் கோயில் சிவக் கொளுந்து முதலியார் திரவியத்தினாலும் சாமிக்கொத்தனாலும் வேலாயுதச்சிவம் பண்டாரத்தாலும் கட்டப்பட்ட பெரிய கொட்டாரவாசல் பெரியகதவுக்கும் கிழக்கு, விசயரங்க நாயக்கர் காசிபக்கொத்து நாயக்கர் இவர்கள் அதிகாரத்தில் அவர்கள் வகை நரசிங்கராயர் கிஷ்ட்ணராயர் அதிகாரத்தில் கட்டப்பட்ட மண்டபத்துக்கு எல்கையாவது, வடஎல்கை திம்மிசெட்டி சுப்பராயசெட்டி நந்தவனபூசை மடத்துக்கும் தெற்கு, கதவு இல்லாத பெரிய கொட்டார வாசலுக்கும் கருப்பசாமி குத்துக்கல்லுக்கும் மேற்கு- சிவனணைந்த பெருமாள்பிள்ளை சத்திரத்திற்கும் பாசுரம் பையன் முன்னோர்கள் காலிமனைக்கும் வடக்கு. இந்நான்கு

எல்கைக்குட்பட்ட மண்டபம் காயாமொழியிலிருக்கும் சிவந்தி ஆதித்த நாடன் குமாரசாமி ஆதித்தநாடன் உள்ளிட்டாரால் அப்போது வழங்கப்பட்ட நாணயம் தடிக்காசு குண்டுப்பூ விராகன் ஏக்கரா நாணயம்.... இதுகளால் கட்டப்பட்ட மண்டபம். இதன் கணக்கு நாடாக்கள் வீட்டில் சோதனை செய்து ஷிகணக்கில் அதிகாரஸ்தர்கள் கையெழுத்து சகிதமாய் பார்வையிடப்பட்டும் அவர்கள் கையெழுத்து வைக்கப் பட்டிருந்த கணக்கு சீரணப்பட்டும் அதற்குப்பதில் நகல் எழுதப்பட்டு இருக்கிறது. நகல் எழுதினது நாடாக்கள் கணக்கு வீரவாகுபிள்ளை.

## முத்துக்குமாரசாமியாபிள்ளை தாசில்

(கி.பி. 1675)

850-ம் ஆண்டு வைகாசி மாதம் 23-ம் தேதி ஆதித்த வாரமும் ரேபதி நக்ஷத்திரமும் கூடின சுபயோக சுபதினத்தில் குடநாடு திருச்செந்தூர் சிரிபுவன மகாதேவி சதுர்வேதமங் கலத்தில் நாயனாரினைய நயினார்கோயில் சொர்ண நிலையத்தில் திருச்செந்தூர் சிவக்கொளுந்தீஸ்வரர் கோயில் கருப்பசாமிக் குத்துக்கல்லுக்கும் கதவில்லாத பெரிய கொட் டார வாசலுக்கும் கிழக்கு. வடக்கு எல்கை. சிவமுப்பன் சவுக்கைக்கும் மேற்படி கிழமேல் ஓடிய பாதைக்கும் திரு மலையப்பபிள்ளை காலி மனைக்கும் தெற்கு, கிழக்கு எல்கை, ஆதித்தநாடாக்களால் கட்டப்பட்ட கொட்டகைக்கும் மேற்கு, தென் எல்கை. பாஞ்சாலங்குறிச்சி குமாரப்பிள்ளை மண்ட பத்துக்கும் கருப்பன் செட்டி மடத்துக்கும் கம்மாளர் காலி மனைக்கும் கீழ்மேல் ஓடிய இடுக்குக்கும் வடக்கு. இந்நான்கு எல்கைக்கு உட்பட்ட மண்டபம் காயாமொழியிலிருக்கும் ராமலிங்க ஆதித்த நாடனாலும் தீத்தாரப்ப ஆதித்த நாடனாலும் அறுபத்து மூவர் ஆதித்த நாடனாலும் வகையறாக்களாலும் கட்டப்பட்ட மண்டபம். இதன் வகை விபரக்கணக்கு தீத்தாரப்ப தளவாவாலும் வடமலையப்பபிள்ளையனாலும் நவாபுவகை செய்து முகுதுவாலும் கையெழுத்து வைக்கப் பட்டும் கணக்குகள் சீரணப்பட்டும் நொந்து அதற்கு நகல் இருளப்ப மாணிக்கவாசகம் பிள்ளையால் நகல் எழுதப் பட்டிருக்கிறது.

# முத்துக்குமாரசாமியாபிள்ளை தாசில்
(கி.பி.1843)

1018-ம் ஆண்டு ஆனிமாதம் 22-ம் தேதி சோமவாரமும் அஸ்த நக்ஷத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் குடநாடு திருச்செந்தூர் ஸ்ரீ புவனமாதேவி சதுர்வேதமங்கலத்தில் நாயனாரினைய நயினார்கோயில் சொர்ணநிலையத்தில் இதற்குமுன் ஆதித்தநாடக்களால் ஓலைப்பறையாகக் கட்டப் பட்டிருந்த கொட்டகைக்கு எல்கையாவது; முன் ஆதித்த நாடாக்களால் கட்டப்பட்டிருக்கின்ற கல்மண்டபத்துக்கும் கிழக்கு வடஎல்கை, திருமலையப்ப பிள்ளை மண்டபத்துக்கும் திம்மிசெட்டி சுப்புராய செட்டியாரால் ஞானசிகாமணி முதலியாரவர்கள் முன்னோர்களுக்குக் கிரயமாகி ஞானசிகா மணி முதலியாரால் கார்த்திகை முத்தையனால் காயாமொழி தையல்பாக ஆதித்த நாடன் மகன் ராமலிங்க ஆதித்தநாடன் கிரயம் வாங்கிய மனைக்கும் நெல்லுணர்த்துகிற இடத்தைக் கிரயத்துக்கு வாங்கி வெங்கு முதலியாரால் கட்டப்பட்ட மண்டபத்துக்கும் தெற்கு, கீழ்எல்கை, வாசமுத்துச் செட்டி குறட்டுக்கும் ரதவீதிக்கும் மேற்கு, தென்எல்கை, விசயராகவ முதலியார் சத்திரத்துக்கும் ஆதித்தநாடாக்கள் தண்ணீர்ப் பந்தல் மண்டபத்துக்கும் குமாருப்பிள்ளை சுவாமி எழுந்தருளப் பண்ணுகிற மண்டபத்துக்கும் வடக்கு, இந்நான்கு எல்கைக் குட்பட்ட மண்டபத்தை காயாமொழியிலிருக்கும் தையல் பாக ஆதித்த நாடன் மகன் ராமலிங்க ஆதித்த நாடனால் ரூபாய் ஏழாயிரம் போடப்பட்டும் நாட்டில் ரூபாய் எண்ணாயிரம் வசூல் செய்யப்பட்டும் ரூபாய் பதினையாயிரம் செலவு செய்து மண்டபம் கட்டப்பட்டும் முகப்புக்கோட்டை வெங்கு முதலியாரால் தகனால் நெறித்து அதற்காக சின்னானாசாரி ராமலிங்காசாரி இவர்களால்தூண் ஒண்ணுக்கு ரூபாய் இருநூறு பேசி நாலு தூணுக்கு ரூபாய் எண்ணூறுக்கு ரூபாய் நானூறு அட்வான்ஸ் கொடுத்து மலைப்பிளவையாக அடித்து மலையில் வைக்கப்பட்டும் குத்துக்கல் நட்டப்பட்டும் இருக்கிறது. இதுக்கு வகை விபரக் கணக்கு சொக்கலிங்கம் பிள்ளை தகப்பனார் வீரபத்திர பிள்ளையால் எழுதப்பட்டும் ஷை கணக்குகளுக்கு அவர் மகனால் நகல் எழுதப்பட்டுமிருக்கிறது. அந்தக் கணக்கில் தாசில், முத்துக்குமாரசாமியா பிள்ளை

கையெழுத்து வைக்கப்பட்டு அதிலுள்ள வாடகை மகமைகள் நாடாக்களால் வாங்கப்பட்டும் தர்மம் செய்யப்பட்டும் வருகிறது.

## முத்துக்குமாரசாமியாபிள்ளை தாசில்.

[தாசில்தார் முத்துக்குமாரசாமியா பிள்ளையின் கை யெழுத்துடன் கூடிய ஷை மூன்று ஓலைப் பத்திரங்களின் நகல்களையும் காயாமொழி திரு.சு. பார்வதி ஆதித்தர் அவர்கள் கி.பி. 1924-ம் வருடம் நவம்பர் மாதம் வெளிவந்த க்ஷத்தரிய மித்திரன் பத்திரிகை மலர் 6 இதழ் 3 பக்கம் 95-லும் ஷை வருடம் டிசம்பர் மீ ஷை பத்திரிக்கை மலர் இதழ் 4 பக்கம் 117லும் வெளியிட்டிருக்கிறார்கள்.]

திருச்செந்தூர் தாலுகா ஸ்ரீமான் குமாரவர்மா அவர்களால் கி.பி. 1922-ம் வருடம் திருநெல்வேலிப் பாலம் ஸ்ரீகாந்திமதி விலாஸம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்த "திருச் செந்தூர் வைகாசி விசாகம்" என்னும் நூல் பக்கம் 5-ல் "அவ்வாதித்தன் அளாவிய இவ்வாதித்தன் அருள் தேரும்" என்றொரு சுலோகம் வருகிறது.

ஆறுமுகநேரி ஸ்ரீமான் சி.அ. ராமச்சந்திரன் என்பவரால் எழுதப்பட்டு மதராஸ் சைதாப்பேட்டை ஒற்றுமை ஆபீஸாரால் கி.பி. 1926-ம் வருடம் வெளியிடப்பட்ட "வள்ளி நாயகி" என்ற நாவல் பக்கம் 18, 19-ல் காயாமொழி ஆதித்தர்களுக்கு திருச்செந்தூர் ஆலய இரதோற்சவத்திலிருக்கிற உரிமைகள் வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

மதுரையைச் சேர்ந்த ஆலயங்களில் பாண்டி மன்னர் களுக்கிருந்த உரிமைகள் வடுக அரசாட்சி காலத்தில் இழக்கப்பட்ட போதிலும், காயாமொழி, ஆதித்தர்களின் திருச் செந்தூர் சுப்பிரமணிய ஸ்வாமியி னாலயச் சுதந்தரம் அவர்களால் இழக்கப்பட்டிலது. ஆங்கில மன்னர் காலத்திலே, தர்மகர்த்தாக்கள் நியமித்து தேவஸ்தலங்கள் பரிபாலிக்கப் பட்ட காலத்திலே ஆதித்தர்கள் மேல் பொறாமையும் துவேஷமும் குடிகொண்ட சில கர்த்தாக்களால் அவர்கள் சில சுதந்தரத்தை யிழந்தார்கள். அவைகளுள் முக்கியமானது ஆலயத்தில் மேலவாசல் பிரவேசமும் மண்டபத்தில் மகமை வசூல் செய்வதுமாகும்.

இதன் பிறகு திருச்செந்தூர் ஆலயத்தில் தங்களுக்குள்ள உரிமையை விரும்பிக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஆதித்த வாலிபர்கள் கவலையில்லாதவர்களானார்கள். நமது கண் காண நடந்துவந்த சில சுதந்தரங்களுங்கூட சுமார் பத்து வருடங்களுக்கு முன் கைவிடப்பட்டன. எனினும் இன்னும் சில சுதந்தரங்கள் அவர்களை விட்டு விலகாமல் இருந்து கொண்டே வருகின்றது. அவர்கள் சுதந்தரங்கள் மதுரை விக்டோரியா எட்வர்ட் ஹாலில் கூடிய நாடார் மகா ஜன சங்கம் 4-வது கான்பரன்ஸில் 1918-ம் வருடம் ஜூன் மாதம் 6-ம் தேதி ரபி. பி.ஜே.எம். குலசேகரராஜ் அவர்களால் தயார் செய்து வாசிக்கப்பட்ட உபந்யாஸத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உபந்யாசம் "நாடார் குல வரலாறு' என்ற பெயருடன் பாளையங்கோட்டை டார்லிங் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு புஸ்தக ரூபமாக வெளிவந்திருக்கிறது. ஷை புஸ்தகம் பக்கம் 30, 31-ல் சொல்லப்பட்டிருப்பது பின்வருமாறு:

திருச்செந்தூர் சிவன் கோவிலுக்குள்ளிருக்கும் மண்டபம், முற்காலத்தில் திருச்செந்தூர் தாலுகா, காயாமொழி சிவந்தி ஆதித்த நாடன் என்பவரால் கட்டி வைக்கப்பட்டதுந் தவிர, ஷை கோவில் சிவக்கொழுந்தீஸ்வரர் சந்நதி ஆயிரக்கால் மண்டபமும், நந்தவனமும் ஷை சிவந்தி ஆதித்த நாடாராலும், குமாரசாமி ஆதித்த நாடர் என்பவராலும் கட்டப்பட்டன. அவைகளின் குறை வேலையை நாளதுக்கு சுமார் 100-வருஷங்களுக்கு முன்பு ராமலிங்க ஆதித்த நாடர் என்பவர் கட்டி முடித்தார். துவக்க முதலே இந்த மண்டங்கள் ஷை ஆதித்த நாடர்களின் ஆதினத்திலிருந்து வந்தன. ஆவணி, மாசி உத்ஸவங்களில் ஷை பந்தல் மண்டபத்துக்குள் ஷை ஈஸ்வரர் வரும்போது நடக்கும் நைவேத்தியச் செலவு ஆதித்த நாடார்களால் நடத்தப்படும். ஷை மண்டபத்து முகப்பிலிருக்கும் 6-ம் திருநாள் சாட்டையடி மண்டபப்படியும் ஷை ஆதித்த நாடர்களுடையது. இதுபோக, திருச்செந்தூர் கோவிலுக்கு (ரதம்) தேர் செய்து வைத்ததும் ஆதித்த நாடார்கள்தாம். இது விஷயமாய் 'திருச்செந்தூர் கோவில் பிரபந்தம்' என்னும் பழைய நூலில், "அட்ட திசை புகழ் ஆதித்த நாடார் கொட்டகை தேரையும் பாராய்" என பாட்டு வருகிறது. ஆவணி, மாசி மாதங்களில் ரத உத்ஸவம் நடக்கும்போது ஷை

ஆதித்த நாடர்களை ஷை கோவில் ஸ்தானீகர்கள், தாசிகள் முன்பின் வர, மேள தாளங்களோடு மிக்க மரியாதையாய் ஷை தேருக்குச் சமீபமாக அழைத்துவர, அவர்கள் முன்னாயத் தமாய் பலி-விடலை எறிதல் முதலிய கிரியைகளை நடத்திக்கொண்டு, ஷை தேர் வடத்தைத் தொட்டுக் கொடுத்த பின்பே இதர குலத்தவர்கள் தேரை இழுப்பதுண்டு. இந்த வழக்கம் ஞாபகத்துக் கெட்டாக்கால முதல் நடந்துவருகிறது. ஷை தேர் அலங்காரச் செலவையும் இந்த ஆதித்த நாடர்களே கொடுத்து வருகிறார்கள். இது விஷயமாய், ''ஆர் வந்தால் தேரோடும்? ஆதித்தநாடன் வந்தால் தேரோடும்' என, அவ்வட்டகையில் யாவருமறிந்த பழமொழியிருந்து வருகிறது. மேலும், பிரதிதினமும் சுப்பிரமணியர் ஆலயத்தில் நடக்கும் 'அறுபத்துமூவர்' அர்ச்சனைச் செலவு ஷை ஆதித்த நாடர்களால் நடந்து வருகிறது. விசாக காலத்தில் ஊரடங்க பிராமண போஜனம் ஆதித்த நாடர்களால் கொடுக்கப்பட்டு வருகிறது. ஐப்பசி மாதத்தில் சுப்பிரமணியருக்கு திருக் கலியாண உத்ஸவம் நடக்கும்போது, முதல் நாளில் மாப்பிள்ளை வீட்டுச் செலவாக திருமாங்கல்யம் செய்து கொடுப்பதும், கலியாண விருந்தும், ஊரடங்க பிராமண போஜனமும், ஆதித்த நாடர்களால் நடக்கும்; மறுநாள் பெண் வீட்டு வகையாய் நடக்கும் விருந்தும், ஊரடங்க பிராமண போஜனமும், வள்ளியம்மை தினைப்புல மண்டபப்படியும் நட்டாத்தி ஜமீன்தாரான திருவழுதி நாடர் செலவில் நடக்கும்; ஆவணி, மாசி மாத திருநாட்களில் திருவாங்கூர் மகாராஜாவால் நடத்தப்படும் உற்சவத்தின் இரண்டாம் 'சேவை,' மேற்கண்ட ஆதித்த நாடர்களால் நடத்தப்படும். ஷை தேவஸ்தான விஷயமாகவும் தேர் விஷயமாகவும் ஆதித்த நாடர்கள் முற்காலத்தில் மிகுதியான மானியங்கள் விட்டுக் கொடுத் திருப்பதில், சிலவற்றுக்கு அவர்களே நாளதுவரை அக்தார்களாகவும் இருந்து வருகிறார்கள்; அப்படியே, ஷை சுப்பிரமணியர் கோவிலின் ''ஆட்டவிசேஷம், மாஸ்த விசேஷம், ஆற்றுத் திருமஞ்சணம்'' இவைகளுக்காகவும், திருச்செந்தூரிலுள்ள நந்தவன பரிபாலனம், மடத்து திரு விளக்கு இவைகளுக்காகவும், நட்டாத்தி-திருவழுதி நாடர் குடும்பத்தார் விட்டுக்கொடுத்த மானியச் சொத்துக்கள் சிலவற்றின் அக்தார் வேலை, ஷை திருவழுதி நாடர்

குடும்பத்திலிருந்து வருகிறது. கார்த்திகைத் தீப உற்ஸவத்தில் திருச்செந்தூரில் நட்டும் 'சொற்கப்பனையும்' அதைச் சேர்ந்த செலவும் ஆதித்த நாடர்களால் நடத்தப்பட்டு வருகிறது. வெயிலுகந்த அம்மன், 8-ம் திருநாள் மண்டபப்படி செலவு பூராவும் ஆதித்த நாடர்களால் நடந்து வருவதுமல்லாமல், தெற்கு ரதவீதியிலிருக்கும் மண்டபமும் அதைச் சேர்ந்த நந்தவனமும் ஆதித்த நாடர்களின் ஆதினத்திலேயே யிருந்து வருகின்றன. ஷை மண்டபச் செலவுக்காகவும், அதிலிருக்கும் (கணபதி) பிள்ளையார் பூசைக்காகவும், முன்னமே ஷை நாடர்கள் போர்ந்த மானிபமும் விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இப்படியே இன்னும் பலவுண்டு.

கி.பி. 1925-ம் வருடம் ஜனவரி மாதம் வெளியான க்ஷத்திரிய மித்திரன் பத்திரிகை மலர் 6. இதழ் 5. பக்கம் 149-ல் அதன் ஆசிரியர் த. விஜயதுரைசாமி கிராமணியார் எழுதிய, 'கோவில் பிரவேசம்' என்னும் வியாசத்தில் மேற்கண்ட விஷயங்கள் எடுத்துக் கையாளப்பட்டிருப்பதோடு 1925-ம் வருடம் ஏப்ரல் மாதம் வெளியான க்ஷத்திரியன் பத்திரிகை பக்கம் 9-விலும், ஷை வியாசம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

'குற்றாலக் குறவஞ்சி' என்னும் பழைய இலக்கிய நூலில் சிங்கனுக்கும் சிங்கிக்கும் நடக்கும் சம்வாதத்தில் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

சிங்கன்: மார்பிற்கு மேலே புடைத்த சிலந்தியில்
கொப்புளங் கொள்வானேன் சிங்கி
சிங்கி: பாருக்குள்ளேற்றமா காயங்குளத்தார் தந்த
பாரமுத்தார மடாசிங்கா.
சிங்கன்: எட்டுப்பரவை குமுறுங் கழுத்திலே
பத்தெட்டுப் பாம்பேதடி சிங்கி.
சிங்கி: குட்டத்து நாட்டாருங் காயங்குளத்தாரும்
இட்ட சவளியடா சிங்கா.

## 7-ம் அத்தியாயம்

# பொதுச் சமாச்சாரங்கள்

## இராஜாங்க முறை

சோழ வம்ச ஆதித்த பூபதிகள் ஆதியில் மதுரை திருநெல்வேலி தென்காசி நகரங்களில் இருந்து அரசாண்ட பாண்டியர்களுக்கு திறை செலுத்திக்கொண்டு சிற்றரசர்களா யிருந்தார்கள். பிறகு மதுரையிலிருந்து அரசாண்ட நாயக்க மன்னர்களில் கி.பி. 1623-முதல் 1659-வரை அரசாண்ட திருமலை நாயக்கர் காலமுதல் மதுரை நாயக்க மன்னர்களுக்கு திறை செலுத்திக்கொண்டு சிற்றரசர்களாயிருந்து வந்தார்கள். அப்புறம் தற்காலம் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து வருகிறார்கள். இவர்கள் சிற்றரசர்களாயிருந்து வந்த காலத்தில் இவர்களுக்கு உட்பட்ட ஊர்கள் பல உண்டு. ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு தலைவர்கள் ஜமீன்தார் போன்று இருந்து வந்தனர். அவர்கள் ஆதித்தர் அரசாட்சிக்கு திசை காவல் அல்லது வரி கொடுத்து வந்தனர். அக்காலத்தில் தக்ஷிணத்திலுள்ள பல தலைவர்களின் உதவியாலும் ஆதித்த நாடனின் முயற்சியாலும் பல இடங்களிலும் பேட்டைகள் கட்டப் பட்டன. அப்பேட்டைகளிற் பல பிற்காலத்தில் வேற்றரசர் களால் பறிமுதல் செய்யப்பட்ட போதிலும் தக்ஷிண மாற நாடார் பேட்டைகளென்றும் குறிப்பாக ஆதித்த நாடார் பேட்டைக ளென்றும் நாளதுவரை வழங்கப்பட்டு வருகிறது. பறிமுதல் செய்யப்படாத சில பேட்டைகளுக்குரிய வரவு செலவு பார்க்கும் மானேஜர் பதவியும் நாளதுவரை ஷி ஆதித்த நாடார் குடும்பத்தவரின் மேல்பார்வையிலிருந்தே வருகிறது. அது போலவே தக்ஷிண ஹிந்து நாடார்களது திருச்செந்தூர் மண்டப மானேஜர் பதவியும் நாளது வரை ஆதித்த வம்சத்தாரிடையே தான் இருந்து வருகிறது.

இவர்களது அரசாட்சியில் இவர்களுக்கு மந்திரி ஸ்தானத் திலிருந்தவர்கள் முகுந்தர் அல்லது முக்கந்தர் எனவும், புரோகித வேலை பார்த்தவர்கள் குருக்கள் அல்லது ஐயர் எனவும்,

கொடி பிடிப்போர் கொடிக்காரர் எனவும், தண்டக்காரர், நோட்டக்காரர், சேனாதிபதியார் முதலியோர் அண்ணாவி அல்லது சிலம்பக்காரர் எனவும், திசை காவற்காரர்கள் பணிக்க ரெனவும், வேவுகாரர்களாகவும் தூதர்களாகவும் பல்லக்கு சுமப்பவர்களாகவும் படை வீரர்களாகவும் :இருந்தவர்கள் சேர்வைக்காரர் எனவும் பட்ட முடையவர்களர்க இருந்து வந்தார்கள். சிலகாலங்களில் இவர்கள் கையின் கீழ் மறவர் படைகளுமிருந்து வந்திருக்கின்றது. இவர்களிடம் காலாட் படைகள் மாத்திரமே யிருந்ததெனினும் பிரயாண சௌகர்யத் துக்காக ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு குதிரையும் இருந்து வந்தது. படையாளர்கள் போரில்லாத காலங்களில் பயிர்த் தொழில்கள் முதலியன செய்து கொண்டிருப்பது வழக்கம். இவர்களது அரசாட்சியில் பல தொழில் வகுப்பினரும் தத்தமது கடமைகளைத் தவறாது சரிவரச் செய்து வந்தமையால் குடிகளெல்லோரும் க்ஷேமமாகவும் அமைதியாகவும் வாழ்ந்து வந்தார்கள். ஆதித்த சமஸ்தான மேளகாரர்கள் இன்னமும் சோலை குடியிருப்பில் வசித்து வருவதோடு விசேஷ நாட்களில் ஆதித்தர் வீடுகளில் வந்து மேளம் சேவிக்கிறார்கள்.

## குடிகள்

குடி ஜனங்கள் ஆதித்தர்களை நாளது வரையும் நாயன், எஜமான்கள், முதலாளி, மகாராஜா, நிலைமைக்காரர், சாமி, கும்பிடுதுரை என்று அழைப்பதுண்டு. அவர்கள் ஆதித்தர் களைக் கண்டவுடன் தங்கள் மேல் வேஷ்டியை இறக்கி விடுவது, நமஸ்காரம் செய்வது முதலிய மரியாதைகள் செய்வதுண்டு. அவர்களாவது வேறெவர்களாவது தங்கள் நன்மை தின்மை காரியங்களில் ஆதித்தருடைய தெருக்களில் பவனி வருவதில்லை. சகல விஷயத்திலும் ஆதித்தர்களுக்கு மற்றவர்கள் தாங்களாகவே ஒரு மதிப்பையும் உயர்வையும் கொடுத்து வருகிறார்கள். ஆனால் இக்காலத்து ஆதித்த வாலிபர்களிற் சிலர் ஜனங்களிடை சமதர்மத்தை யனுஷ்டிக்க முயற்சி செய்து வருகின்றனர்.

## ஆயுதங்கள்

ஆதித்தர்கள் யுத்தத்தில் உபயோகித்த ஆயுதங்கள் அரிவாள், கத்தி, பட்டாக்கத்தி, ஈட்டி, வல்லையம், வில்லம்பு,

வேல் கம்பு, வீச்சுவாள், சொருகுவாள், சாதாத்தடி என்பவை களாகும். அவர்கள் உபயோகித்த வேல் கம்பு 18, 20 அடி நீளமுள்ளதாயிருக்கிறது. சாதாத்தடி ஐந்தடி உயரமுள்ள உலக்கை மாதிரி இருக்கிறது. சொருகுவாள் என்பது கைத்தடியில் துவாரமிட்டு அந்தவாளை அக்கம்பினுள் செலுத்தப்பட்டு பார்வைக்கு சிறு கம்பு மாதிரியாகவே இருக்கிறது. சொருகப்பட்டிருக்கும் வாளைப் பார்த்தால் பளபளப்பாயில்லாமல் துருப்பிடித்த மாதிரியே இருக்கிறது. அதைக் காய்ச்சி அடிக்கும்போதே விஷத்தைக் கலக்கிற தென்றும் அந்த வாளினால் கொஞ்சம் கோரை யேற் பட்டாலும் உடனே மரணம் சம்பவிக்குமென்றும் சொல்லுகிறார்கள். இந்த ஆயுதங்களும் வேட்டையில் உபயோகித்த சல்லடம், வேட்டைவார், வேட்டைச் செருப்பு, வில், உண்டைகள், பூண் கட்டிய தடிகள், சக்கரங்கள் முதலிய பலவும் நாளதும் சில ஆதித்தர் வீடுகளில் உதவாமற் கிடக்கின்றன. அக்காலத்தில் ஆண்கள் சதா ஆயுதபாணி களாகவே யிருந்தனர். எந்த நேரமும் தலைப்பாகையும் வைத்திருப்பர். கலியாணப் பட்டணப் பிரவேச காலத்தில் யுத்தாயுதமாகிய பட்டயத்தை அல்லது கத்தியை மணமகன் தனது வலது கையில் பிடித்திருப்பது அல்லது இடுப்பில் அணிந்திருப்பது கட்டாயமாக அனுஷ்டிக்கப்பட்டது.

## தேகாப்பியாசம்

காயாமொழியில் ஒரு இளவட்டக்கல் உண்டு; அது உருண்டை வடிவாயிருக்கும். இந்த இளவட்டக்கல் நாளதும் வெளியே கிடக்கின்றது. ஒவ்வொரு வாலிபரும் தங்கள் பலத்தைக் காட்டுவதற்காக அந்தக்கல்லை முழங்கால் வரையில் எடுத்து மேலே உருட்டித் தோள் வரையில் கொண்டுபோய் மறுபுறத்தில் போட்டுவிடுவர். கற்களை கையிலெடுத்து தூரத்திலுள்ள பொருட்களைக் குறிப்பாய் எறிந்து விடுவர். எல்லாருக்கும் வில் வித்தையும் சிலம்ப விளையாட்டும் நன்றாகத் தெரியும். சிலம்ப வித்தையில் எதிராளியின் கையிலுள்ள கம்பையோ, வாளையோ, தன்கையிலுள்ள கம்பினால் பிடுங்கிக் கொள்வர். கீழிருந்து நமது நம்பிக்கைக்கு அடங்காத உயரத்துக்கும் அந்த உயரத்திலிருந்து பூமிக்கும் தேகத்தில் யாதொரு விதமான

காயமும் ஏற்படாமல் அந்தரடித்துக் குதித்து விளையாடுவர். இது தவிர கிளித்தட்டு, உப்புக்கோடு என்ற பலவிதமான விளையாட்டுகள் விளையாடுவர். இத்தகைய தேகாப் பியாசத்தால் ஒவ்வொருவரும் தேக திடமுள்ளவராகவும் யுத்தத்தில் சுத்த வீரராகவும் விளங்கினர். இதுவுமல்லாமல் இவர்கள் வேட்டைப் பிரியர்களாகவும் வேட்டையாடு பவர்களாகவும் இருந்தனர்.

## வாகனங்கள்

ஆடவர்களுக்கு குதிரைகளும் கொம்புப் பல்லக்குகளும் பெண்களுக்கு பெட்டிப் பல்லக்குகளும் மூடுவண்டிகளும் வாகனங்களா யிருந்தன. நாளதும் சில பல்லக்குகள் மூலை முடுக்குகளில் கிடக்கவே செய்கின்றன. இந்தக் காலத்திலும் பெண்கள் மூடு வண்டிகளிலாவது முக மூடியுடன் தோழிகளுடனாவதுதான் பிரயாணம் செய்கிறார்கள்.

## கல்வி

ஆதித்தர்கள் தாமே மிக்க கல்விமான்களாக இருந்ததோடு கற்றோர்களை ஆதரித்தும் வந்தனர். ஓலை யேட்டுப் பிரதிக ளாகிய ராமாயண பாரத நைடதம் திருக்குறள் முதலிய பழைய நூல்கள் நாளைக்கும் ஆதித்தர் வீடுகளில் உண்டு. ஆதித்தர்களில் ஆண் பெண் இருபாலரும் காவியத்தையும், கலையையும் வளர்த்துவந்தார்கள். அவர்கள் சொந்தத்தில் பாடிய எண்ணிறந்த பல பாடல்கள் கரையானுக்கு இரை யாயின. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வித்வான்களாக விளங்கியதோடு புலவர்களைப் போற்றி வளர்த்தும் வந்தனர். சங்கீதத்தில் விற்பன்னர்களாகவும் சதுரங்க சொக்கட்டான் மனை முதலிய யுக்திக்குரிய விளையாட்டுகளில் தேர்ச்சியுள்ள வர்களாகவும் இருந்து வந்தனர். நாளதும் தமிழ் ஆங்கில உயர்தர பட்டதாரிகள் நூலாசிரியர்கள் உத்தியோகஸ்தர்கள் ஆதித்த வம்சத்தில் பலர் இருந்தே வருவதோடு மேற்கண்ட பல சிறப்புகளும் இன்னமும் பலரிடம் இருக்கவே செய்கிறது. தற்காலம் இரண்டொருவர் வியாபாரத் துறையிலும் இறங்கியிருக்கின்றனர்.

## மதம்

ஆதித்தர்கள் சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயத்தினர். உமாதேவியின் அம்சமாய் காயாமொழியில் கோவில் கொண்டிருக்கும் கௌமாரி தேவி என்னும் துர்க்கை அம்மனையே அவர்கள் குல தேவதை யாகக் கொண்டு வழிபட்டு வருகிறார்கள். ஷ கோவிலில் பிரதி வருடமும் ஆடி மாதத்துக் கடைசிச் செவ்வாய்க்கிழமை மகோத்ஸவம் நடைபெற்று வருகிறது. கி.பி. 1921-ம் வருடத்திலிருந்து ஷ மகோத்ஸவத்தில் சப்பரம் எழுந்திருந்து ஊர் வலமும் ஏற்பாடு செய்யப்பட்டு நடந்து வருகிறது. தென்னிந்தியாவின் அத்துவைத சித்தாந்த சமயாசாரியாராகிய லோக குரு என்னப்பட்ட சிரிங்கேரி மடத்து ஸ்ரீசங்கராச்சார்ய சுவாமிகளுக்கு உட்பட்ட ஐந்து மடங்களில் சத்யோஜாத மடம் ஒன்று இந்த மடத்துப் பிராமணத் திருமேனிகளான குரு சுவாமிகளுக்கு ஆதித்தர் வெகு காலமாக சிஷ்யர்களாக இருந்து வருகிறார்கள்.

ஆதித்தர்கள் இந்து மதத்திலுள்ள ஒவ்வொரு பிரிவையும் ஆதரித்தே வருவதோடு இதர மதங்களையும் மதித்தே நடந்துவருகின்றனர்.

## பழக்க வழக்கங்கள்

கட்டிலிலேயே படுக்கை வைத்துக் கொள்வதும், பொன் வெள்ளிகளில் பாத்திரங்களைச் செய்து உபயோகிப்பதும், விவாக மரண காலங்களில் கணக்கிலடங்காத சடங்கு முறை களைக் கையாளுவதும் ஆதித்தர்களின் பழக்க வழக்கங்களா யிருந்து வருகிறது.

ஆதித்த சமூகத்தில் ஆண்களும் பெண்களும் ஏராளமான ஆபரணங்களை யணிந்து கொள்வது வழக்கமாயிருந்தது. கி.பி. 1880ம் வருடம் வரை தலைரோமம் கூட புருடர் யாவரும் பெண்டிரைப் போலவே பூராவும் வளர்த்துக் கட்டிக்கொண்டிருந்தனர். இருபாலரும் கல்விமிக் குள்ளவர் களாயிருந்ததோடு திட காத்திரமும் ஆரபாரமுங் கொண்டு அழகு பொருந்தியவர்களாக இருந்தனர். இக்காலத்தில் அவர்கள் தங்கள் முன்னோர்களைப் போல் ஆரவார திடகாத்திரமாக இல்லையானாலும், ஒரு தனிப்பட்ட அழகு

அவர்களிடம் பொருந்தியே காணப்படுகிறது. பொதுவாக ஆதித்தர்கள் காலமாறுதலுக் கேற்ப நியாயமாகவும் ஒழுக்கமாகவும் முன்னணியிலேயே நிற்பவர்களாயிருக் கிறார்கள்.

அவர்கள் பிராமணர்களையே புரோகிதர்களாகக் கொண்டு விவாஹம் செய்துகொள்கின்றனர். விவாஹ காலத்தில் மணமகனை மணமகள் வீட்டார் எதிர் சென்று வரவேற்று மாலையிட்டு அழைத்து வருவதும் ஆடம்பரமாகச் செலவு செய்வதும் நீளமான மாங்கலியம் தரிப்பதும் வழக்கத்தி லிருந்து வருகிறது. இவர்களுள் பாலிய விவாஹமோ, விதவா விவாஹமோ கிடையாது.

முற்காலம் குட்டம் மார்த்தாண்ட நாடர் வம்சத்திலும் பிற்காலம் அகஸ்தீஸ்புரம், படுக்கப்பத்து, தண்டுப்பத்து, தென்திருப்பேரை (மாவீடு பண்ணை) சிறுத்தொண்டநல்லூர் முதலிய ஊர்களிலும், 1885-ம் வருடத்திலிருந்து ஆறுமுகநேரி, கச்சினாவிளை தற்காலம் பல ஊர்களிலும் ஆதித்தர்கள் விவாஹம் செய்திருக்கிறார்கள். இவர்கள் குடும்பம் விருத்தியாகி சுமார் 400 வருடங்களாகப் பல தலைமுறைகள் கடந்தும் இவர்கள் இதுவரையும் தங்களுக்குள் விவாஹம் செய்துகொள்ளவில்லை.

ஆதித்தர்கள் பிரேதத்தை யெடுக்கும்பொழுது வெகு விமரிசையாகப் பலமான மூன்று புஷ்பத்தேர்கள் கட்டி அவற்றுள் நடுவில் போகும் தேரில் பிரேதத்தை வைத்து அத்தேரில் வாலிபர் ஏறி ஷ பிரேதத்துக்கு சங்கநாதத்துடன் வெண்சாமரை வீசிக்கொண்டு போவதும் பிரேதம் எடுத்துப் போகும் சமயத்திலும் பின்னால் உத்தர கிரியைகள் நடத்தும் போதும் பாவாடை கையிற் பிடித்து மாற்று என்று அழைக்கப்படும். சேலையை வெளுப்பானால் விரிக்கப்பட்டு அதன் மேல் நடந்து செல்வதும் தம்புரு மேள நாதத்துடன் இரட்டைச்சங்கு ஊதப்படுவதும் அடிமைப் பெண்கள் திரளாய் வந்து மாரடித்துச் செல்வதும் வழக்கமாக நடந்து வருகிறது.

## தற்கால மாறுதல்

காயாமொழியை முக்கிய கிராமமாகக் கொண்ட பஞ்சமாத் தாலுகாவுக்கு கி.பி. 1870-க்கு மேல் தென்கரைத் தாலுகா

என்று பெயர் கொடுக்கப்பட்டது. பஞ்சமாத் தாலுகா தென்கரைத் தாலுகாவாக மாறிய காலத்தில் காயாமொழிக் கிராமத்தின் கிராம முனிசீப்புக்குட்பட்ட பரமன்குறிச்சி, பள்ளிப் பத்து, குதிரை மொழி, தளவாபுரம் முதலிய ஊர்கள் கிராமங் களாகவும் ஷை ஊர்களிலுள்ள தலைவர்களாகிய மிராசுதார்கள் கிராம முனிசீப்புகளாகவும் மாற்றப்பட்டார்கள். கி.பி. 1896-ம் வருடம் காயாமொழியில் தபால் ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டு 1930-ம் வருடத்திலிருந்து தந்திஆபீஸும் இணைக்கப்பட் டிருக்கிறது.

கி.பி. 1900-ம் வருடத்திலிருந்து தென்கரைத் தாலுகா ஸ்ரீவைகுண்டம் தாலுகாவோடு சேர்க்கப்பட்டது. அவ்வாறு ஸ்ரீவைகுண்டம் தாலுகாவோடு சேர்க்கப்பட்ட தென்கரைத் தாலுகாவுக்கு கி.பி. 1911-ம் வருடத்திலிருந்து திருச்செந்தூர் தாலுகா என்று பெயர் கொடுக்கப்பட்டு நாளதுவரை அப்பெயராலேயே வழங்கப்பட்டுவருகிறது.

திருச்செந்தூர் தாலுகா காயாமொழியிலுள்ள ஆதித்தர் களும் மற்ற ஊர்களிலுள்ள அவர்களது சம்பந்தக்காரர்களும் நாடர் அல்லது நாடார் என்ற தங்களின் பட்டத்திலிருந்து விலகிக்கொண்டு வருகிறார்கள்.

ஆதித்தர்களின் அரசாட்சி காலத்தில் முகுந்தர், முக்கந்தர் கொடிக்காரர், அண்ணாவி, சிலம்பக்காரர் பணிக்கர் என்ற பட்டமுடையவர்களாயிருந்து வந்தவர்கள் தற்காலம் ஷை பட்டங்களை விலக்கியும் நாடார் என்ற பட்டத்தோடு விளங்கியும் கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்தும் கல்வி செல்வங்களில் எவ்வளவோ முன்னேறியிருக்கின்றனர்.

சேர்வைப்பட்ட முடையவர்கள் இப்பொழுதுதான் சில இடங்களில் நாடார் பட்டத்தை உபயோகித்துக் கொண்டு வருகிறார்கள்.

இத்தனைக்கும் மத்தியில் ஜாதிப்பட்டங்களை அடியோடு விலக்க வேண்டுமென்று கூறும் சுயமரியாதை இயக்கத் துக்கும் ஆதரவு மிகுந்து வருகிறது.

ஆதித்தர்களாவது மற்றவர்களாவது தற்காலம் முற் காலத்தைப் போல் தேகாப்பியாசம் செய்வதாவது வேட்டைக் குச் செல்வதாவது கிடையாது. ஆனால் அவர்கள் இக்

காலத்தில் பந்து விளையாடி வருகிறார்கள். ஒரு சிலர் வேட்டைக்குச் செல்வதானால் துப்பாக்கி சகிதம் போகிறார்கள். தங்கள் முன்னோர்களைப்போல் சதா ஆயுத பாணிகளாயி ருப்பதில்லை.

தற்காலம் பல்லக்குப் பிரயாணமும் குதிரைச் சவாரியும் நின்று விட்டது. என்றாலும் சில கலியாணங்களில் பல்லக்குப் பவனி இன்னமும் நடைபெற்றே வருகிறது. கி.பி. 1926-ம் வருடத்திலிருந்து ஊருக்குள் சரல் ரோடு போடப்பட் டிருப்பதால் மோட்டார் வாகனங்கள் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

வெகுகாலமாக ஆதித்தர்களின் பெண்மக்கள் கோஷா முறை என்ற வழக்கத்துக்குக் கட்டுப்பட்டுக்கிடந்தமையால் அவர்கள் வெளியில் வந்து கல்வி பயில்வதற்கு அவர்களுக் கென ஒரு தனிப்பாடசாலையேற்படாதிருந்தது. ஆதித்தரின் பெண் குழந்தைகள் பிறந்தது முதல் அந்தப்புரத்திலேயே வாழ்ந்து வருவதும் அங்கு தானே உபாத்தியாயினிகளால் கல்வி போதிக்கப்பட்டு வளர்ந்து வருவதும் வழக்கத்திலிருந்து வந்தது.

கி.பி. 1910-ம் வருடத்திலிருந்து பெண் பாடசாலை யேற்படுத்தப்பட்டு இந்த கோஷாமுறை ஒழியும்படியாக பெண் மக்கள் பத்து வயது வரையாவது வீதிவழியாகப் பாடசாலைக்கு வந்து கல்வி பயிலவும் அங்கு மற்ற பெண்மணிகளுடன் கலந்துறவாடிப் பழகிக்கொள்ளவும் நேர்ந்தது.

இதுவுமல்லாமல் கி.பி. 1928-ம் வருடம் இரண்டொரு வாலிபர்கள் தங்களது விவாஹ காலத்தில் பெண்ணுக்கு முகமூடி யில்லாமலே மணஞ் செய்து கொண்டதுமல்லாமல் பிந்திய வாழ்க்கையிலும் கோஷா முறையைக் கட்டாயமாக அநுஷ்டிப்பதை விட்டு விட்டனர். அதுபோலவே இரண்டொரு பெரியார்களும் வாலிபர்களின் சீர்திருத்தத்துக்கு இணங்கி தங்கள் புதல்விகளுக்கு நடந்த விவாஹத்தில் முகமூடியை விலக்கி விட்டனர். இதிலிருந்து நாளாவட்டத்தில் கோஷா முறை அறவே ஒழிந்துவிடும் என்று கருதப்படுகிறது.

இக்காலத்திலுள்ள ஆதித்த வாலிபர்களில் சிலர் போலிச் சைவ சமயத்தைத்தள்ளி உண்மை சமயத்தைக்கண்டு கொண்டிருக்கின்றனர். அவர்கள் எல்லா மதங்களுக்கும் ஒத்துள்ள பொது நீதியான சமரஸ சன்மார்க்க அன்புச்சமயத்தை விரும்பி நிற்கின்றனர். தமிழ் வேதமாகிய திருக்குறளும் அதில் கூறப்படும் தமிழர் சமயமாகிய நெறியுமே தங்களுக்குரியதென உணர்ந்து வருகின்றனர். விவாஹ காலத்திலும் பார்ப்பனர் புரோகிதம் கோஷா முறை அர்த்தமற்ற சடங்குகள் யாவையும் விலக்குவதற்கு உணர்ச்சி கொண்டிருக்கின்றனர். பூணூலணிவது அநாவசியமென்று அணியாமலிருக்க முயற்சி செய்கின்றனர்.

மரணச்சடங்காகிய ஈமக்கிரியைகளிலும் எவ்வளவோ வழக்கங்கள் நின்று வருகின்றன. ஆதித்த வம்சத்தார் எதிர்காலத்தில் இப்பொழுதிருக்கிற பழக்கவழக்கங்களையும் கைவிட்டு விட்டு எவ்வளவோ புது மாறுதலடைவார்கள் என்பது திண்ணம்.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகையி னானே''

## பின்னுரை

நிற்க, கி.பி. 1925-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதி வெளியான சேலம் க்ஷத்திரியன் என்ற பத்திரிகையில் மானாடு, கு. சங்கரன் பிள்ளை எழுதியனுப்பியதாக க்ஷத்திரியன் பத்திராதிபர் சு. அர்த்தநாரீச நாயக்கரால் ஓர் கடிதம் பிரசுரித்து வெளியிடப்பட்டிருந்தது. அக்கடிதத்தில் காயாமொழி ஆதித்த நாடர்களைப் பற்றியும், நட்டாத்தி ஜமீந்தாரான வைகுண்ட நாடாரவர்களைப் பற்றியும் அகாரணமாக இரண்டொரு குறைகள் கூறப்பட்டிருந்தது. அக்கடிதத்தைப் பார்த்த மானாட்டிலுள்ள சங்கரன் பிள்ளை யென்பார் தான் அந்தக் கடிதத்தை எழுதவில்லை யென்றும், இன்னொருவரைக் கொண்டு எழுதச் சொல்லவில்லை யென்றும், சங்கரன் பிள்ளை யென்ற பெயருள்ளவரே மானாட்டில் தான் ஒருவர் தானென்றும் தன்னைத் தவிர சங்கரன்பிள்ளை யென்ற பெயருள்ளவர் மானாட்டில் வேறெவரும் இல்லை யென்றும் ஆகையால் 11.4.25-ல் பிரசுரிக்கப்பட்ட க்ஷத்திரியன்

பத்திரிகையில் வெளியான அக்கடிதத்தை தப்பென்று மறுபிரசித்தம் செய்ய வேண்டுமென்றும், தவறினால் அவதூறான சிருஷ்டினைக் கடிதம் ஒன்றைப் பிரசுரித்ததற்காக காயாமொழி ஆதித்த நாடர்களுடன் சேர்ந்துகொண்டு மானநஷ்ட வியாஜ்யம் தொடங்கப் படுமென்றும் ஓர் ''எச்சரிக்கைக் கடிதம்'' எழுதி 18.4.25-ல் க்ஷத்திரியன் பத்திராதிபர், சு. அர்த்தநாரீச நாயக்கருக்கு அனுப்பி வைத்தார். அந்த ''எச்சரிக்கைக் கடிதம்'' 28.4.25-''நாடார் குலமித்திரன்'' பத்திரிகையிலும் 1925-ம் வருடம் ஏப்ரல் மாதம் வெளிவந்த 'க்ஷத்திரிய மித்திரன்' பத்திரிகை மலர் 6. இதழ் 8. பக்கம் 215-விலும் வெளிவந்திருக்கிறது.

அதுபோலவே காயாமொழி திரு. அ. பகவதி ஆதித்தரும் 'க்ஷத்திரியன் பத்திரிகை' ஆசிரியர் சு. அர்த்தநாரீச நாயக்கருக்கு 20.4.25-ல் எச்சரிக்கையுள்ள ரிஜிஸ்டர் கடிதம் ஒன்று அனுப்பி வைத்தார். அக்கடிதம் 1925-ம் வருடம் ஏப்ரல் மாதம் வெளிவந்த 'க்ஷத்திரிய மித்திரன்' பத்திரிகை மலர் 6 இதழ் 8 பக்கம் 218-விலும் 11-5-25 நாடார் குல மித்திரனிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அதன்மேல் 'க்ஷத்திரியன்' ஆசிரியர் சு. அர்த்தநாரீச நாயக்கர் 11.4.25 க்ஷத்திரியன் பத்திரிகையில் தம்மால் வெளியாக்கப்பட்ட கடிதத்தைத் தமக்கு எழுதியனுப்பிய கு. சங்கரன் பிள்ளை யென்பார் இரண்டு வாரத்துக்குள், முன் வந்து சரிசொல்ல வேண்டுமென்றும், அந்த இரண்டு வாரமும் காயாமொழி திரு. அ. பகவதி ஆதித்தர் பொறுத்துக் கொள்ளும் படியாகக் கேட்டுக் கொள்வதாகவும் 23.5.25-ல் வெளியான தமது 'க்ஷத்திரியன்' பத்திரிகை பக்கம் 5-ல் ''அறிவிப்பு'ப் பிரசுரம் செய்திருந்தார். கு. சங்கரன் பிள்ளை யென்ற அநாமதேய நபர் வெளிவந்த பாடில்லை. எனவே 'க்ஷத்திரியன்' ஆசிரியர் சு. அர்த்தநாரீச நாயக்கர் 13.6.25-ல் வெளியான 'க்ஷத்திரியன்' பத்திரிகை பக்கம் 5-ல் ''ஓர் பொய்க் கடிதம்'' என்பதாகத் தலையங்கம் கொடுத்து, அதில் மானாடு, கு. சங்கரன் பிள்ளை என்னும் கையெழுத்துடன் தமக்கு ஒரு கடிதம் கிடைத்ததாகவும், அதனை உண்மையென நம்பி 11.4.25 க்ஷத்திரியன் பத்திரிகையில் தாம் பிரசுரித்ததாகவும், தற்போது அக்கடிதம் சுத்தப் பொய்யென்று தெரிவதாகவும்,

அது பொய் மனுஷரால் எழுதப்பட்ட பொய்க்கடிதம் என்று இதனால் பிரசுரம் செய்வதாகவும், பொய்க் கடிதத்தை பிரசுரிக்க நேர்ந்ததற்கு வருத்தப்படுவதாகவும், அந்த வருத்தத்தை ஆதித்த நாடர் வகையாறாக்களுக்கு இப்பிரசுர மூலமாகத் தெரியப்படுத்திக் கொள்வதாகவும் பிரசுரம் செய்துள்ளார். அதற்குப் பிறகு ஆதித்த வம்சத்தாரைப் பற்றி மறைவிலிருந்து கூடத் தாக்கி எழுதுவதற்கு ஒருவரும் முன்வரவில்லை.

''பரந்த திறலாரைப் பாசிமே லிட்டுக்
கரந்து மறைக்கலு மாமே—நிரந்தெழுந்து
வேயிற் றிரண்டதோள் வேற்கண்ணாய் விண்ணியங்கும்
ஞாயிற்றைக் கைம்மறைப்பா ரில்''

முற்றிற்று.

# இணைப்பு

V.P. ஆதித்தன்

காயாமொழி ஆதித்த வமிச வரலாற்றை விரிவான முறையில் எடுத்துரைக்கும் ஒரு நூல் "பாண்டிய தேச ஆதித்த வம்ச வரலாறு" என்ற தலைப்புடன் கி.பி. 1930-ல் வெளியாகியது.

பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராக இருந்த பண்டிதர் தா.மாசில்லாமணி நாடாரால் எழுதப் பெற்ற அந்த நூலில் ஆதித்த வம்சா வழியை விளக்கமாகச் சொல்லும் பட்டியல் ஒன்று உண்டு. அந்தப் பட்டியலில் 1930-க்கு முன் பிறந்தவர்களுடைய பெயர்கள் மட்டும் இடம் பெற்றிருக்கிறபடியால், அதற்குப் பிறகு பிறந்தவர்களையும் கொண்டதாய் அந்தப் பட்டியலைப் திருத்தியமைக்க எடுத்துக் கொண்ட ஒரு முயற்சியே, இவ்வாறு வடிவெடுத்திருக்கிறது.

இதை ஒரு முயற்சி என்று கூறுவதற்குப் பதில் வம்சா வழிப் பட்டியலுக்கு எழுதப்பட்ட ஒரு பின்னுரையாகக் கொள்ளுதல் பொருத்தமாகும். "பாண்டிய தேச ஆதித்த வம்ச வரலாறு" என்ற நூலில் அடங்கிய விசயங்களே பெரும்பாலும் இந்த நூலில் சுருக்கமாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

ஆழ்ந்த ஆராய்ச்சித் திறனோ சொல்லாட்சியோ இல்லாமல், தெரிந்தவற்றை எல்லாருடனும் பகிர்ந்துகொள்ளும் வெறும் ஆர்வத்தை மட்டும் கொண்டு, "நுனிப்புல் மேய்ந்தாற் போல" அங்கொன்று இங்கொன்றாய்க் கேட்டறிந்த, சேகரித்த விசயங்களை இந்தப்பகுதியில் கோர்வைப்படுத்த முயன்றிருக் கிறேன்.

சரளமான நடை எனக்கு அந்நியமானதால் கரடு முரடான பாதையில் பிரயாணம் செய்யும் ஊணர்வு இதை வாசிப் பவர்களுக்கு உண்டாவதைத் தவிப்பதற்கில்லை என்றாலும் "பெரிய மேடு பள்ளங்கள்" இல்லாமல் பதிப்பாசிரியர் பார்த்துக்கொள்ளவாரென நம்புகிறேன்.

## ஆதித்தர்களின் பழக்க வழக்கங்கள்

தமக்கு மேலானவர்களைக் கண்டதும் தலையிலிருந்து தொப்பியைக் கையில் எடுத்து மரியாதை காட்டும் பழக்கம் இன்றளவும் மேனாட்டினரிடையில் இருந்து வருகிறது. அதுபோன்று வயதுக்கு மூத்தவர்களையும், பெரியவர்களையும் கண்டால் மேல்துண்டைத் தோளிலிருந்து இறக்கி மரியாதை செய்வது ஆதி முதலாய் ஆதித்த வமிசத்தினரிடையிருந்து வருகிற பழக்கம். பெரியவர்களைப் பார்க்கப் போகும்போதும் தோளில் துண்டு போட்டுக் கொள்வது இல்லை. இதைப் பார்த்த கிராமத்திலுள்ள மற்றவர்கள் இதைப் போன்ற மரியாதையை அவர்களுக்குங் காட்டுதல் உண்டு.

ஆயினும் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் நல்லது கெட்டது என்று ஏற்படும்போது வேற்றுமைகளை எல்லாம் மூட்டைகட்டி தூர வைத்துவிட்டு ஒன்றுகூடிக் கொள்ளும் வழக்கமும் ஆதித்தர்களுக்கு உண்டு. இதனால் அவர்களுக்கிடையில் வேற்றுமைக்குத் தூபமிட்டுவிட்டுச் சங்கடப்பட்டவர்கள் அதிகம்.

முன்னோர்கள் ரொம்ப ஆசார சீலர்களாயும் அதே சமயம் வைராக்கியம் கொண்டவர்களாயும் இருந்தனர். அவமானத்தையும் அவமதிப்பையும் சிறிதும் சகித்துக்கொள்ளாதவர்களாயும் இருந்தனர்.

திருச்செந்தூரில் சிவன் கோவிலுக்கு முன்னாலுள்ள பந்தல் மண்டபக் குறை வேலையை கி.பி. 1843ல் பூர்த்தி செய்தவர் தெற்கு வீடு மேல்வாசல் ராமலிங்க ஆதித்தன்.

தம்பியின் திருமண விஷயமாய் குடும்பத்தில் கொஞ்சம் மனஸ்தாபம் ஏற்பட்டிருந்த சமயம் ஒரு நாள் காலை வழக்கம்போல கிணற்றுக்குப் போவதற்காகத் தலைவாசல் கதவைத் திறந்தார். ஒரு நாளும் இல்லாத பழக்கமாய் போர்வையால் மூடிக்கொண்டு வழியில் தம்பி படுத்திருந்ததைக் கண்டதும் அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. இதை

ஒரு அவமரியாதையாக எண்ணிய அவர் பிறகு ஒருநாளும் அந்த வாசலை உபயோகிக்கவில்லை. அன்றே புதிய கிணறு ஒன்றை நந்தவனத்தில் தோண்டி அந்தத் தண்ணீரில் குளித்து அன்றாட நியம அனுஷ்டானங்களை முடித்த பிறகே வாயில் உணவு வைத்தார். அதுவரை சொட்டுத் தண்ணீர்கூட அவர் அருந்தவில்லை என்று பெரியவர்கள் சொல்லுவதுண்டு.

பிராமணர்களைப் போல பூணூல் தரித்து, சூரிய நமஸ்காரம் போன்ற நியம அனுஷ்டானங்களைக் கடைப்பிடிக்கும் பழக்கம் முன்னோரிடம் இருந்தது. அந்த பழக்கம் இக்காலத்து அறவே நின்றுவிட்டது.

திருச்செந்தூரில் ஆண்டுதோறும் நடைபெறுகிற தேர்த் திருவிழா (பத்தாம் திருவிழா)வின்போது தேர் வடம் தொட்டுக்கொடுக்க வருகிற பெரியவர்கள் முன்காலத்தில் பெரிய தேர் மறுபடி நிலைக்கு வருகிற வரை விரதமிருப்பது உண்டு. தேர் நிலைக்கு வர முன்பெல்லாம் அதிகம் சுணக்கம் ஏற்படும். மறு நாள் ஆனாலும் தேர் நிலைக்கு வந்தபிறகுதான் அவர்கள் உணவைத் தொடுவார்கள்.

முன்னோர்கள் பெரும்பாலும் 6 அடிக்கு மேல் உயரமும் யானைக் குட்டி போன்ற உடல்வாகும் முகத்தில் ஒரு கெம்பீரமும் உடையவர்களாய் இருப்பார்கள். தாளரதப் படை, மேள தாளங்கள் முழங்க ஆலய மரியாதைகளுடன் அவர்கள் தேர் வடம் தொட்டிக்கொடுக்க வருவதைப் பார்ப்பதையே மக்கள் ஒரு காட்சியாகக் கருதினர்.

“அன்னம் அலங்க மயில் அலங்க
ஆதித்த நாடார் தேர் அலங்க
தேரையும் தொட்டுக் கொடுத்து விட்டு
தெரு வீதியில் வாரதைப் பாருங்கடி
நீர்த்துச் சந்தனம் தாம்பூசி
கிளி மூக்கு வெற்றிலை கைபிடித்து
மவ (க) ராசர் ஆதித்த நாடார்கள்
வார சிங்காரத்தைப் பாருங்கடி

இது போன்ற அடிகளைக் கொண்ட பாட்டுகளை இப்போதும் கும்மியடிக்கும் கிராமத்துப் பெண்களால் பாடப்பட்டு வருவதைக் கேட்கலாம்.

பிற்கால ஆதித்தர்களில் அபார தைரியம் உள்ளவர்களும் மாறாக அப்பாவித்தனம் உள்ளவர்களும் இருந்தனர்:

தெற்கு வீடு கீழவாசல் சிவந்தி ஆதித்தனைப் பற்றி முன்னர் வெளியான ''ஆதித்த வம்ச வரலாறு'' என்ற நூலில் ''வில் வித்தையில் வல்லவர். தட்சணத்தில் அக்காலம் இவரை ஜெயிப்பவர் இல்லை'' என்ற குறிப்பு உள்ளது.

இவருடைய தைரியத்துக்கு எடுத்துகாட்டான நிகழ்ச்சி ஒன்றை மட்டும் இங்குக் குறிப்பிட எண்ணுகிறேன்.

வழக்கமாய்ப் பிரயாணத்துக்குக் குதிரையை உபயோகிக்கும் இவர் ஒரு சமயம் திருச்செந்தூரிலிருந்து காயாமொழிக்கு நடந்துவர வேண்டியதாயிற்று. இப்போது போல அக்காலத்து ரோடு கிடையாது. வழி நெடுக காடுகள் ஒற்றையடிப்பாதை. நல்ல இருட்டு நேரம். கரன்ஸி நோட்டுகள் அக்காலத்து அதிகமாய்ப் புழக்கத்துக்கு வரவில்லை. பணத்தை மூட்டையாகக் கட்டிக் கொண்டு செல்வதுதான் பழக்கம். இவர் கையிலிருந்த பணத்தை முடிச்சாக கட்டி, அதைக் கம்பில் தொங்கவிட்டு, கம்பை தோளில் சாய்த்து வைத்துக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தார். வழியில் கத்தியும் கம்புமாய் ஐந்தாறு திருடர்கள் தடுத்து நிறுத்தி அவரிடமிருந்த பணத்தை 'வழிப்பறி' செய்ய எத்தனித்த போது முடிச்சாக இருந்த பணமும் காசுகளும் தரையில் விழுந்து சிதறின. அவற்றை பொறுக்கி ஒன்று சேர்க்க திருடர்கள் குனிந்த மறுகணம் கையில் இருந்த கம்பு சுழன்று ஒவ்வொருவருடைய முதுகிலும் ''விளையாடி''யது. ''செமத்தையாக'' அடி வாங்கிய பிறகுதான் வந்தது யாரென்று தெரிந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவர்கள் ஓட்டமெடுத்தனர். அடியினால் கை ஒடிந்து வேலை செய்ய முடியாமல் போன ஒருவனுக்கு அந்திய காலம்வரை இவருடைய வீட்டில்தான் சாப்பாடு நடந்தது.

கனத்த சரீரமும் கொஞ்சம் அப்பாவித்தனமும், சூதுவாதுக்ள் அவசியமில்லாத அளவுக்கு நல்ல வசதியும் கொண்ட ஒருவர் வடக்கு வீட்டில் இருந்தார்.

குளிப்பதற்கு உட்கார்ந்தால் கிணற்றிலுள்ள தண்ணீர் பூராவையும் கையாட்கள் ஊற்றி. கிணற்றை வற்ற வைத்தாலும் 'அசங்க' மாட்டார்.

(காயாமொழியிலுள்ள கிணறுகள் ரொம்ப ஆழம் உள்ளவை. இரண்டு கால்கள் நாட்டி, துலா போட்டு நீளமான மூங்கில் களையில் (பிரம்பு)வில் பனை ஓலையைக் கொண்டு செய்த 'தோண்டி'யைக் கட்டி பாதாளத்திலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டும்)

இதற்காகக் கையாட்கள் ஒரு யுக்தியை கையாள்வ துண்டு. தண்ணீர் எடுத்து, எடுத்து கை வலித்ததும் கிணற்றிலிருந்து எடுக்கும் நீரில் கொஞ்சம் மணலைக் கலந்து ஊற்றி, கிணற்று நீர் வற்றி அடியிலிருந்து மணல் வருகிறதென்று சமாதானமும் சொல்லிவிடுவார்கள். அவரும் நம்பிக்கொண்டு அதன் பிறகுதான் குளிப்பதை நிறுத்துவார்.

பார்த்துக் கெடுவது புஞ்சை. பாராமல் கெடுவது நஞ்சை என்று தென்பாண்டிய நாட்டுப் பகுதிகளில் பேச்சுவழக்கில் கூறுவது உண்டு. நஞ்சையை அடிக்கடி கவனிக்க வேண்டும். புஞ்சைக்காடுகள் இருக்கும் இடங்களுக்கு அடிக்கடி போக வேண்டியது இல்லை என்பது இதன் பொருளாகும். ஆதித்த வம்சத்தினருடைய சொத்துகள் பெரும்பகுதி காடு உண்டாகும் புஞ்சை நிலங்களாகும். ரொம்ப காலம் வரை எங்கு எங்கெலாம் தம் சொத்துகள் இருக்கின்றதெனத் தெரிந்து கொள்ள அவசியமும், சிரத்தையும் இல்லாதவர்களாய் அவர்கள் காலங்கழிக்கலாயினர். பிறகு சொத்து இருக்குமிடம் தெரிய வந்தபோது அவற்றுக்குக் "கால் முளைக்க" ஆரம்பித்தது. ஆம், பிற்காலத்தில் ஆதித்தர்கள் சொத்து விற்றதை இப்படித் தமாஷாகக் கூறுதலுண்டு.

பெரிய நிலப் பிரபுக்கள் வாழ்ந்த முன்காலத்து நினைவுகளை மனதில் "தேக்கி வைத்து"க் கொண்டு எதிலும் ஒரு போலி கௌரவம் பார்க்கும், காலத்தோடு ஒட்டாத ஒரு மனநிலை பிற்கால ஆதித்தர்களை ஆட்டிப்படைத்தது. 20ம் நூற்றாண்டில் வாழ்ந்தும் சிந்தனை பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முந்தியதாகவே அவர்களிடம் இருந்தது.

இந்த நிலை இப்போது மாறி எல்லோருடனும் சகஜமாகப் பழகிப் பல துறைகளிலும் திறமையைச் செலுத்துகிற மனோபாவம் இளைஞர்களிடையில் ஏற்பட்டுள்ளது.

இந்த மாற்றத்துக்கு முதல் முதலாய் ''பிள்ளையார் சுழி'' வைத்த பெருமை எஸ்.எஸ். ஆதித்தின் பி.ஏ.பி.எல்., அவர்களைத்தான் பெரிதும் சாரும்.

ஆதித்த வமிசத்தில் முதல் முதலாய்ப் படித்து வெளியேறி ஸ்ரீவைகுண்டத்தில் வக்கீலாகத் தொழில் நடத்தியது அவர்கள் தான்.

முன் சொன்ன போலிக் கௌரவம் பெரியவர்களை மட்டுமன்று இளைஞர்களையும் விட்டு வைக்கவில்லை. அதற்குப் பலத்த ''சம்மட்டியடி'' கொடுத்து அவர்கள் பலரையும் வேலை செய்ய ''வசக்கிய'' பெருமை சி.பா.ஆதித்தனாருக்கு உண்டு.

வெறும் மண்ணாங்கட்டியிலும் தனது ஒளியைப் பாய்ச்சி அந்த ஒளியினால் அந்த மண்ணாங் கட்டியை வைரம் போல ஜொலிக்க வைக்கக் கூடிய பேராற்றல் அவரிடம் இருந்தது.

ஒன்றும் தெரியாதவனிடத்தும் தன்னம்பிக்கையையும் திறமையையும் ஊசி மருந்து ஏற்றுவது போல ஏற்றி அவனை ''மனிதனாக'' ஆக்கக்கூடிய அசாதாரண சக்தியை அவர் பெற்றிருந்தார். வேலைக்கு வருபவரிடம் 'திறமை' யிலும் 'பணிவையே' அவர் அதிகம் எதிர்பார்ப்பார். 'திறமை' யை அவர் உண்டாக்கிவிடுவார். நினைத்தால் சாதா குமாஸ்தா வேலை செய்து கொண்டிருப்பவர்களை—ஏன் ஒரு ஆபிஸ் பொடியனைக்கூட ஆசிரியர் ஆசனத்தில் உட்கார வைத்து, தலையங்கம் எழுதுகிற ஆற்றலை அவனுக்கு உண்டாக்கிவிடுவார். வேலை செய்கிற ஒவ்வொருவருடனும் தொடர்பும் ஈடுபாடும் வைத்துக் கொண்டு அவர் கொண்டுள்ள திறமையை வெளிக்கொண்டுவருவதில் எப்போதும் கண்ணுங் கருத்துமாக இருப்பார்.

## சுபாவம்

ஆதித்த வமிசத்தில் பொதுவாக எல்லாரும் சுபாவத்தில் அமைதியும், 'அடக்கமும் மற்றவர்களிடம் மரியாதை காட்டு பவர்களாய்த் தோற்றுவார்கள். ஆனால் ஒருவித கர்வம், அதாவது நாலுபேரைப் போலத்தான் நாமுமென்று சராசரியாக எண்ணாத ஒருபடி ''உசத்தி'' யாகக் கருதுகின்ற ஒரு

உள்ளுணர்வு மன ஆழத்தில் 'துயில்' கொணடிருக்கும். அதன் சாயை லேசாக முகத்தில் படர்ந்திருக்கும். அவர்களிடம் ரொம்ப கிட்ட நெருங்குகிறவர்களுக்கு மட்டும் இது புலனாகும். இது ஜென்ம ஜென்மாந்தரமாய் அவர்களிடம் குடி கொண்டிருந்து வருகிற ஒரு பாரம்பரிய தன்மையாகும். இதை அனுசரித்து நடந்து கொள்ளுபவர்கள் சுலபமாக தங்கள் காரியங்களைச் சாதித்துக் கெள்ளுவார்கள்.

## அபிதான விளக்கம்

அழகானந்த ஆதித்தர்: (1868 - 1899) இவர் தெற்கு வீடு கீழவாசல் பகவதி ஆதித்தன் பேரர்களில் ஒருவர். பள்ளம் விழாமல் கைப்பணத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்து வாழ்ந்த இவரிடம் நிறைய ஜனங்கள் தங்கள் சேமிப்புகளை நம்பிக்கையுடன் கொடுத்து வைத்தல் உண்டு.

ப.சு.சிவந்தி ஆதித்தன்: (1874 - 1938) இவர் தெற்கு வீடு கீழவாசல் பகவதி ஆதித்தனின் இன்னொரு பேரர். "திசையாதி திசைனாள் சிவந்தி ஆதித்தின் ஏல அடமான சகாய நிதி" என்ற கொடுக்கல் வாங்கல் நிறுவனம் ஒன்றை இவர் நடத்திய துண்டென்பர்.

அரியாசன ஆதித்தர் (1883 - 1965) இவரும் தெற்குவீடு கீழ வாசல் பகவதி ஆதித்தன் பேரர்களில் ஒருவர். ஈ.வெ. ரா. பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளில் இவருக்கு ஈடுபாடு அதிகம். தன்னுடைய மகனுக்கு புரோகிதர் வைத்துக் கொள்ளாமல் சிக்கனமாகச் சுயமரியாதை கல்யாணம் நடத்தினார்.

புது நயினார் ஆதித்தன் (1890)

இராமலிங்க ஆதித்தன் (1892): தெற்கு வீடு மேல வாசல் ராமலிங்க ஆதித்தன் வமிசா வழியில் பிறந்த அண்ணன் தம்பிகளான இருவரும் 'தை.சொ.ரா.பு' என்று விலாசத்துடன் முதல் முதலாய் காயாமொழியில் வியாபாரத்தில் இறங்கினர். பெரிய அளவில் பலசரக்குக்கடையும், ஜவுளிக் கடையும் உள்ளூரில் நடத்தினார்கள்.

சிவந்தி ஆதித்தன்: (1897) தெற்கு வீடு மேலவாசல் ஆதித்த வமிசத்தில் முதல் முதலாய்ப் படித்து உத்தியோகம் பார்க்க முற்பட்ட முன்னோடிகளில் இவர் ஒருவர். போஸ்ட் மாஸ்டராக இருந்தார்.

அ. குமர குருபர ஆதித்தர்: (1901 - 84) இவர் தெற்கு வீடு கீழவாசல் அழகானந்த ஆதித்தனின் இரண்டாவது புதல்வர்.

பெரும்பாலும் சென்னையில் வாழ்ந்து, அங்குதான மரணமடைந்தார். தமிழ்ப் பண்டிதராக விளங்கிய இவ கம்பரா மாயணம் பற்றி நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளுட எழுதியுள்ளார். காந்தி மகான் இறந்த போது காந்தி அம்மானை எனும் நூல் இயற்றி வெளியிட்டார். தொல்காப்பியத்திற்கு உரை எழுதும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தார்.

அ. பகவதி ஆதித்தர் (1905 - 1982) தெற்கு வீடு கீழவாசல் அழகானந்த ஆதித்தன் புதல்வர்களில் இளையவர். தந்தையைப் போல நாடி வருபவர்களுக்குக் கடனுதவி வழங்கும் 'குட்டி' வங்கியாக விளங்கிய இவர் தமிழில் நல்ல புலமை பெற்றிருந்ததுடன், பத்திரிகைகளுடனும் தொடர்பு வைத்திருந்தார். ஊர் அம்மன் கோவில் நாளாந்த செலவுகளுக்கு நிரந்தர சொத்து வசதி ஏற்படுத்த அதிக சிரத்தை எடுத்தார். இறக்கும் தறுவாய் வரையிலும் கோவில் அக்தார்களில் ஒருவராய் இருந்தார். முன்னோர்களைப் போல் தலையில் கொண்டை வைத்துக் கெகண்டிருந்தார்.

சிவசுந்தர பார்வதி ஆதித்தன் (1896 - 1938) தெற்கு வீடு கீழவாசல் பார்வதி ஆதித்தன் வமிசா வழியில் பிறந்த இவர் ஜோதிட சாஸ்திர வல்லுனராகத் திகழ்ந்தார்.

சங்கரராமசாமி ஆதித்தன்: (1897 - ) தெற்கு வீடு கீழவாசல் பார்வதி ஆதித்தன் வமிசா வழியில் பிறந்த இவர் ஊர் அம்பலக்காரர்களில் ஒருவராயிருந்த காலத்தில் (கி.பி. *1921*ல்) அம்மனுக்குச் சப்பரம் செய்து "சப்பர எழுந்தரத்து" ஆரம்பிக்கப்பட்டது.

சுந்தரக்குமார் ஆதித்தன், பி.ஏ., பி.எல்., (1911-1969) தெற்கு வீடு கீழவாசல் சிவசுந்தர பார்வதி ஆதித்தனின் மூத்த புதல்வராகிய இவர் திருச்செந்தூரில் வழக்கறிஞராகத் தொழில் செய்தார்.

கேசவ ஆதித்தன் - தெற்கு வீடு மேலவாசல் சிவந்தி ஆதித்தன் புதல்வர். திராவிடக் கட்சிகளுடன் தன்னைத் தொடர்புபடுத்திக் கொண்ட இவர் அந்திய காலத்தில் திருச்செந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராயும் (எம்.எல்.ஏ) திருச்செந்தூர் கோயில் தர்மகர்த்தாக்களில் ஒருவராயும் இருந்தார். கார் விபத்தில் மரணமடைந்தார்.

புது நயினார் ஆதித்தன் (1883-1948) தெற்கு வீடு மேல வாசல் ராமலிங்க ஆதித்தன் புதல்வர். அக்காலத்து எஸ்.எஸ்.எல்.சி. படித்த இவர் தலையில் ஜரிகை தலைப்பாயும் நீண்ட குளோஸ் கோட்டும், சட்டைப் பையில் சங்கிலிக் கடிகாரமும், இடையில் பஞ்சகச்சம் வைத்து வேஷ்டியும் சால்வையும் அணிந்து பெரிய அதிகாரியைப் போல தோற்றமளிப்பார். ஆரம்பக் காலத்தில் தபாலாபீஸ் நிர்வாகத்தைக் கவனித்தார். பள்ளிக் கூடமொன்றும் துவங்கி நடத்தியபோதுதான் ஊர்க்கட்சியும் போட்டிப் பள்ளிக் கூடமும் ஏற்பட்டு (1929) பிறகு ஊரில் ஒற்றுமை ஏற்பட்டது.

ராமசாமி ஆதித்தன்: (வடக்கு வீடு மேலவாசல் 1898-1967) - நடேச நாடார் என்று அழைக்கப்பட்ட இவரை அண்டி எப்போதும் ஒரு கூட்டம் இருக்கும். முன்னோர் களைப் போல தோரணையுடன் வாழ்ந்ததுடன் தலையில் குடுமியும் வைத்திருந்தார். சட்டை அணிவதில்லை. மற்றவர் களிடத்து அச்சம் கலந்த மரியாதையைத் தோற்றுவிக்கக்கூடிய பார்வையை உடையவர். பொதுக் காரியங்களில் தொடர்புடையவராக இருந்த இவர் அந்திய காலத்தில் கல்வி சபா பாடசாலையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்தினார்.

டாக்டர் ராஜகுமாரசாமி ஆதித்தன்: வடக்கு வீடு மேலவாசல் (*1924-1983*)- ராமசாமி ஆதித்தனின் மூத்த மகனான இவர் ஆதித்தன் வமிசத்தில் முதல் முதலாய் எம்.பி.பி.எஸ். படித்து டாக்டர் ஆகிய பெருமைக்கு உரியவர். நல்ல கை ராசியுள்ள டாக்டராகச் சுற்று வட்டாரத்தில் பெயர் வாங்கினார்.

வித்தியாசாகர் பி.ஏ.பி.எல்., : (*1926-82*) வடக்கு வீடு மேலவாசல் ராமசாமி ஆதித்தனின் மற்றொரு புதல்வராகிய இவர், உள்ளூர் பஞ்சாயத்துத் தலைவராயும், திருச்செந்தூர் வட்டார பஞ்சாயத்து ஒன்றியத் தலைவராயும் இருந்தார். இவருடைய பதவிக் காலத்தில் கால்நடை ஆஸ்பத்திரியும், ஆரம்ப சுகாதார நிலையமும் காயாமொழியில் ஏற்பட்டன. அந்திய காலத்தில் திருச்செந்தூரில் வழக்கறிஞராக இருந்தார்.

குமாரசாமி ஆதித்தன் : வடக்கு வீடு மேலவாசல் (1908-) தியாகராஜ ஆதித்தன் என்று அழைக்கப்பட்ட இவர் இனிமை ததும்ப நகைச்சுவையுடன் தமிழில் உரையாடும் நாவன்மையுடைவர். எதையும் நுணுக்கமாய் ஆராயும் திறனுடைய செந்தமிழ்ச் செல்வர். இவருடைய புலமையும் திறனும் தமிழ் உலகத்துக்கு உரிய அளவு பயன்படவில்லை. குடத்தில் இட்ட தீபமாக வாழ்ந்து மறைந்தார். அபூர்வ பழைய நூல்களைக் கொண்ட நூல் நிலையம் ஒன்றும் இவரிடமிருந்தது.

ரா. குமாரசாமி ஆதித்தன்: வடக்கு வீடு கீழ வாசல் (1897-1947) பாரம்பரியமாக வந்த கிராம முன்சிப் உத்தியோகத்தை வகித்துக் கொண்டு செல்வாக்குடன் விளங்கிய இவரின் காலத்தில்தான் இவருடைய பெயரால் குமாரசாமிபுரம் குடியேற்று உண்டாகியது. லோக்கல் போர்டு மெம்பராகவும் இருந்தார். அக்காலத்தில் (1927) காயாமொழிக்கு முதல் முதலாய் ரஸ்தா வசதி ஏற்பட்டு பிறகு பஸ் போக்குவரத்து உண்டாகியது. கல்வி சபா பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்து (1929) அதற்கு நிர்வாகியாக இருந்தார். தட்சணமாற நாடார் சங்கத் தலைவராகவும் இருந்தார்.

வி.ராமசாமி ஆதித்தன்: வடக்குவீடு கீழவாசல் (1908-1974) தேரிக்காடெங்கும் வண்டல் பரப்பி நெற்சாகுபடி நடைபெற்று வருவதற்கு இவர் ஒரு வகையில் முன்னோடியாவார். மணலுக்கு அடியில் சிமிண்ட் தளம் பரப்பி அதில் நெற்சாகுபடி நடத்தி மற்றவர்கட்கு இவர் வழிகாட்டினார். 7 புதல்வர்கள் 5 புதல்வியர்கட்குத் தந்தையான இவர் எண்ணத்திலும் செயலிலும் இளைஞராக வாழ்ந்தார். வருஷந் தோறும் அம்மன் கோவில் திருவிழாவில் சப்பரத்திற்குப் பின்னால் நடைபெறும் பஜனையை இவர் துவங்கி வைத்தார். இப்போதும் இது நடைபெற்று வருகிறது. மார்கழி மாதம் திருவாதிரை பஜனையும் இவரால் ஆரம்பிக்கப்பட்டது.

கார்த்திகேயன் என்ற குமாரசாமி ஆதித்தன் (1904- ) வடக்கு வீடு மேலவாசல்

மகராஜா என்ற துரைராமசாமி ஆதித்தன் (1907- ) தெற்கு வீடு கீழவாசல்

வாசகம் என்ற ப.ராமலிங்க ஆதித்தன் (1998-1952):- ஒரு சம காலத்தில் வாழ்ந்த இம்மூவரும் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்ற பிறகு ஊரில் ஒற்றுமை ஏற்பட்டது. சந்தனக்கட்டையாகத் தேய்ந்த மூவருக்கும் இடையில் குண விசேஷங்களில் நெருங்கிய ஒருமைப்பாடுகள் இருந்தன. 'இல்லை' யென்று சொல்லத் தெரியாத ''பெரிய வீட்டுப் பிள்ளைகளாக'' இருந்ததால் இவர்களை மற்றவர்கள் கொஞ்சம் அதிகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். பிற்காலத்தில் அதனால் சிரமங்கள் அடைந்தனர்.

கார்த்திகேய ஆதித்தன்: நன்கு வாரிய கிராப் தலை, நெற்றியில் திருநீற்றுப் பூச்சு, சந்தனப் பொட்டு, காதில் கடுக்கன், மூக்குக் கண்ணாடி, கையில் அழகிய பூண் போட்ட பிரம்பு, தூய கதராடை, பூணூல் அதற்கு மேல் கைநீண்ட ஜிப்பா, அன்றாட அனுஷ்டானங்களில் ஒழுங்கு நிமிர்ந்த நேர்கொண்ட பார்வை- நடை உடை பாவனைகளில் எப்போதும் ''ஆஜானுபாகு'' வாய் தோன்றுவார்.

வாசக ஆதித்தன்: ஆரம்பக் காலத்திலும் எப்போதும் சுயமரியாதைக் கொள்கைகளில் மிகுந்த பற்று வைத்திருந்த இவர் ஊரில் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். இவருடைய பிரயாசைகளால் கூட்டுறவு சங்கக் கடைகளும் ஏற்பட்டன.

மகராஜ ஆதித்தன்: கோவில் நிர்வாகங்கள் நெடுங்காலம் இவருடைய கையில் இருந்தன. ஊர் அம்மன் கோவில் முன் ஏற்பட்டிருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி மூன்று வரிசைகளாய் வேப்ப மரங்கள் நடுவதைப் பொறுப்பேற்று நிறைவேற்றினார். சங்கீதத்தில் ஈடுபாடு கொண்ட இவர் சில காலம் சங்கீதப் பள்ளிக்கூடம் ஒன்றும் நடத்தினார்.

## பிற்கால ஆதித்தர்கள்

பாகப்பிரிவினை நிகழ்ந்த காலத்துத் தென் பாண்டிய நாட்டில் சூழ்நிலையில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருந்தது. தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்ற நிலை மாறி வரி வசூலிப்பதில் ஒரு மாமூல் நிலையை வெள்ளைக்காரர்கள் ஏற்படுத்தியிருந்தனர்.

1799ம் வருஷம் வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கில் இடப்பட்ட பிறகு ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து யாரும் மூச்சுவிடவில்லை. நிலமுடையவர்களுக்கு ஆட்சியாளர் அதிக மதிப்புக் கொடுத்தனர். நிலவுடமை சமூக அந்தஸ்துக்கு அளவுகோலாக விளங்கியது.

தவிரவும் பூர்வீகச் சொத்துகள் ஏழு கிராமங்களில் பரந்து விரிந்து படர்ந்து கிடந்தன. பல தலைமுறை காலம் "சும்மா" இருந்துகொண்டு சாப்பிடப் போதியனவாய் அவை இருந்தன. அதனால் மேலும் இரண்டு மூன்று தலைமுறை காலம் "நாயன்"களாயும் "மகாராஜா'க்களாயும் "கும்பிடு துரை" களாயும் "சாமி"களாயும் (இவையெல்லாம் குடிஜனங்களால் அக்காலம் வழங்கப்பட்ட பட்டப் பெயர்கள்) ஆதித்த நாடார்கள் பல்லக்குகளில் பவனி வந்தனர்.

எந்நேரமும் ஆயுதமும் கையுமாய் இருக்கவேண்டிய ஒரு அசாதாரண நிலைமை முன்னோர்களுக்கு இருந்தது. அந்த நிலைமை பின் வந்தவர்களுக்கு இருக்கவில்லை. அந்த அளவு ஸ்திர நிலைமை ஏற்பட்டிருந்தபடியால் படைக் கலங்கள் யாவும் மூலை முடுக்குகளுக்குப் போய்க்கொண்டிருந்தன.

வெளியுலகில் தொழில் வர்த்தகத் துறைகளில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்து வந்தன. அவற்றுடன் சம்பந்தமில்லாத வர்களாக ஆதித்த நாடார்கள் காலங்கழித்தனர். வீட்டில் எல்லாச் சௌகர்யங்களும் இருந்ததால் அவர்கள் அதிகம் வெளியே வருவதில்லை. வருஷத்தில் இரண்டு மூன்று நாட்கள்தான் வெளியார் அவர்களைப் பார்க்க முடிந்தது.

ஆவணி மாசி மாதங்களில் நடைபெறும் திருச்செந்தூர் தேர்த் திருவிழாவுக்கு வருகிறபோது மட்டும் அவர்கள் மற்றவர் கண்ணில்பட்டனர். அவர்களைப் பார்ப்பதற் கென்றே அக்காலம் ஏராளமானவர் தேர்த் திருவிழாவ்புக்கு வருவதுண்டு.

ஆடி மாதம் கடைசிச் செவ்வாய்க் கிழமை ஊர் அம்மன் கோவில் கொடையில் கணியான் கூத்து நடைபெறும் போதும் ஆதித்த நாடார்கள் கோவிலுக்கு வருவார்கள். அப்போது கணியான்கள் அவர்களை வாழ்த்தி சன்மானம் பெறுதல் வழக்கமாக இருந்தது.

ஆனாலும் அன்றாட வாழ்வில் ஆதித்த நாடார்கள் ஆசார, ஒழுக்க சீலர்களாய் இருந்தனர். சைவ மதச் சாரங்களைப் பின்பற்றிய அவர்கள் அன்றாட நியம அனுஷ்டானங்களைச் சரிவரக் கடைப்பிடித்தனர். தத்தம் வீட்டில் அதற்கென தனியாகப் பூஜை அறை வைத்திருந்தனர்.

கி.பி. 1880க்கும் அதற்கு மேலும் குடும்பங்கள் விருத்தியாகி பாகங்களும் பலவாகின. சமுதாய அமைப்பிலும் 'ஆண்டான் அடிமை முறை படிப்படியாக மாறி முதலாளி தொழிலாளி என்ற முறை ஏற்பட்டுக்கொண்டிருந்தது. எஜமானர் நிழலில் குளிர் காய்ந்து கொண்டிருந்த பண்ணையாட்களும் தொழில் வேலை வாய்ப்புகளை நாடி நகரங்களுக்குச் செல்லலாயினர்.

நில புலன்களிலிருந்து கிடைக்ககூடிய வருமானம் வாழ்க்கைக்குப் பற்றாக்குறையாகும் நிலை 1880க்குப் பிறகு பிறந்தவர்களுக்கு ஏற்பட்டபோது, சிலர் முதன் முறையாக ஆங்கிலக் கல்வி பயில ஆரம்பித்தனர். அதற்கு தெற்கு வீடு மேலவாசல் சு.சிவந்தி ஆதித்தன் (1882) அவர்கள் முன்னோடியாக விளங்கினார். அவர் இந்து நாடார் சமுகத்தில் சட்டக் கல்வி பயின்ற முதல் பட்டதாரியாகத் தேறி ஸ்ரீவைகுண்டத்தில் வக்கீல் தொழில் துவங்கினார். அவரின் முழுப் பெயர் சு. சிவந்தி ஆதித்தன் என்றாலும். ''எஸ். எஸ். ஆதித்தன், பி.ஏ.,பி.எல்., என்றே எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

தெற்கு வீடு மேல வாசலில் தோன்றிய புது நயினார் ஆதித்தன் (1883) எஸ்.எஸ்.எல்.சி. (பத்தாம் வகுப்பு) வரை படித்த பின்னர் உள்ளூரில் பள்ளிக்கூடமொன்றை நடத்தினார். தபாலாபீஸ் நிர்வாகமும் ஆரம்பக்காலத்தில் அவரிடம் இருந்தது.

(ஒரு சம காலத்தில் வாழ்ந்த இந்த இரு ''ஜாம்பவான்''கள் இடையில் ஏற்பட்ட 'பள்ளிக்கூடக் கட்சி'' எனும் பலப்பரீட்சை, அது முடிந்தபின் பல காலம் வரையும் ஊரில் எல்லோராலும் பேசப்பட்டு வந்தது.)

தெற்கு வீடு மேலவாசலில் சுப்பிரமணிய ஆதித்தன் (1892) எ.எப்.ஏ. (பி.ஏ. பட்டப்படிப்புக்கு இரண்டு வருஷம் குறைவுள்ளது) வரை படித்து, நல்ல ஆங்கிலப் புலமையுடன் விளங்கினார்.

ஸ்ரீவைகுண்டத்தில் வழக்கறிஞராக விளங்கிய எஸ்.எஸ். ஆதித்தன் தமது மூன்று புதல்வர்களையும் பட்டதாரிகளாய்ப் படிக்க வைத்து நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்ற பெருமைக்குப் பாத்திரமாக விளங்கினார். அந்த மூவரில் மூத்தவர் எஸ். டி.ஆதித்தன், பி.ஏ.. பி.எல்., (1903) ஆவார். சி.பா.ஆதித்தனார் (1905) தனஞ்செய ஆதித்தன் (1909) மற்றவராவர்.

தெற்கு வீடு மேலவாசலில் அ.சொக்கலிங்க ஆதித்தன் (1908) பி.ஏ., படித்து போலீஸ் இலாகாவில் உயர்ந்த பதவிவரை உயர்வு (ஐ.பி.எஸ்.) பெற்ற பின் ஓய்வு பெற்றார்.

படித்தவர்களைப் பற்றிக் கூறும்போது தெற்கு வீடு கீழவாசல் அமரர் அ.கு. ஆதித்தன் (1901) முக்கியமாகக் குறிப்பிடவேண்டியவர். சென்னையில் தமிழ்ப் பண்டிதராக இருந்த அவர் தமிழில் நிறைய நூல்கள் இயற்றியுள்ளார். மூன்று புதல்விகளையும் பட்டதாரிகளாக்கிய பெருமையும் அவருக்கு உண்டு.

பிற் காலத்தில் நிறைய பேர் படித்துப் பட்டங்கள் பெற்ற போதிலும் அவர்களுக்கு முன்னோடியாக விளங்கியவர்களை மட்டும் இங்குக் குறிப்பிட்டிருக்கிறோம்.

ஒரு நூற்றாண்டுக் காலம் ''சுகவாசிகளாய் வாழ்ந்தபின், கி.பி. 1920க்கும் அதற்கு மேலும் பிறந்த இளைஞர்கள் இடையில் ''வேலையில்லாமை'' எனும் மிகப்பெரும் நெருக்கடி தோன்ற ஆரம்பித்தது. தங்களுக்கு வழிகாட்டு வதற்கு ஆளின்றி அவர்கள் விரக்தி கொண்டிருந்த காலத்து அதிசயமொன்று நிகழ்ந்தது. இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஜப்பான் நாடு பிரவேசித்து சிங்கப்பூர் துறைமுகத்தில் குண்டு போட்டது. அதைத் தொடர்ந்து அங்கு நிம்மதியாகப் ''பாரிஸ்டர்'' தொழில் செய்து கொண்டிருந்த சி.பா.ஆதித்தனார் (சி.பாலசுப்பிரமணிய ஆதித்தன் எம். ஏ., பார் அட் லா) தாயகம் திரும்பி வந்து பத்திரிக்கைத் தொழிலில் பிரவேசித்தார். அதன் மூலம் படித்த படிக்காத ஆதித்த இளைஞர் பலருக்கு மட்டுமன்றி, கிராமத்திலுள்ள எல்லா இளைஞர்களுக்கும் நல்ல வேலை வாய்ப்பு உண்டாகியது. அவர் ஸ்தாபித்த பத்திரிகை சாம்ராஜ்யமும், காகித ஆலையும் கல்லூரியும் கிராம இளைஞர்களுக்கு மட்டுமின்றி, தமிழ்நாடு பூராவும் பல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை இப்போது நல்கிவருகின்றன. அன்னாரின் புதல்வர்களான பா.இராமச்சந்திர ஆதித்தன், பா. சிவந்தி ஆதித்தன் இருவரும் ஆதித்த வமிச முன்னணியில் விளங்கி வமிசத்துக்கு மேலும் பெருமை சேர்க்கின்றனர்.

தனுஷ்கோடி ஆதித்தன்திருச்செந்தூர்தொகுதி பார்லிமெண்ட் உறுப்பினராக இருந்து இப்போது மத்திய அமைச்சராகவும் உள்ளார். இவர் தெற்கு வீடு பி.ஆர். ஆதித்தனின் மூத்த புதல்வர்.

எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமிகோவில் தக்காராகவும் இருந்தவர். இவர் வடக்கு வீடு எஸ். ராமசாமி ஆதித்தன் புதல்வர்.

பல நூற்றாண்டுக் காலமாக இந்து நாடார் சமூகத்தில் முடி சூடாத மன்னர்களைப் போல விளங்கி வந்திருக்கும் காயாமொழி ஆதித்த நாடார்களின் பாரம்பரியச் சிறப்பு ஒரு அலாதியானது.

தென்பாண்டிய நாட்டில் ஒரு ஸ்திரமான ஆட்சி இல்லாது கொள்ளையும் பலாத்காரமும் மலிந்த காலத்து, துவேஷங்

கொண்ட மற்ற ஜாதியினரிடமிருந்து நாடார் சமூகத்தைப் பாதுகாக்கும் 'கேடயம்' போல நிமிர்ந்து நின்ற பெருமை ஆதித்த நாடார்களுக்கு உண்டு.

மானவீர வளநாட்டின் வட பத்தில் அரசர்களைப் போல விளங்கிய அவர்கள் நாடார் சமூகத்தின் சக்தியை எல்லாம் ஒருங்கு திரட்டி, செய்திருக்கும் திருப்பணிகளும், சமூகப் பணிகளும் எண்ணில் அடங்காதவை.

அமரர் சி.பா. ஆதித்தனார் அவர்களைத் தமிழகத்துக்கு தந்த பெருமையும் அண்மைக் கால வரலாற்றில் ஆதித்த வமிசத்துக்கு உண்டு.

பூர்வீகத்தில் சோழ அரச பரம்பரையைச் சேர்ந்தவர்களான இவர்களின் முன்னோர்கள் சோழப் பேரரசு சிதறுண்ட காலத்துக்குப் பின்னர் பாண்டிய மன்னர்களுக்கும் பிறகு நாயக்க மன்னர்களுக்கும் அவ்வப்போது திறை செலுத்திக் கொண்டு அரச மரியாதைகளுடன் விளங்கினர். பிறகு ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டபோது அவர்களுக்குத் தீர்வை செலுத்திக்கொண்டு பெரிய நிலப் பிரபுக்களாய் வாழ்ந்தனர். எக்காலத்தும் பரிவாரப் படைகளும், பல்லக்கு வரிசைகளும் அவர்களுக்கு இருந்து வந்தன. 1820ல் பாகப்பிரிவினை செய்துகொண்ட காலம் வரை ஒரு குடும்பம் போல ஒன்றாக வாழ்ந்தனர்.

அக்காலத்தில் கொற்கைக்குத் தெற்கிலுள்ள பகுதி மானவீர வளநாடு என்று வழங்கப்பெற்றது. மானவீர வளநாடு வடபத்து, தென்பத்து என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வட பத்திலுள்ள ஊர்கள் ஆதித்த நாடார்களின் கட்டுக் காவலுக்குள் அடங்கியிருந்தன. அந்த ஊர்களில் வாழ்ந்தவர்கள் அவர்களுடைய மேலதிகாரத்தை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு வரி, காவல் பணம் மகமை செலுத்தினர்.

இப்போது போல் சாலை வசதிகள் அக்காலத்தில் கிடையாது. தென் பாண்டிய நாட்டில் அப்போது நிலையான ஆட்சியும் கிடையாது. அரசுகள் அடிக்கடி மாறிக்கொண்டிருந்தன. மான வீர வளநாடு பெரும்பாலும் காடு அடர்ந்த மணல் பிரதேசம். பகல் கொள்ளைகள் தீவட்டிக் கொள்ளை

கள், வழிப்பறி திருட்டுகள் அடிக்கடி நடந்து வந்ததால் படை பலத்துடன் இருந்து வந்த ஆதித்த நாடார்களிடம் அதிக ஒட்டுதலுள்ளவர்களாக குடிமக்கள் இருந்தார்கள்.

பிரயாணங்களுக்குக் குதிரைகளையும் கொம்புப் பல்லக்குகளையும் ஆதித்த நாடார்கள் உபயோகித்தனர். பெண்களுக்குப் பெட்டிப் பல்லக்கு எனும் மூடு பல்லக்குகள் இருந்தன. பெரிய பரிவாரங்கள் புடை சூழவே எப்போதும் அவர்கள் பிரயாணம் செய்தனர்.

மான வீர வளநாட்டின் வடபத்தில் ஆதித்த நாடார்கள் ஆதிக்கம் ஏற்படுவதற்கு முன் அங்குள்ள ஊர்களில் ஏழு தண்டிகைக்காரர் எனும் முக்கந்தத் தலைவர்களின் ஆட்சி நடைபெற்று வந்ததாய்க் கூறப்படுகிறது.

வெட்டியாண்டான், சிம்மக்கரையான், பின்னங்கரை யான், குமாரக்கரையான், அத்திபெரியவன், அறம் வளர்த்தாண் டான், சரவணப் புதியவன் என்ற அந்த எழுவரும் வீரப்ப நாடன் தீத்தியப்ப நாடன் வடமலை நாடன் எனும் மூவருக்குப் பாகம் கொடுக்க மறுத்ததால் அம்மூவரும் காயாமொழியில் அப்போது வாழ்ந்த ஆதித்தநாடன், திக்கெலாங்கட்டி நாடன் ஆகியவர்களின் படை உதவியை நாடினார்கள். பிறகு நடந்த போரில் ஏழு தண்டிக்காரர்கள் பூமியை ஆதித்தர்கள் மற்ற மூவரும் கைப்பற்றிக் கொண்டனர்.

இதன் பிறகு ஆதித்த நாடனைத் தலைவனாகக் கொண்டு வீரப்ப நாடனும் தீத்தியப்ப நாடனும் வடமலை நாடனும் அவர்களுடைய உறவினர் ஐவரும் மானவிர வளநாட்டின் வடபத்து இலாகாவை அரசாண்டு வந்தனர். அக்காலத்து ஆதித்த நாடார்களில் பராக்கிரமசாலியாக விளங்கிய திக்கெலாங்கட்டி நாடன் இறந்து போகவே, தலைமைப் பதவியைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசையால் தூண்டப்பட்டு ஒருநாள் மானாட்டிலுள்ள தனது வீட்டில் ஆதித்த நாடன் எண்ணை ஸ்நானம் செய்து கொண்டிருந்த போது அவரை வீரப்ப நாடன் மறைந்திருந்து வாளால் வெட்டிக் கொலை செய்ததாய்க் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு மானவீர வள நாட்டிலள்ள மருதூர் என்ற இடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு ஆதித்த

நாடானின் மனைவி வெள்ளையம்மை நாடாச்சியை அரசியாக இருக்கச் செய்து அவரின் பிரதிநிதிகளாய் இருந்து தாயங் கொட்டை ஆதித்த நாடனும் சுப்பிரமணிய ஆதித்த நாடனும் வடபத்து இலாகாவை அரசாண்டு வந்தனர்.

ஆதித்த நாடன் கொலையுண்ட போது 6 மாதக் குழந்தையாக இருந்த மருதப்பன் பஞ்சுப் பெட்டியில் வைத்து தாதியர் மூலம் காயாமொழிக்குப் பாதுகாப்பாய் அனுப்பப் பட்டதால் அவனுக்குப் பஞ்சாதித்தன் என்ற பெயர் உண்டா கியது. அவன் வாலிபப் பிராயம் அடைந்து கி.பி. 1670-ம் வருஷம் பட்டத்துக்கு வந்தான். அவன் சுமார் 10 ஆண்டு காலம் நாடாண்டு வருகையில் காயாமொழியில் இருந்த அறுபத்து மூவர் ஆதித்த நாடன் ராமலிங்க ஆதித்தநாடன் தீத்தாரப்ப ஆதித்த நாடன் ஆகியவர்கள் திருச்செந்தூரிலுள்ள குல தெய்வத்துக்குரிய பணிவிடைகளைச் செய்து வந்தனர். அவர்கள் ஒருவர்பின் ஒருவராய்க் காலமானதும் மருதப்பன் என்ற பஞ்சாதித்தன் காயாமொழிக்கு வந்து தமது முன்னோர்கள் வாழ்ந்த இடத்தை வாசஸ்தலமாகக் கொண் டான். மருதூரில் இருந்த அவருடைய குடி படைகளும் காயாமொழிக்கு வந்து குடியேறின.

கி.பி. 1639 ல் (சகாப்தம் 1561) எழுதப்பட்டதாய் திருச்செந்தூர் தாலுகா குதிரை மொழி ரிசர்வ் பாரஸ்ட் தென் புறத்தில் (முத்து கிருஷ்ணாபுரம்) நிற்கிற ஒரு சிலாசாஸனத்தில் மான வீர வளநாட்டு வடபத்து இலாகாவை ஆதித்த நாடன் தலைமையில் மற்றும் ஒன்பது பேர்களும் அரசாண்ட விபரம் குறிக்கப்பட்டுள்ளது. தங்கள் இலாகாவுக்குட்பட்ட சர்வ ஜாதி குடிகளின் பேரிலும் தீர்வைகளை ஏற்ற இறக்க ரத்து செய்ய அதிகாரமுடையவர்களாய் இருந்து அக்காலத்தில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கனுக்குத் தீர்வை செலுத்தி வந்த விபரம் அதில் கண்டுள்ளது.

ஆதித்த நாடார்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் மிஞ்சிய வருமானம் பூராவையும் திருச்செந்தூரிலுள்ள சுப்பிரமணிய சுவாமி கோவில் கைங்கரியங்களுக்குச் செலவிட்டு வந்தனர். சேர மன்னர்களால் ஏற்படுத்தப்பட்ட கட்டளைகளுக்கும் அக்தார்களாய் விளங்கினர். கோவில் பரிபாலனத்தில் ஏராளமான சுதந்திரங்களும் உரிமைகளும் இருந்தன.

சிவன் கோவிலுக்கு முன்னால் யாத்ரிகர்கள் தங்குவதற்காக ஆயிரங்கால் மண்டபமொன்றை (பந்தல் மண்டபம்) கட்டுவதற்கு அவர்கள் தீர்மானித்து, அந்த மண்டபம் 1584 ம் வருஷம் அப்போது வாழ்ந்த சிவந்தி ஆதித்தன், குமாரசாமி ஆதித்தன் ஆகியோரால் கட்டி முடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பஞ்சாதித்தன் ஆட்சிக் காலத்தில் இன்னொரு மண்டபத்தை கி.பி. 1675ல் ஆதித்த நாடார்கள் கட்டினர். மூன்றாவது மண்டபக் குறை வேலைகளை கி.பி. 1843 ல் தெற்கு வீடு மேல வாசல் ராமலிங்க ஆதித்தன் பூர்த்தி செய்தார்.

இந்தப் பந்தல் மண்டபத்தில் திருவிழா காலங்களிலும், மற்றும் விசேஷ காலங்களிலும் சுவாமி தரிசனம் செய்ய வருபவர்களின் தாக சாந்திக்காக நீர், மோர் விநியோகிக்கும் தண்ணீர்ப் பந்தல் ஒன்றை ஆதித்த நாடார்கள் ஏற்படுத்தினர். அந்த கைங்கர்யம் நாளது வரையும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

17-ம் நூற்றாண்டில் பஞ்சாதித்தன் ஆட்சி நடைபெற்ற காலத்தில்தான் சுப்பிரமணிய சுவாமிக்குத் தேர்கள் செய்யப்பட்டு ஆண்டுக்கு இருமுறை தேர்த் திருவிழாக்கள் நடைபெறுவதற்கு ஒழுங்குகளும் செய்யப்பட்டன. இதற்காக ஆதித்த நாடார்கள் ஏராளமாக மான்யங்களும் விட்டுக் கொடுத்தனர். அதன்பிறகு நாளது வரையும் மாசி மாதமும் ஆவணி மாதமும் நடைபெறும் தேர்த் திருவிழாக்களில் (பத்தாம் திருநாள்) முன்னின்று தேரோட்டத்தைத் துவங்கி வைத்து முதல் மரியாதையைப் ஆதித்த நாடார்கள் பெற்று வருகிறார்கள்.

பெரியவர் சி.பா. ஆதித்தனார் அவர்கள் உயிருடன் இருந்த காலத்து ஆண்டு தோறும் மாசி மாத தேர்த் திருவிழாவுக்கு தவறாமல் வந்து வைபத்தை முன்னின்று சிறப்பித்தார். இப்போது அவர்களின் புதல்வர்களான பா. இராமச்சந்திர ஆதித்தன், பா. சிவந்தி ஆதித்தன் இருவரும் பெரிய தேர் ஓடும் மாசி மாத தேர்த் திருவிழாவுக்குத் தவறாமல் வந்து வைபவத்தை முன்னின்று நடத்தி வருகிறார்கள்.

மருதப்பன் என்ற பஞ்சாதித்தன் காலத்தில்தான் பத்து திருவிழாக்களும் முறைப்படுத்தப்பட்டதாய்க் கூறப்படுகிறது.

கி.பி. 1880ல் தீயினால் தேர்கள் சேதமடைந்த போது அக்காலத்து, காயாமொழியில் வாழ்ந்த தெற்கு வீடு சிவந்தி ஆதித்தனால் அவை புதுப்பிக்கப்பட்டன. அதற்கு சரியாக நூறு வருஷங்களுக்குப் பின்னர் கி.பி. 1980-ல் தேர்களுக்குப் புதிய படுதாக்களும் (தொம்மைகளும்) அலங்கார தோரணங் களும் பா. சிவந்தி ஆதித்தன் அவர்களால் பெரும் பொருட் செலவில் செய்து வழங்கப்பட்டிருப்பது வெகு அண்மைக் கால நிகழ்ச்சியாகும்.

தண்ணீர்ப் பந்தல் இருக்கும் இடத்தில் இருந்து தேரடிக்குச் செல்ல ஆதித்த நாடார்கள் பல தலைமுறை காலமாய் உபயோகித்து வந்த பாதை வெங்கு முதலியார் சந்ததியாரால் இப்போது அடைக்கப்பட்டு, அது சம்பந்தமாய் கோர்ட்டில் வழக்கு நடைபெற்று வருகிறது. இந்தத் தண்ணீர் பந்தல் இருக்குமிடத்தைத் தலைமையிடமாகக் கொண்டுதான் பந்தல் மண்டப நிர்மாண வேலைகளை ஆதித்த நாடார்கள் அந்தக் காலத்தில் நடத்தினர்.

பிரதி தினமும் சுப்பிரமணியர் ஆலயத்தில் நடக்கும் அறுபத்து மூவர் அர்ச்சனை செலவுகளும் வேறு பலவும் ஆதித்த நாடார்கள் விட்டுக் கொடுத்த மான்யங்களிலிருந்து நடந்து வருகின்றன.

மேலக் கோபுர வாசல் வழியாகச் சென்று சுவாமி தரிசனம் செய்யும் உரிமை வெகு காலம் வரை ஆதித்த வமிசத்தினருக்கு இருந்தது. இந்த உரிமையும் வேறு பல உரிமைகளும் பிற்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியின்போது நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாக்களின் துவேஷம் பொறாமை காரணமாய் ஆதித்த நாடார்கள் இழக்க நேரிட்டது. திருச்செந்தூர் ஆலயத்தில் தங்களுக்கு உள்ள உரிமைகளை விரும்பிக் காப்பாற்றிக் கொள்ள பின் சந்ததியார்கள் சிரத்தை இல்லாது போனதும் அதற்கு ஒரு காரணமாகும். பந்தல் மண்டபத்தில் மகமை வசூலிக்கும் உரிமையை இழக்க நேரிட்டபோதும் அவர்கள் சிரத்தை அற்றவர்களாகவே நடந்துகொண்டனர்.

பாண்டிய நாட்டின் பல ஊர்களில் நாடார்கள் தங்கி வியாபாரம் செய்வதற்கு வசதியாக ஆங்காங்கு மகமைப் பேட்டைகள் ஏற்படுத்துவதற்கும் ஆதித்த நாடார்கள் உறு துணையாக இருந்தனர். தட்சணமாற நாடார் சங்கம்

ஸ்தாபித்த, பேட்டைகளின் நிர்வாகப் பொறுப்பை ஏற்கிற காலம் வரை அந்தப் பேட்டைகள் பலவற்றின் மேற்பார்வை ஆதித்த நாடார்கள் வசம் இருந்து வந்தது. பல பேட்டைகள் ஆதித்த நாடார்கள் பேரிலே இருந்து வந்தன.

மானவீர வளநாட்டின் வடபத்தில் ஆதித்த நாடார்கள் ஆட்சி செய்த காலத்தில் தென்பத்தின் பெரும் பகுதியில் குட்டம் மார்த்தாண்ட நாடார்கள் ஆதிக்கமுடையவர்களாக இருந்தனர். ஆதித்த நாடார்களுக்கு இருந்து வந்தது போல பரிவாரப்படைகளும் பல்லக்கு வரிசைகளும் அவர்களுக்கும் இருந்தன.

ஒரு சம காலத்தில் செல்வாக்குடன் வாழ்ந்த இவ்விரு வமிசத்தார்க்கிடையில்தான் ஆரம்பக் காலத்தில் சம்பந்த உறவுகள் இருந்தன.

கி.பி. 1780-ம் வருஷம் திசை காவல் வசூலிப்பதில் பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மனுடன் காயாமொழியில் அப்போது வாழ்ந்த சிவந்தி ஆதித்தனுக்கு மோதல் ஏற்பட்டபோது குட்டம் மார்த்தாண்ட நாடார்களுக்குத் தலைவனாக இருந்த அழகுவேல் மார்த்தாண்டன் படையுடன் வந்து உதவிய வரலாறு ஒன்று உண்டு. இந்த மோதலில் பிறகு சமாதானம் ஏற்பட்டு கட்டபொம்மனும் அவர்களும் பிறகு நண்பர்களாயினர்.

கி.பி. 15 ம் நூற்றாண்டு மத்தியில் ஆதித்த வர்மன் என்ற சேரநாட்டு இளவரசன் தென் பாண்டிய நாட்டில் படையெடுத்து திருச்செந்தூர் வரை வந்தபோது அவனுக்குப் படைத் தலைவர்களாய் த்தத்தம் படைகளுடன் வந்த ஆதித்த நாடனும் மார்த்தாண்ட நாடனும் மானவீர வளநாட்டில் நிலைகொண்டதாயும் அதற்குமுன் சேரநாட்டில் காயங்குளம், குட்டம் எனும் இடங்களில் அரசாண்டு கொண்டிருந்ததாயும் ஒரு வரலாறு கூறுகிறது.

சேர இளவரசன் திருச்செந்தூர்க் கோவிலில் பல கட்டளைகளை ஏற்படுத்தி, சுப்பிரமணிய சுவாமிக்குப் பூஜை செய்ய மலையாளப் போத்திமார்களை அர்ச்சகராக நியமித்து அந்தக் கட்டளைகளுக்கு ஆதித்த நாடனை அக்தாராக நியமித்துவிட்டு, பின்னர் தன்னாடு திரும்பியதாய் அந்த வரலாறு மேலும் கூறுகிறது.

கி.பி. 18-ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் வாழ்ந்த திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப்பட்ட குற்றாலக் குறவஞ்சி நூலில் காயாமொழி ஆதித்த நாடார்களைப் பற்றிச் சொல்லுமிடத்து 'காயங்குளத்தார்' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டிருப்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

ஆதியில் வமிச மூல புருஷனாகிய ஆதித்த நாடானுக்குப் பிறந்த புதல்வர்கள் இருவரில் சிவந்தி ஆதித்தன் (மூத்தவர்) தெற்கே வசித்ததால் அவருடைய சந்ததியார் தெற்கு வீட்டுக்காரர் என்றும் குமாரசாமி ஆதித்தன் (இளையவர்) வடக்கே வசித்ததால் அவருடைய சந்ததியார்கள் வடக்கு வீட்டுக்காரர் என்றும் அழைக்கப்படலாயினர்.

கி.பி. 1780-ல் வருஷத்திலும் அதற்கு மேலும் சிவந்தி ஆதித்தன் சந்ததியில் வாழ்ந்து வந்த இரண்டாம் சிவந்தி ஆதித்தனுக்கு சுந்தரகுமார் ஆதித்தன், தையல்பாகு ஆதித்தன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர்.

கி.பி. 1800-ல் வருஷத்திலும் அதற்கு மேலும் குமாரசாமி ஆதித்தன் சந்ததியில் பிறந்த சுப்பிரமணிய ஆதித்தனுக்கு ராமகிருஷ்ணமுத்து ஆதித்தன், ராமசாமி ஆதித்தன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர்.

இவர்கள் நால்வரும் கி.பி. 1820-ம் வருஷம் தங்கள் முன்னோர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பூமியை முதன் முதலாய் நான்கு சம பங்குகளாய் பாகம் பிரிந்துகொண்டனர்.

அதன் பிறகுச் சுந்தரக்குமார் ஆதித்தன் சந்ததியார் தெற்கு வீடு கீழவாசல்காரர் என்றும் தையல்பாகு ஆதித்தன் சந்ததியார் தெற்கு வீடு மேலவாசல்காரர்கள் என்றும் ராமகிருஷ்ண முத்து ஆதித்தன் சந்ததியார்கள் வடக்கு வீடு மேலவாசல்காரர் என்றும் ராமசாமி ஆதித்தன் சந்ததியார் வடக்கு வீடு கீழவாசல்காரர் என்றும் அழைக்கப்படலாயினர். அப்பால் குடும்பம் விருத்தியாக ஆக, பூர்வ ஆஸ்திகளைப் பல பாகங்களாக்கிக் கொண்டு தத்தம் பாகத்துக்குரிய தீர்வையைச் சர்க்காருக்குச் செலுத்திக் கொண்டு வாழ்ந்து வரலாயினர்.

கி.பி. 1885 -இல் திருச்செந்தூர் கோவில் மேற்கு வாசல் மண்டபப்படிக்குள் ஆதித்தர்கள் பிரவேசிக்காதபடி தடை செய்த போது நட்டாத்தி ஜமீன்தார் எட்டயபுரம் மன்னரால் தமக்கு அளிக்கப்பட்ட சிங்க முகக் குதிரை என்று அழைக்கப்பட்ட தமது பட்டத்துக் குதிரை மீது சவாரி செய்து

ஒரு படையுடன் சென்று அங்கு நிறுத்தப்பட்ட யானையையும் மறவர்களையும் விரட்டியடித்தார்.

'நட்டாத்தியர் வரலாறு' பக்கம் 75

மான வீர வளநாடு வடபத்தில் சோழர் குலத்தைச் சேர்ந்த ஆதித்தர்கள் அரசாண்டனர். நட்டாத்தியர்களும் ஆதித்தர்களும் ஒருவருக்கொருவர் போத்தி என்று முறை சொல்லிக்கொள்வது வழக்கம். பெருங்குளம் கல்வெட்டு ஒன்று ஒரு சோழ அதிகாரி ஆதித்தர்களைப் பற்றிக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

'நட்டாத்தியர் வரலாறு' பக்கம் 101

## துணை நூல்களும் கட்டுரைகளும்


1. ஆதித்த குல வரலாறு.
2. ஆதித்த திருமுக விலாசம்.
3. Athitha Nadars of Kayamozhi.
4. பாண்டிய தேச ஆதித்த வம்ச வரலாறு
   தா. மாசில்லாமணி நாடன்
   பாளையங்கோட்டை, 1930.
5. திருச்செந்தூர் வைகாசி விசாகம், 1922.
6. டாக்டர் ஆ. தசரதன், காயாமொழி
   முப்புராதி அம்மன் வரலாறும் வழிபாடும், 1997.
7. டாக்டர் ஆ. தசரதன், முப்புராதி அம்மன்
   கதைப்பாடல், 1995.
8. டாக்டர் ஆ. தசரதன், வலங்கைச் சான்றோரும்
   சோழரும், 1995.
9. டாக்டர் ஆ. தசரதன், வலங்கை மாலை, 1997.
10. டாக்டர் ஆ. தசரதன், பத்மநாப சுவாமி கதைப்பாடல், 1997
11. டாக்டர் ஆ. தசரதன், வலங்கை வாழ்த்து, 1984.
12. Sundaram Pillai
    Travancore Sovereign, Pioneer Book Services, 1987.
13. Sangunnai Menon, History of Travancore.
14. Nagamayya, Travancore State Manual, Part I
15. மோசஸ் பொன்னையா, நாடார் வரலாறு, மதுரை.
16. வையாபுரிப் பிள்ளை, அழகிய நம்பி உலா.
17. நெல்லை நெடுமாறன், வலங்கை உய்யக்கொண்டார்.
    1997.
18. Nellai Nedumaran
    "Sanror Avai", Journal of the Epigraphical Society of India, Vol. 22, 1996, pp. 41-45.

19. Nellai Nedumaran, "Kavadik Kasu", Paper presented at the VI th Annual Conference of the South Indian Numismatic Society, Mysore, 1996.

20. Nellai Nedumaran, "Valangai Uyyakkondar" Paper presented at the 23rd Annual Conference of the Epigraphical Society of India, 26th Mysore, 1996.

21. Nellai Nedumaran, "Sanar Kasu". (A New Interpretation) Paper presented at the VII the Annual Confrence of the South Indian Numismatic Society, Trissur, Kerala, 1st March, 1997.

22. Nellai Nedumaran,& S. Ramachandran, "Decline and Fall of Vellai Nadars." Paper presented at the XXIII Annual Conference of the Epigraphical Society of India, Tamil University, Thanjavur, 26-28 April, 1997.

★ ★ ★

# ஆதித்த வமிசாவழி

(கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.20-ஆம் நூற்றாண்டுவரை)

## ஆதித்த நாடன்

- சிவந்தி ஆதித்தன் (தெற்கு வீட்டு மூல புருஷன்)
  - சுப்பிரமணிய ஆதித்தன்
    - ஆதித்த நாடன்
      - மருதப்பன் என்ற பஞ்சாதித்தன்
        - திக்கெலாங்கட்டி ஆதித்தன்
          - ஆதித்த நாடன்
            - சுப்பிரமணிய ஆதித்தன்
              - சிவந்தி ஆதித்தன் கி.பி. 1780
                - சுந்தரகுமார் ஆதித்தன் (தெற்கு வீடு கீழவாசல்) கி.பி. 1780
                  - சிவந்தி ஆதித்தன் — I
                  - பார்வதி ஆதித்தன் — II
                  - பகவதி ஆதித்தன் — III
                - தையல்பாக ஆதித்தன் (தெற்கு வீடு மேலவாசல்) கிபி. 1782)
                  - ராமலிங்க ஆதித்தன் — IV
                  - அறுபத்து மூவர் ஆதித்தன் — V
          - புதுநயினார் ஆதித்தன்
    - திக்கெலாங்கட்டி ஆதித்த நாடன்
    - அறுபத்து மூவர் ஆதித்த நாடன்
    - தாயங்கொட்டை ஆதித்த நாடன்
    - ராமலிங்க ஆதித்த நாடன்
- குமாரசாமி ஆதித்தன் (வடக்கு வீட்டு மூல புருஷன்)
  - இராமசாமி ஆதித்தன்
    - சுப்பிரமணிய ஆதித்தன்
      - ரெற்றின பெருமாள் ஆதித்தன்
        - சுப்பிரமணிய ஆதித்தன்
          - குமாரசாமி ஆதித்தன்
            - சுப்பிரமணிய ஆதித்தன்
              - ராமகிருஷ்ண முத்து ஆதித்தன்
                - சுப்பிரமணிய ஆதித்தன்
                  - ராமகிருஷ்ண முத்து ஆதித்தன் (வடக்கு வீடு மேலவாசல்) கி.பி.1800 — VI
                  - ராமசாமி ஆதித்தன் (வடக்கு வீடு கீழவாசல்) கி.பி.1803 — VII
                - குமாரசாமி ஆதித்தன்
    - தீத்தாரப்ப ஆதித்தன்

தெற்கு வீடு கீழவாசல்
(சிவந்தி ஆதித்தன் வகையறா)




தெற்கு வீடு கிழவாசல்
(பார்வதி ஆதித்தன் வகையறா)
சுந்தரகுமார் ஆதித்தன்
சிவந்தி ஆதித்தன்
பார்வதி ஆதித்தன்
பகவதி ஆதித்தன்
பார்வதி ஆதித்தன்
துரை ராமசாமி ஆதித்தன்
பார்வதி ஆதித்தன்
சுந்தர குமார்ஆதித்தன்
பார்வதி ஆதித்தன் 1882
பார்வதி ஆதித்தன்
சிவசுந்தர பார்வதி ஆதித்தன்
சங்கர ராமசாமி ஆதித்தன் 1897
துரைராமசாமி ஆதித்தன் (1907 - 1983)
அபிராமசுந்தர ஆதித்தன் 1916 (பிரம்மச்சாரி)
துரைச்சாமி ஆதித்தன் 1930
சுந்தரகுமார் ஆதித்தன் BABL 1911
ராமச்சந்திர ஆதித்தன் BA 1913
ரகுபதி ஆதித்தன் B.A., 1917
சந்திரசேகர ஆதித்தன் 1924
ராமசாமி ஆதித்தன் 1927
பார்வதி ஆதித்தன்
பார்வதி ராஜகோபால் ஆதித்தன் (பிரம்மச்சாரி) 1938
ராகவ ரத்னசாமி ஆதித்தன் 1939
சந்திர மார்த்தாண்ட ஆதித்தன்
சங்கர ராமசாமி ஆதித்தன்
சிவசுந்தர பார்வதி ஆதித்தன்
ரவி ஆதித்தன் 1961
சுப்பிரமணிய ஆதித்தன் BABL 1946
பாலகிருஷ்ண ஆதித்தன் B.Com
ரவி ஆதித்தன் B.Com 1960
அசோக் ஆதித்தன்
சிவசுந்தர ஆதித்தன் B.A., (சிவராமன்) 1948
ஜவஹர் ஆதித்தன்
சங்கர ராமசாமி B.E. ஆதித்தன்
சிவசுப்பிரமணியன் M.B.A.
ஆதித்தன்
சுந்தர் ஆதித்தன்
சேகர் ஆதித்தன்
சங்கர் ஆதித்தன்
சிவபாலன் ஆதித்தன்
சுப்பிரமணியன் ஆதித்தன் 1978
ராமசாமி ஆதித்தன் 1981
மங்கேஷ்கார் ஆதித்தன்
அரவிந்தன் ஆதித்தன்
சுந்தரகுமார் ஆதித்தன் 1977
ராமசந்திரன் ஆதித்தன் 1984
ராம்குமார் ஆதித்தன் 1973
சதீஷ்குமார் ஆதித்தன் 1975
விஜயகுமார் ஆதித்தன் 1977
சிங் குமார் ஆதித்தன் 1979
செந்தில் குமார் ஆதித்தன்
அருண்குமார் ஆதித்தன்
விஜயகுமார் ஆதித்தன் 1977
அஜய்குமார் ஆதித்தன் 1981
சந்திரசேகர் ஆதித்தன்
குமார் ஆதித்தன்
விக்னேஷ்வர ஆதித்தன்

## தெற்குவீடு கீழவாசல்
## (பகவதி ஆதித்தன் வகையறா)



தெற்கு வீடு மேலவாசல்
(ராமலிங்க ஆதித்தன் வகையறா)



# தையல்பாக ஆதித்தன்

தெற்கு வீடு மேலவாசல்
(அறுபத்து மூவர் ஆதித்தன் வகையறா)



வடக்கு வீடு மேலவாசல்
(ராமகிருஷ்ண முத்து ஆதித்தன் வகையறா)



வடக்கு வீடு கீழவாசல்
(ராமசாமி ஆதித்தன் வகையறா)





முன் அட்டையில்

திருச்செந்தூர் தேரும்
தேர்வடம் தொட்டுக் கொடுத்தலும்

திருச்செந்தூர்க் கோயில் விசாகத் திருவிழா